விலை ரூபா: 15.00

*Registered as a Newspaper in Srilanka*

# வலம்புரி




பக்கங்கள்: பதின்னான்கு ———— Valampurii

சங்கு 10 வள்ளுவர் ஆண்டு 2040 ஐப்பசி 16 திங்கட்கிழமை (02.11.2009) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 318

# இலங்கை அரசை பாதுகாக்க தயாரான இந்திய இராணுவம்!

## ஒக்டோபர் 15ஆம் திகதி நள்ளிரவு நடந்தது என்ன?

(கொழும்பு)

கொழும்பில் கடந்த 15ஆம் திகதி நள்ளிரவு ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் ஆட்சி தூக்கி எறியப்படலாம் என்ற அச்சங்கள் ஏற்பட்டதை தொடர்ந்து இந்தியப் படையினர் நடவடிக்கைக்கு தயாரானதாகவும், இந்தியத் தூதுவர் ஜனாதிபதிக்கு துணையாக இருந்ததாகவும் சண்டே ரைம்ஸ் நாளிதழ் தகவல் வெளியிட்டுள்ளது.

அதன்முக்கிய பகுதிகள் வருமாறு, இலங்கையில் போர் நிறைவு பெற்றபோதும் உறுதித் தன்மை ஏற்படவில்லை, தமக்கு எதிராக பல நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதாக அரசு அஞ்சுகின்றது.


கடந்த 15ஆம் திகதி (வியாழக்கிழமை) நள்ளிரவு இந்திய தேசிய பாதுகாப்பு ஆலோசகர் எம்.கே.நாராயணனை திடீரென தொலைபேசியில் அழைத்த ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ, தமது அரசுக்கு ஆபத்து ஏற்பட்டுள்ளதாக அவசர அறிவித்தலை விடுத்திருந்தார்.

அதனைத் தொடர்ந்து நாராயணன் அந்தத் தகவல்களை காங்கிரஸ் தலைமை பீடத் துக்கும், இந்தியப்பிரதமர் மன்மோகன் சிங்கிற்கும் தெரியப்படுத்தி (14ஆம் பக்கம் பார்க்க)

# கோத்தபாயவுக்கு எதிராக சாட்சி கூற பொன்சேகாவிடம் அமெ. கோரிக்கை



## விசாரணை நடத்தவும் திட்டம்



(கொழும்பு)

பாதுகாப்பு செயலர் கோத்தபாய ராஜபக்ஷவுக்கு எதிரான மனித உரிமை மீறல் குற்றச் சாட்டுக்கள் குறித்து சாட்சியமளிக்கும்படி ஐக்கிய அமெரிக்க அதிகாரிகள் தன்னிடம் கோரியுள்ளதாக முன்னாள் இராணுவத் தளபதி ஜெனரல் சரத் பொன்சேகா வாஷிங்டனிலுள்ள இலங்கை தூதரகத்துக்கு எழுத்து மூலம் அறிவித்துள்ளார் என ராஜதந்திர வட்டாரங்களிலிருந்து கிடைத்த தகவல்கள் தெரிவிக்கின்றன. (14ஆம் பக்கம் பார்க்க)

## ஜி.எஸ்.பி.பிளஸ் வரிச்சலுகை மேலும் 8 மாதங்களுக்கு நீடிப்பு

(கொழும்பு)

இலங்கைக்கான ஜி.எஸ்.பி. வரிச்சலுகையை ஐரோப்பிய ஒன்றியம் மேலும் எட்டு மாதங்களுக்கு நீடித்துள்ளதாக கொழும்பு தகவல்கள் தெரிவித்துள்ளன.

இது தொடர்பில் அவை மேலும் தெரிவித்துள்ளதாவது, இலங்கைக்கான ஜி.எஸ்.பி. வரிச்சலுகையை (14ஆம் பக்கம் பார்க்க)

## இலங்கையின் உள்விவகாரங்களில் அமெ. தலையீடு செய்ய முடியாது

### ஜே.வி.பி.கூறுகிறது

(கொழும்பு)

இலங்கையின் உள்விவகாரங்களில் அமெரிக்கா தலையீடு செய்வதனை ஏற்றுக் கொள்ள முடியாது என ஜே.வி.பி. கட்சி சுட்டிக் காட்டியுள்ளது.

உள்விவகாரப் பிரச்சினைகளுக்கு உள்நாட்டிலேயே தீர்வுகளை எட்ட முடியும். இலங்கை விவகாரங்களில் (14ஆம் பக்கம் பார்க்க)

## வவு.நலன்புரி நிலையங்களிலிருந்து 2ஆயிரத்து 818 பேர் இன்று வருவர்

(யாழ்ப்பாணம்)

வவுனியா நலன்புரி முகாம்களில் தங்க வைக்கப்பட்டுள்ளவர்களில் யாழ்.மாவட்டத்தை சொந்த இடமாகக் கொண்ட 946 குடும்பங்களைச் சேர்ந்த 2ஆயிரத்து 818 பேர் இன்று அதிகாலை யாழ்ப்பாணத்திற்கு அழைத்து வரப்பட்டனர் என யாழ்.அரச அதிபர் க.கணேஷ் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கை

I _,kiMBV (14ஆம் பக்கம் பார்க்க)

## 'என்னை எவரும் கொலைசெய்யவில்லை' மைக்கெல் ஜக்ஷனின் ஆவி கூறியுள்ளது

(லண்டன்)

மருந்துகளுக்கு அடிமையானமைதான் தனது மரணத்திற்கு காரணம் என பிரபல பொப் பிசைப் பாடகர் மைக்கல் ஜக்சனின் ஆவி தெரி வித்த தாக பிரபல உளவியல் திறனாளியான ஜேன் வலஸ் நடத்திய ஆவியுடனான உரையாடல் நிகழ்ச்சியின் பின்னர் தெரிவித்துள்ளார்.

இந்நிகழ்வானது லண்டனில் கடந்த வெள்ளிக்கிழமை (14ஆம் பக்கம் பார்க்க)

## கப்பல் பயணத்துக்கான திகதிகள் அறிவிப்பு

(யாழ்ப்பாணம்)

காங்கேசன்துறையிலிருந்து பிரயாணிகள் கப்பல் ஊடாக பயணிப்பதற்காக நாளையும், 8,13,18,23 மற்றும் 28ஆம் திகதிகளிலும் பயணத்தை மேற்கொள்பவர்கள் அன்று காலை 7.00 மணிக்கு யாழ்.புகையிரத நிலையத்திற்கு சமுகம் அளிக்குமாறு அரச அதிபர் க.கணேஷ் அறிவித்துள்ளார்.

கப்பல், விமானம் மூலம் யாழ்.மாவட்டத்திற்கு பயணத்தை மேற்கொள்பவர்கள் அவ்வழியினூடாகவே யாழ்.மாவட்டத்தில் இருந்தும் பிரயாணங்களை மேற்கொள்ள முடியும் எனவும் அரச அதிபர் தெரிவித்தார். (சி)

## இந்தியா-இலங்கைக்கிடையில் விரைவில் உயர் மட்டப் பேச்சு

(சென்னை)

இந்தியாவுக்கும் இலங்கைக்கும் இடையில் இரண்டாவது உயர் மட்டப் பேச்சுக்கள் புதுடில்லியில் விரைவில் நடைபெறவுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இது தொடர்பில் மேலும் தெரியவருவதாவது, இந்தியாவுக்கும் இலங்கைக்கும் இடையில் இரண்டாவது உயர் மட்டப் பேச்சுக்கள் புதுடில்லியில் விரைவில் நடைபெறவுள்ளன.

இந்தப் பேச்சுக்களில் கலந்து கொள்வதற்காக ஜனாதிபதியின் செயலாளர் லலித் வீரதுங்க, பிரதம ஆலோசகர் பசில் ராஜபக்ஷ, பாதுகாப்புத்துறை செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ ஆகியோர் இந்தியாவுக்குச் செல்லவுள்ளனர்.

எதிர்வரும் இருவாரங்களில் சந்திப்பதற்கான நாள் தீர்மானிக்கப்படும் எனவும் பல தரப்பு விவகாரங்கள் தொடர்பாக இந்தக் குழு இந்தியத்தரப்புக்கு விளக்கமளிக்கும் என தெரிவிக்கப்படுகிறது.


இடம்பெயர்ந்த மக்களின் மீள் குடியேற்றம், தமிழ் மக்களுக்கான அரசியல் தீர்வு, இலங்கை அரசியல் மற்றும் (14ஆம் பக்கம் பார்க்க)

## உள்ளே...

தமிழகத்தின் பிரபல சோதிடர் சிவல்புரி சிங்காரம்

எழுதும் இராகு கேது மாற்றம் உங்களுக்கு எப்படி?

**நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்**



வண்ணார்பண்ணை சென். பீற்றர்ஸ் கில்னர் முன்பள்ளியின் வருடாந்த விளையாட்டு விழாவில், மாணவர்களின் பாண்ட் வாத்திய அணிவகுப்புடன் விருந்தினர்கள் அழைத்து வரப்படுவதையும் வெற்றி பெற்ற மாணவர்களுக்கு முன்பள்ளியின் அதிபர் திருமதி தங்கத்துரை பரிசில் வழங்குவதையும் படங்களில் காணலாம்.

# இலங்கை-இந். ஒப்பந்தத்தை ஏற்றிருந்தால் இன்றைய அவலநிலை ஏற்பட்டிருக்காது

## அமைச்சர் டக்ளஸ் தெரிவிப்பு



(யாழ்ப்பாணம்)

2004ஆம் ஆண்டில் நடைபெற்ற பொதுத் தேர்தலில் ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சிக்கு வாக்கு பலத்தை அதிகளவில் அளித்திருந்தால் அண்மையில் நிகழ்ந்த யுத்தத்தை வரவிடாது தம்மால் தடுத்திருக்க முடியுமென ஈ.பி.டி.பியின் செயலாளர் நாயகமும் சமூக சேவைகள் மற்றும் சமூக நலத்துறை அமைச்சருமான டக்ளஸ் தேவானந்தா தெரிவித்தார்.

வடமராட்சி, தொண்டமானாறு வீரகத்திப் பிள்ளை மகா வித்தியாலயத்தில் கிராம அபிவிருத்தி சங்கத் தலைவர் அருந்தவராஜா தலைமையில் நேற்று முன்தினம் பிற்பகல் நடைபெற்ற நிகழ்வில் உரையாற்றியபோதே அமைச்சர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் கூறுகையில்,

இலங்கை- இந்திய ஒப்பந்தத்தை ஏற்றுச் செயற்பட்டிருந்தால் தமிழ் பேசும் மக்கள் இத்தகைய பாரிய அழிவுகளை சந்திக்க வேண்டிய நிலை ஏற்பட்டிருக்காது. அந்த ஒப்பந்தத்தை சரியான முறையில் பயன்படுத்தியிருந்தால் நடைமுறையில் சுயநிர்ணய உரிமையை இன்று நாம் பெற்றிருக்கலாம். உயிரழிவுகளையும் சொத்திழப்புகளையும் தவிர்த்திருக்கலாம்.

தற்போதைய சூழ்நிலையில் நான் உட்பட பொதுமக்கள் அனைவரும் சுதந்திரமாக நடமாடுவதற்கும் உயிர் அச்சுறுத்தலின்றி வாழ்வதற்கும் வழிவகுத்த ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அவர்களுக்கு நன்றிதெரிவிக்கிறேன். புலித்தலைமையின் அச்சுறுத்தல் இல்லாமையால் தற்போது மக்களோடு மக்களாக கலந்து உறவாட முடிபதுடன் சுதந்திரமாக செயற்படக்கூடியதாகவும் உள்ளது.

தற்போது நடமாடும் சுதந்திரத்திலும் தொழில் செய்யும் சுதந்திரத்திலும் ஆங்காங்கே சில குறைபாடுகள் காணப்படுகின்றன. அவற்றையும் காலக்கிரமத்தில் நிவர்த்தி செய்ய முடியுமென தெரிவித்த அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தாம் வாக்குப்பலத்தை அளிக்குமாறு மக்களிடம் கேட்பது தமக்காகவல்ல என்றும் அது மக்களின் நலனுக்காகவே என்றும் தெரிவித்தார். (ச)

## புலமைப் பரிசில் பரீட்சை பெறுபேறுகளை பார்வையிடலாம்

இடம்பெயர்ந்தோர் நலன்புரி முகாம் களில் தங்கியிருந்த மாணவர்களின் தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சை பெறுபேறுகள் யாழ்ப்பாணம், வலிகாமம் வலயக் கல்வி அலுவலகங்களுக்கு கிடைக்கப் பெற்றுள்ள தாக யாழ். வலயக்கல்விப் பணிப்பாளர் திருமதி அ.வேதநாயகம் தெரிவித்தார்: எனவே இடம்பெயர்ந்தோர் நலன்புரி முகாம்களில் நடத்தப்பட்ட தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சைக்கு தோற்றிய மாணவர்கள் தமது பரீட்சை முடிவுகளை யாழ்ப்பாணம், வலி காமம் வலயக்கல்வி அலுவலகங்களில் பார்வை யிடலாம் என அவர் குறிப்பிட்டுள்ளார். (ச-5)

## யாழ். போதனா வைத்தியசாலையின் முழு அபிவிருத்திக்கு யப்பான் உதவி

(யாழ்ப்பாணம்)

யாழ்.போதனா வைத்தியசாலையின் அபிவிருத்தி பணிகளுக்கு முழுமையாக உதவி வழங்க யப்பான் தொண்டு நிறுவனமான ஜெய்கா முன்வந்துள்ளதாக யாழ். அரச அதிபர் க.கணேஷ் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்தத்தாவது,

யாழ். போதனா வைத்தியசாலையின் பல்வேறு அபிவிருத்தி பணிகள் தொடர்பில் ஜெய்கா நிறுவனத்திடம் வைத்தியசாலை நிர்வாகம் கோரிக்கைகளை முன்வைத்திருந்தது.

இந்நிலையில் யாழ். போதனா வைத்தியசாலையின் அபிவிருத்தி பணிகளுக்கு முழுமையான நிதியுதவி வழங்கப்படுமென ஜெய்கா நிறுவனம் அறிவித்துள்ளது.

இதில் யாழ். போதனா வைத்தியசாலையில் முகப்புத்தோற்றம் சிறப்பான முறையில் அமைத்துக் கொடுக்கப்படுமெனவும் அந் நிறுவனம் தெரிவித்துள்ளதாகவும் யாழ். அரச அதிபர் க.கணேஷ் குறிப்பிட்டார் (ச-5)

# வீதியால் சென்ற இளைஞன் மீது நேற்று இரவு வாள் வெட்டு!

## மோ. சைக்கிளில் சென்றோர் அட்டகாசம்

கோண்டாவில் வடக்கில் நேற்றிரவு இடம்பெற்ற வாள் வெட்டுச் சம்பவத்தில் இளைஞன் ஒருவர் படுகாயமடைந்த நிலையில் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இச் சம்பவத்தில் கோண்டாவில் வடக்கைச் சேர்ந்த ந.ரதீபன் (வயது 19) என்ற இளைஞனே காயமடைந்தவராவார். இது தொடர்பில் தெரிய வருவதாவது,

ஸ்கூட்டிப்பெப் மோட்டார் சைக்கிளில் சென்று மூவர் வீதியில் வந்து கொண்டிருந்த இளைஞனை வழிமறித்து வாளால் வெட்டி விட்டுத் தப்பிச் சென்றுள்ளார். அங்கிருந்து சென்ற அக்கும்பல் கோண்டாவில் சிவகாமி அம்மன் ஆலயப்பகுதியில் வந்து கொண்டிருந்த வான் ஒன்றின் மீது தாக்குதல் நடத்தி விட்டு சென்றுள்ளது. இதில் வாகனத்தைச் செலுத்தி வந்த க.முத்துலிங்கம் என்பவரும் காயமடைந்தார்.

மோட்டார் சைக்கிளில் வெளிச்சமின்றி வந்தே இத்தாக்குதலை மேற்கொண்டுள்ள தாக நேரில் கண்டவர்கள் தெரிவித்தனர். (ச-14)

# வடக்கின் வசந்தம் மீளாய்வுக் கூட்டம் நவ. 5ஆம் திகதி யாழ். செயலகத்தில்

வடக்கின் வசந்தம் 180 நாள் வேலைத் திட்டத்தின் மீளாய்வுக் கூட்டம் எதிர்வரும் 5 ஆம் திகதி வியாழக்கிழமை காலை 10 மணிக்கு யாழ்.செயலக கேட்போர் கூடத்தில் சமூக சேவைகள் மற்றும் சமூக நலத்துறை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா மற்றும் வடக்கு மாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜி.ஏ.சந்திரசிறி தலைமையில் நடைபெறவுள்ளது.

இம்மீளாய்வுக் கூட்டத்தில் யாழ்.மாவட்டத்தில் வடக்கின் வசந்தம் வேலைத்திட்டத்தில் மேற்கொள்ளப்பட்டுவரும் பணிகளின் தற்போதைய நிலை தொடர்பில் ஆராயப்படுமென யாழ். அரச அதிபர் க.கணேஷ் தெரிவித்தார்.

இதில் யாழ். மாவட்ட அரச திணைக்களத் தலைவர்கள் பங்கு பற்றி தமது திணைக்களத் தினால் மேற்கொள்ளப் பட்டுவரும் அபிவிருத்தித் திட்டங்களின் நிலைமை தொடர்பில் விளக்கமளிப்பர் எனவும் அவர் குறிப்பிட்டார். (ச-5)


**EXTERNAL DEGREE COLLEGE**

யாழ்.,பேராதனை பல்கலைக் கழகம்

G.A.Q, B.A( Part I), B.A (Final)

CBF, DBF, AAT

Tamil:S.சுரேஸ் B.A Hons(Tamil Spl) Hin.Cul:S.S.சிறி B.A (பிரபல ஆசிரியர்)

Geography:S.சஞ்சீவ் B.A Hons(Geo.Spl) Drama:சிவரூபன் B.A Hons(Drama Spl)

Philosophy:S.சிவா B.A Hons(Philo. Spl) Commerce:S.காமினி B.Com

History:S.ஜெயக்குமார் B.A Hons(His. Spl) Economics:N.தயாபரன் B.A

Pol.Science:S.புவனதாஸ் B.A (Dip.in Pol.Sc)

English:R.மகேஸ்வரன் HNDE

தொடர்பு :077-9235567, 077-2230544

ஆரம்பம் :சனி 9.00 AM(07.11.2009)

இல.07,பலாலி வீதி,யாழ்ப்பாணம்

(அப்பலோ வைத்தியசாலை அருகாமை)

(3874)


## 5ஆம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சை

# நலன்புரி முகாம்களில் இருந்து தோற்றிய இரு மாணவர்கள் முதலிடம் பெற்றனர்

(வவுனியார்)

வவுனியா இடைத்தங்கல் முகாம்களில் இருந்து தரம் ஐந்து புலமைப்பரிசில் பரீட்சைக்குத் தோற்றிய இரண்டு மாணவர்கள் 175 புள்ளிகளைப் பெற்று தமது மாவட்டத்தில் முதல் நிலையைப் பெற்றுள்ளார்கள்.

கிளிநொச்சி மகாவித்தியாலயத்தைச் சேர்ந்த பத்மசிறி கீர்த்திகன், முல்லைத்தீவு புதுக்குடியிருப்பு றோமன் கத்தோலிக்கப் பாடசாலையைச் சேர்ந்த செலசிறின் சதுர்ஷயா ஆகிய இரண்டு மாணவர்களுமே இவ்வாறு மாவட்ட மட்டத்தில் முதல் நிலையைப் பெற்றுள்ளார்கள்.

இதேவேளை முகாம்களில் இருந்து தரம் ஐந்து புலமைப் பரிசில் பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்களின் பரீட்சை வெட்டுப் புள்ளி 111 புள்ளிகளாக நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது என அறிவிக்கப்பட்டுள்ளது. வவுனியா இடைத்தங்கல் முகாம்களில் இருந்து தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சைக்கு தோற்றிய மாணவர்களில் 507பேர் சித்தியடைந்துள்ளதாகப் பரீட்சைகள் திணைக்களம் அறிவித்துள்ளது.

இந்த வருடம் நடைபெற்ற தரம் ஐந்து புலமைப் பரிசில் பரீட்சைக்கு வவுனியா மெனிக்பாம் இடைத்தங்கல் முகாம் தொகுதி உட்பட ஏனைய இடங்களில் பாடசாலைக ளில் அமைக்கப்பட்டுள்ள முகாம்கள், புல்மோட்டை, யாழ்ப்பாணம் ஆகிய இடங்களில் உள்ள முகாம்கள் என்பவற்றிலிருந்து ஐயாயிரத்து 400 இற்கும் மேற்பட்ட மாணவர்கள் தோற்றியிருந்தார்கள் என்பது குறிப்பிடத் தக்க்து. (ச-5)

# பதவி உயர்வு பெற்ற அதிபர்களுக்கான பயிற்சிப் பட்டறை ஒத்திவைப்பு

(கொழும்பு)

இலங்கை அதிபர் சேவை வகுப்பு I இலிருந்து கல்வி நிர்வாக சேவை தரம் III இற்கு மூப்பின் அடிப்படையில் பதவியுயர்வு பெற்றவர்களுக்கு எதிர்வரும் 3, 4ஆம் திகதிகளில் கல்வி அமைச்சில் நடைபெறவிருந்த பயிற்சிப் பட்டறை தவிர்க்க முடியாத காரணத்தினால் ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

இத்தகவலை கல்வி அமைச்சின் கல்விச் சேவை மேலதிக செயலாளர் எஸ்.முகமெட்தம்பி தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

இலங்கை அதிபர் சேவை வகுப்பு I இலிருந்து இலங்கை கல்வி நிர்வாக சேவை தரம் III இற்கு மூப்பின் அடிப்படையில் நியமனம் பெற்றவர்களுக்கு எதிர்வரும் 3,4ஆம் திகதிகளில் கல்வி அமைச்சில் கல்விச் சேவை அபிவிருத்திப் பிரிவில் பயிற்சிப்பட்டறை நடைபெறவிருந்தது.

எனினும் தவிர்க்க முடியாத காரணமாக மேற்படி பயிற்சிப்பட்டறை ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

இப் பயிற்சிப்பட்டறை நடைபெறும் திகதிகள் தொடர்பில் உரியவர்களுக்கு பின்னர் அறிவிக்கப்படுமென கல்வி அமைச்சின் கல்வி சேவை மேலதிக செயலாளர் எஸ்.முகமட்தம்பி தெரிவித்தார். (ச-5)





காரைநகர் பிரதேச முன்பள்ளிகளின் கலைவிழா அண்மையில் காரைநகர் சைவ மகா சபை கட்டடத்தில் நடைபெற்றது. இந் நிகழ்வில் சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்ட திருமுருகன் கொம்நெற் உரிமையாளர் எல்.கலாதரன் மங்கல விளக்கேற்றுவதையும் யாழ்ற்ரன் கல்லூரி அதிபர் ந.பரமசிவன் உரையாற்றுவதையும் மாணவர்களின் கலை நிகழ்வுகளையும் படங்களில் காணலாம்.

# நாட்டில் மனித நேயம் மரணித்து விட்டதோ என்ற சந்தேகம் ஏற்படுகிறது

## பிரதியமைச்சர் இராதாகிருஷ்ணன்

(கொழும்பு)

கொடூர யுத்தத்தினால் பாதிக்கப்பட்டு இன்னும் அதிலிருந்து மீள முடியாமல் தவித்துக்கொண்டிருக்கும் தமிழ் மக்களுக்கு இத்தருணத்தில் தொடர்ந்து நடைபெறும் சில சம்பவங்கள் இந்நாட்டிலே மனித நேயம் மரணித்துவிட்டதோ? என்ற சந்தேகத்தை ஏற்படுத்துகின்றது.

அண்மையில் மலையக யுவதிகள் இருவர் கொழும்பில் மர்மமான முறையில் மரணமான சம்பவமும் அத்துடன் வெள்ளவத்தையில் அப்பாவி இளைஞர் ஒருவர் அடித்துக் கொலை செய்யப்பட்டுள்ள சம்பவமும் எதை ஞாபகப்படுத்துகிறது என்றால் சுனாமிப் பேரலையின் போது உயிருக்காகப் போராடிக் கொண்டிருந்த ஒரு பெண்ணின் கழுத்துச் சங்கிலியை அபகரித்துக் கொண்டு அவளை மீண்டும் தண்ணீருக்குள் தள்ளி கொலை செய்த அந்தபாதகமான செயலை மீண்டும் நினைவு படுத்துகிறது என பிரதியமைச்சர் பெ. இராதாகிருஷ்ணன் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

அடித்துக் கொல்லப்பட்ட இளைஞர் மலையகத்தை பிறப்பிடமாகக் கொண்டவரும் மற்றும் மனநிலை பாதிக்கப்பட்டவர் என்றும் நாம் அறிகின்றோம். அத்துடன் இந்தப் பாதகமான காரியத்தை செய்தவர் ஒருபொலிஸ் உத்தியோகத்தர் என்பதையும் அறிகின்றோம். அநீதியும் அக்கிரமும் நடக்கும் பொழுது அதிலிருந்து பாதிக்கப்படும் பொதுமக்களை பாதுகாக்க வேண்டிய பொலிஸ்காரர்களே அந்த அக்கிரமத்தில் ஈடுபடுவதை எந்த ஒரு குடிமகனாலும் ஏற்றுக்கொள்ளமுடியாது.

பாதிக்கப்பட்டவர் தமிழராக இருக்கலாம் அல்லது எந்த மதத்தைச் சார்ந்தவராகவும் இருக்கலாம். பொலிஸ்காரர்களுக்கென்று ஒரு கடமை இருக்கிறது. சமூகத்தில் குற்றவாளியாக காணப்படுபவர்களையும் கைது செய்யும் உரிமை உண்டு. குறிப் பாக மனநிலை பாதிக்கப்பட்ட ஒருவரால் ஒரு தவறு இழைக்கும்போது தந்திரமான முறையில் செயல்பட்டு அவரைக் கைது செய்து சட்ட நடவடிக்கை எடுத்திருக்கலாம்.

அதைவிடுத்து அவரைத் துரத்தி கடலில் தள்ளி விட்டு பொல்லுகளால் தாக்கிக் கொலை செய்வதானதும் அதையே ஒரு பொலிஸ்காரர் செய்வதானதும் கண்டிக்கத்தக்கதும் அனைவரும் வெட்கப்பட வேண்டிய விடயமுமாகும்.


ஆகவே இதை வெறுமனே விசாரணை என்ற பெயரில் காலதாமதம் செய்யாமல் பாதிக்கப்பட்ட குடும்பத்தாருக்கு ஒரு நியாயம் கிடைக்க வழி வகுப்பதோடு குற்றச் செயலில் ஈடுபட்டவர்களுக்கு அதியுயர் தண்டனை வழங்குவதோடு இனி மேல் இவ்வாறான சம்பவங்கள் நடைபெறாமல் பாதுகாக்க உரிய நடவடிக்கை எடுக்கவேண்டும் எனவும் அவ்வறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (6)

ஐ.நா.பாதுகாப்பு சபையில்

# நிரந்தரமற்ற உறுப்புரிமைக்கு போட்டியிடும் காலம் வந்துவிட்டது

## அமைச்சர் சமரசிங்க

(கொழும்பு)



ஐக்கிய நாடுகள் சபையின் பாதுகாப்பு சபையில் நிரந்தரமற்ற உறுப்புரிமை இலங்கை பெறுவதற்கான காலம் வந்துவிட்டது. நிரந்தரமற்ற உறுப்புரிமை பெற போட்டியிடுவதற்கு நாம் .தயாராகி விட்டோம். எனவே இதற்கான இராஜதந்திர ரீதியான நடவடிக்கைகளை அரசாங்கம் எதிர்காலத்தில் எடுக்கும் என்று மனித உரிமைகள் மற்றும் இடர்முகாமைத்துவ அமைச்சர் மஹிந்த் சமரசிங்க தெரிவித்தார்.

ஐக்கிய நாடுகள் சபை இலங்கை விவகாரம் தொடர்பில் அவ்வப்போது முரண்பட்ட கருத்துக்களைத் தெரிவிக்கின்றமை தொடர்பில் கருத்து வெளியிடுகையிலேயே அமைச்சர் சமரசிங்க மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

ஐக்கிய நாடுகள் சபையின் பாதுகாப்பு சபையில் ஐந்து நாடுகள் நிரந்தர உறுப்புரிமையைக் கொண்டவையாகவும் 10 நாடுகள் இரண்டு வருடகால தற்காலிக உறுப்புரிமையைக் கொண்டவையாகவும் உள்ளன. ரஷ்யா, பிரான்ஸ், சீனா,பிரிட்டன் மற்றும் அமெரிக்கா ஆகிய ஐந்து நாடுகள் நிரந்தர உறுப்புரிமையை கொண்டுள்ளன. நிரந்தரமற்ற உறுப்புரிமையை பெறுவதற்கு ஐ.நா.வின் ஏனைய அங்கத்துவ நாடுகள் சுழற்சி முறையில் போட்டியிட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

இந்நிலையில் அமைச்சர் மஹிந்த சமரசிங்க இவ்விடயம் தொடர்பில் தொடர்ந்து கருத்து வெளியிடுகையில் கூறியதாவது, ஐக்கிய நாடுகள் சபையின் பாதுகாப்பு பேரவையில் நிரந்தரமற்ற உறுப்புரிமையைப் பெறுவதற்கு இலங்கை அரசாங்கம் போட்டியிட வேண்டிய காலம் வந்துவிட்டது. இனியும் நாம் தாமதித்துக்கொண்டிருக்கக்கூடாது.

இதற்கான இராஜதந்திர நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். இவ்விடயத்தில் உலக நாடுகள் இலங்கைக்கு ஆதரவளிக்கும் என்று நம்பு கின்றோம். போட்டியிடும் பட்சத்தில் உறுப்புரி மையை பெறலாம் என்ற நம் பிக்கை எனக்கு இருக்கின்றது.

இதுதொடர்பில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கு நான் எதிர்காலத்தில் சில பரிந்துரைகளை செய்யவிருக்கின்றேன் என்றார்.(6)

# இடைக்கால கணக்கறிக்கையை ஆளும் கட்சியால் இலகுவில் நிறைவேற்றிக் கொள்ள முடியும்

## அமைச்சர் ரஞ்சித் சியம்பலாப்பிட்டிய

(கொழும்பு)

நாடாளுமன்றில் சமர்ப்பிக்கப்படவுள்ள இடைக்காலக் கணக்கறிக்கையை ஆளும் கட்சியால் இலகுவில் நிறைவேற்றிக் கொள்ள முடியும் என பிரதிநிதி அமைச்சர் ரஞ்சித் சியம்பலாப்பிட்டிய தெரிவித்துள்ளார்.

எதிர்க்கட்சிகள் எவ்வாறான சவால்களை முன்வைத்தாலும் அவற்றிற்கு முகம் கொடுப்பதற்கான பலம் அரசாங்கத்திடம் காணப்படுவதாக அவர் குறிப்பிட்டுள்ளார். (6-14)

# யுத்தம் நடைபெற்ற பிரதேசங்களில் தடயங்கள் மீட்கப்படலாம் என்ற அச்சத்தில்தான் சர்வதேச நிறுவனங்களுக்கு அனுமதி மறுப்பு

## சுரேஷ் பிரேமச்சந்திரன் எம்.பி.தெரிவிப்பு

(கொழும்பு)

கிளிநொச்சியிலும் முல்லைத்தீவிலும் கண்ணிவெடிகள் அகற்றப்படுவதாக அரசாங்கத்தினால் தெரிவிக்கப்படும் தகவல் பொய்யானதென தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சுரேஸ் பிரேமச்சந்திரன் தகவல் தருகையில்,

இந்தத் தகவல் அடிப்படையற்ற பொய் எனக் குறிப்பிட்டார். இந்தப் பிரதேசங்களில் ஏற்கனவே கண்ணிவெடிகள் அகற்றப்பட்டுள் ளன.

எனவே தான் அரசாங்கம், வெளி நாடுகளை குறிப்பாக இந்தியாவையும் கண்ணிவெடியகற்றல் நடவடிக்கைகளுக்கு அனுமதிக்க மறுக்கிறது என சுரேஸ்பிரேமச்சந்திரன் தெரிவித்துள்ளார்.

வன்னியில் இறுதிக் கட்ட யுத்தம் நடைபெற்றபோது, பலர் இந்தப் பிரதேசங்களில் கொல்லப்பட்டதாக தகவல்கள் வெளியாகியிருந்தன.

இந்த நிலையில், அதன் தடயங்கள் கண்டுபிடிக்கப்படலாம் என்ற அச்சத்தினால் தான், அரசாங்கம், சர்வதேச நிறுவனங்களை இந்தப் பிரதேசத்திற்குள் அனுமதிக்க மறுக்கிறது என அவர் சுட்டிக்காட்டினார்.

எனினும் பாதுகாப்பு பேச்சாளர் கெஹலிய ரம்புக்வெல, கண்ணிவெடிகளை ஓரிரு மாதங்களில் அகற்றிவிட முடியாது எனக் குறிப்பிட்டுள்ளார்.



எவ்வித அடிப்படை வசதிகளும் இன்றி மக்களை குறித்த பிரதேசங்களில் மீள்குடியேற்ற முடியாது. அப்படிகுடியேற்றினால் மீண்டும் அவர்கள் ஆயுதங்களை எந்த வாய்ப்புகள் உள்ளதாகவும் ஹெகலிய ரம்புக்வெல தெரிவித்துள்ளார். (6)

# ஜனாதிபதியின் இணைப்பாளராக ரவிசங்கர சிவாச்சாரியார் நியமனம்

(கொழும்பு)

கொழும்பு கிராண்ட்பாஸ் அருள்மிகு ஸ்ரீ ஞானபைரவர் தேவஸ்தான பிரதம குருவும் ஆதீனகர்த்தாவுமாகிய தேசபந்து சிவஸ்ரீ பால. ரவிசங்கர சிவாச்சாரியார் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் இந்து மத கலாசார விவகார இணைப்பாளராக நியமிக்கப்பட்டுள்ளார்.

சர்வதேச இந்து மதபீடம் மற்றும் கிராண்ட்பாஸ் ஸ்ரீ ஐயப்பன் சேவா பீடம், சமாதான நீதவான்களின் மனித உரிமைகள் அமைப்பு என்பவற்றில் மிக முக்கிய பத்விகள் வகிக்கும் சிவாச்சாரியாருக்கு சமய, சமூக சேவைகளின் பொருட்டு பல விருதுகள் கிடைக்கப் பெற்றுள்ளதுடன் பல நாடுகளுக்கும சமய, சமூக நல்லிணக்க விஜயங்கள் மேற்கொண்டுள்ளமை குறிப்பிடத்கக்து. (6)

கொக்குவில் நந்தாவில் கற்புலத்து மனோன்மணி அம்பாள் ஆலயத்தில் அண்மையில் நடைபெற்ற சூரசங்கார நிகழ்வுகளின் காட்சிகளைப் படங்களில் காணலாம்.

## சைவ சித்தாந்த பாலபண்டிதர் தேர்வு

(யாழ்ப்பாணம்)

சைவபரிபாலன சபையினால் நடத்தப்படும் சைவசித்தாந்த பிரவேச, பால, பண்டிதர் தேர்வு எதிர்வரும் மார்கழி மாதம் 4,5,6 ஆம் திகதிகளில் நடைபெறும் என தேர்வுச் செயலாளர் இரா.செல்வவடிவேல் தெரிவித்துள்ளார். (6-4)

## தாச்சி சுற்றுப்போட்டி

(யாழ்ப்பாணம்)

யாழ்.இலங்கை வங்கி; வர்த்தக வங்கி ஆகியவற்றின் ஆதரவுடன் யாழ்.மாவட்ட தாச்சி விளையாட்டுக் கழகம் நடத்தும் தாச்சிச் சுற்றுப்போட்டியில் நாளை செவ்வாய்க்கிழமை முற்பகல் 4.30 மணிக்கு உடுவில் வைகறை விளையாட்டுக் கழகம், எதிர் தாவடி காளி அம்பாள் விளையாட்டுக் கழகமும் நாளை மறுதினம் புதன்கிழமை இணுவில் அண்ணா விளையாட்டுக்கழகம் எதிர் மானிப்பாய் பெஸ்வுறம் விளையாட்டுக் கழகமும் மோதவுள்ளன. (6-4)

## கூடைப்பந்தாட்ட சுற்றுப்போட்டி

(யாழ்ப்பாணம்)

யூனியன் அஸ்யூரன்ஸ் அனுசரணையுடன் யாழ்.சென்றலைற்ஸ் விளையாட்டுக் கழகம் நடத்தும் அழைக்கப்பட்ட கழகங்களுக்கிடையிலான அமரர் விபுலாநந்தன் ஞாபகார்த்த கூடைப்பந்தாட்ட சுற்றுப்போட்டி இன்று திங்கட்கிழமை காலை 8 மணிக்கு யாழ்.மத்திய கல்லூரியிலுள்ள கூடைப்பந்தாட்ட திடலில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். மத்திய கல்லூரி அதிபர் L.ஓங்காரமூர்த்தி கலந்து சிறப்பிக்கவுள்ளார்.

இன்று இரவு 7 மணிக்கு இறுதிப் போட்டி நடைபெற்று பரிசளிப்பு நிகழ்வும் இடம் பெறவுள்ளது. (6-4)




## பருத்தித்துறை வேலாயுதம் மகாவித்தியாலயத்தின் புதிய கட்டடம் திறந்து வைப்பு

பருத்தித்துறை வேலாயுதம் மகாவித்தியாலய மாணவர்களின் கல்வி மேம்பாட்டைக் கருதிற் கொண்டு நான்கு பிரதான கற்றல் துறைகளை உள்ளடக்கிய புதிய பாடசாலைக் கட்டமொன்று கட்டப்பட்டுள்ளது என்றும் இது இப்பகுதி மாணவர்களின் கல்வி மேம்பாட்டிற்கான சிறந்த அடித்தளமாக அமையுமென்றும் சமூக சேவைகள் மற்றும் சமூக நலத்துறை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்தார்.

நூலகம், இரசாயன ஆய்வுகூடம், பௌதிகவியல் ஆய்வுகூடம் மற்றும் கணனி கூடம் ஆகியவற்றை உள்ளடக்கிய மேற்படி புதிய கட்டடத்தை திறந்து வைக்கும் நிகழ்வில் பிரதம அதிதியாகக் கலந்துகொண்ட அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தொடர்ந்து உரை நிகழ்த்துகையில், பல்வேறு வசதிகளைக் கொண்ட இப் புதிய கட்டடம் நிர்மாணிக்கப்பட்டிருப்பது மாணவர்களின் எதிர்கால கல்வியை திறம்பட முன்னெடுப்பதற்கு வாய்ப்பாக அமையுமென்றும் இத்தகைய வாய்ப்புகள் கிடைக்கும்போது அதனை சரியாகப் பயன்படுத்திக்கொள்ளவேண்டுமென்றும் தெரிவித்தார். (6)

## கீரிமலை நகுலேஸ்வரர், மாவிட்டபுரம் கந்தசுவாமி ஆலயங்களை மீள செயற்பட வைக்க கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

வரலாற்றுப் புகழ்பெற்ற கீரிமலை நகுலேஸ்வரர் ஆலயத்தை மீள செயற்பட வைப்பது தொடர்பிலும் கீரிமலைப் பகுதியில் மக்களை மீள்குடியேற்றம் செய்வது தொடர்பிலும் மாவிட்டபுர கந்தசுவாமி ஆலயத்தை புனரமைப்புச் செய்து மீள செயற்பட வைப்பது தொடர்பிலும் கோரிக்கைகளை முன்வைத்து கீரிமலை நகுலேஸ்வரர் ஆலய பிரதம குருவும் ஆதீன கர்த்தாவுமான கே.நகுலேஸ்வரக் குருக்கள், கு.உமாசங்கரசர்மா மற்றும் மாவிட்டபுர கந்தசுவாமி ஆலய பிரதமகுருவும் ஆதீன கர்த்தூவுமாகிய மகாராஜஸ்ரீ சு.து. சண்முகநாதக்குருக்கள், இரட்ணசபாபதிக் குருக்கள் ஆகியோர் சமூக சேவைகள் மற்றும் சமூக நலத்துறை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவை நேற்று முன்தினம் அமைச்சரின் யாழ்.அலுவலகத்தில் சந்தித்துக் கலந்துரையாடினர்.

மேற்படி சந்திப்பின்போது கீரிமலை ஆலயத்தை பாதுகாப்புப் படையினரிடமிருந்து பெற்று ஆலயத்தைப் புனரமைப்புச் செய்து அப்பகுதியை அபிவிருத்தி செய்து தருமாறும் அப்பகுதியில் இருந்து இடம்பெயர்ந்துள்ள மக்களை மீளக்குடியமர்த்த நடவடிக்கை எடுத்து உதவுமாறும் கீரிமலை ஆலயப் பிரதம குரு அமைச்சரிடம் கேட்டுக்கொண்டார்.

அதேநேரம் ம்ாவிட்டபுர கந்தசுவாமி ஆலயத்தை புனரமைப்புச் செய்து மீள தொடர்ந்து செயற்பட வைப்பதற்கு நடவடிக்கை எடுத்து உதவுமாறும் மேற்படி இரு ஆலயங்களுக்கும் பக்தர்கள் சுதந்திரமாகவும், வாகனங்களிலும் வந்துபோகக் கூடிய வசதியை ஏற்படுத்தித் தருமாறும் கோரிக்கை விடுத்தனர்.

மேற்படி கோரிக்கைகளை ஏற்றுக் கொண்ட அமைச்சர் இவ்வாலயங்களின் அடுத்து வருகின்ற திருவிழாக்களுக்கு முன்பதாக இக் கோரிக்கைகளை நிறைவேற்றுவதற்கான நடவடிக்கைகளை பாதுகாப்புத் தரப்பினருடனும் ஏனைய உரிய தரப்பினருடனும் கலந்துரையாடி மேற்கொள்வதாகத் தெரிவித்தார். (6)

## வீதி புனரமைக்க கோரிக்கை

(பொன்னாலை)

தொல்புரம் தபால்பெட்டி வீதி கடந்த 40 வருடங்களாக புனரமைப்புச் செய்யப்படாதிருந்து வருகின்றது.

பாரிய கற்களும் குழிகளாகக் காணப்படும் இவ் வீதியால் பொதுமக்கள் போக்குவரத்துச் செய்ய முடியாதிருப்பதாக கவலை தெரிவிக்கின்றனர்.

தினமும் நூற்றுக்கணக்கான மக்கள் போக்குவரத்துச் செய்யும் இவ் வீதியைப் புனரமைத்துத் தருவதற்கு சம்பந்தப்பட்டவர்கள் முன்வர வேண்டும் என்று அப்பகுதி மக்கள் கோரிக்கை விடுகின்றனர். (6-49)

## பாடசாலை சுற்றுமதில் அமைத்துத்தர கோரிக்கை

(பொன்னாலை)

பொன்னாலை வரதராஜப் பெருமாள் வித்தியாசாலைக்கு சுற்றுமதில் வேலி ஒன்றை அமைத்துத் தர நடவடிக்கை எடுக்குமாறு அப்பகுதி பெற்றோரும் பாடசாலைச் சமூகத்தினரும் கூட்டாகக் கோரிக்கை விடுக்கின்றனர்.

அரச, அரசசார்பற்ற நிறுவனங்கள் மூலம் பல பாடசாலைகள் புனரமைக்கப்பட்டும் புனரமைப்புச் செய்யப்பட்டும் வரும் நிலையிலேயே இந்த அவசர கோரிக்கை விடுக்கப்படுகின்றது.

வலி.மேற்கில் பின்தங்கிய பாடசாலைகளில் ஒன்றாக விளங்கும் மேற்படி பாடசாலை, காலத்தின் கட்டாயம் கருதி புனரமைப்புச் செய்யப்படுமாயின் பெரிதும் நன்மை பயப்பதாக அமையும் என்றும் அவர்கள் சுட்டிக் காட்டுகின்றனர். (6-49)

## இலவச கணனிப்பயிற்சி

(யாழ்ப்பாணம்)

கரித்தாஸ் - கியூடெக் நிறுவனம், இலங்கை தொழிற்பயிற்சி அதிகாரசபையுடன் இணைந்து கச்சாய், கெற்பலி, நாவற்காடு, வரணி இயற்றாலை ஆகிய பிரதேசங்களிலுள்ள மாதர் கிராம அபிவிருத்தி சங்கத்தைச் சேர்ந்த இளைஞர் யுவதிகளுக்கு இலவச கணனிப் பயிற்சி நெறியை நடத்தவுள்ளது.

இதில் மென்பொருள் பயிற்சிநெறிக்கு 25பேரும் வன்பொருள் பயிற்சி நெறிக்கு 20பேரும் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

அத்துடன் கச்சாய், கெற்பலி மாதர் கிராம அபிவிருத்திச் சங்கத்தைச் சேர்ந்த 20பேர் தையல் பயிற்சிநெறிக்குத் தெரிவு செய் யப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (6)

## விளையாட்டுக் கழகத்திற்கான புதிய அலுவலகம்

(யாழ்ப்பாணம்)

நான்கு நண்பர்கள் இணைந்து ஆரம்பித்த Four Star power Gym விளையாட்டுக் கழகத்திற்கான புதிய அலுவலகமொன்றை சமூகசேவைகள் மற்றும் சமூக நலத்துறை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா நேற்றுமுன்தினம் திறந்துவைத்தார்.

சிறந்த வீரர்கள் மற்றும் வீராங்கனைகளை உருவாக்கும் நோக்கில் சிறந்த பயிற்சிகளை வழங்குவதற்கென அமைக்கப்பட்டுள்ள இப்புதிய அலுவலக திறப்பு விழாவில் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினரான மு.சந்திரகுமார், பலாலி ஆசிரிய பயிற்சிக் கலாசாலை அதிபர் இக்நேசியஸ், யாழ்.மாவட்ட விளையாட்டுத்துறை அதிகாரி மோகனதாஸ், நெடுந்தீவு கோட்டக் கல்விப் பணிப்பாளர் அரசரட்ணம் ஆகியோர் கலந்துகொண்டனர். (6)

## கைதடி முதியோர் இல்லத்திற்கு உதவிப் பொருட்கள் கையளிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ். கைதடி முதியோர் இல்லத்திற்குத் தேவையான சாப்பாட்டு அறைக்குரிய மேசைகள், கதிரைகள் மற்றும் அங்குள்ள மக்களின் பாவனைக்குரிய நுளம்பு வலைகள் என்பனவற்றை சமூகசேவைகள் மற்றும் சமூக நலத்துறை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா வழங்கினார்.

சமூகசேவைகள் மற்றும் சமூக நலத் துறை அமைச்சின் மூலம் வழங்கப்பட்டுள்ள மேற்படி பொருட்களை சாந்திநிலைய நிர்வாகிகளிடம் ஒப்படைத்து உரை நிகழ்த்திய அமைச்சர், இங்குள்ளவர்கள் தங்களது வாழ்க்கையின் முதுமைப் பருவத்தை மிகவும் சந்தோஷத்துடனும் நிம்மதியுடனும் கழிக்கவேண்டும் என்று கேட்டுக்கொண்டதுடன் அதற்குத் தேவையான வசதிகளை தனது அமைச்சின் மூலம் ஏற்படுத்திக் கொடுக்க இயலும் என்றும் தான் இதன் பின்னர் அடிக்கடி இந்நிலையத்திற்கு வருகைதந்து இங்குள்ள மக்களின் குறைபாடுகள் மற்றும் தேவைகள் தொடர்பில் அறிந்து அதற்கிணங்க செயற்பாடுகளை மேற்கொள்ள இருப்பதாகவும் தெரிவித்துள்ளார். (6)

## தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சை முடிபுகள்

(யாழ்ப்பாணம்)

**கச்சாய் அரசினர் தமிழ்க்கலவன் வித்தியாலயம்**

சி.லோகிதன்-166, சி.மிதிலன்-151, ஜெ. சுதாகர் -141, கு.மதுஷா-141.

**கொடிகாமம் திருநாவுக்கரசு மகா வித்தியாலயம்**

உ.சுலக்ஷன் -166, லோ.கபில்சன்-154, த.அபிதன்-152.

**அல்லாரை அரசினர் தமிழ் வித்தியாலயம்**

க.பத்மயன்-141

**கைதடி கலைவாணி வித்தியாலயம்**

ஐ.அஜந்தா-150

**கைதடி குருசாமி வித்தியாலயம்**

செ.தமிழினி -147

**நுணாவில் கிழக்கு அமிர்தாம்பிகை வித்தியாலயம்**

ஹ.ஹரிணி-163, சு.காயத்ரி ஹறிற்றா-156

**கைதடி முத்துக்குமாரசுவாமி மகா வித்தியாலயம்**

சி.கல்கிராம்-164, க.அபிகிருஷ்ணா-148, பா.சுலக்ஷனா-148, பா.அபிநயா-145, கோ. பானுஜன்-144, ப.மயிந்த ரூபன்-142. (6-4)

# விஜய நகரப் பேரரசு

## கொழும்புத் தமிழ்ச் சங்கத்தில் நடந்த ஆய்வரங்கச் சிறப்புரைகள் - 2009

41

எனவே, பிரபுக்கள் ஜக்கராயன் என்பவன் தலைமையில் கூடி வேங்கடனையே அரசனாக்குவது என்று முடிவு செய்தார்கள். அவனும் அவர்கள் எதிர்பார்த்ததற்கு மேலாகவே திறமையாக ஆட்சிபுரிந்தான். அவன் 1585.86 இல் தன்னுடைய முடிசூட்டு விழாவை நடத்தினான். அவன் ஆட்சி செய்த இருபத்தெட்டு ஆண்டு காலத்தில் பேரரசின் வலமும் வளமும் புத்துயிர் பெற்றன. விஜயநகரத்துக்குத் தீராத தொல்லையாயிருந்த தட்சிண முஸ்லிம்களுடைய படையெடுப்புகளைத் தன் படை வலிமையால் சமாளித்தான் ; உள்நாட்டுக் கலகங்களை அடக்கி அமைதியை நிலைநாட்டினான் ; நாட்டின் பொருளாதார வளத்தைப் பெருக்கினான்.

சீரங்கன் காலத்தில் கோல்கொண்டா அரசன் கைப்பற்றிக் கொண்ட ஊர்களை மீட்கும் பணியில் வேங்கடன் முதலில் தன் கவனத்தைச் செலுத்தினான். கோல் கொண்டா அரசன் இப்ராஹிம் 1580 ஆம் ஆண்டில் இறந்துபோன பிறகு அவனுடைய மகன் முகமது குலி குதுப்ஷா பட்டத்துக்கு வந்தான். வேங்கடன் குலி குதுப்ஷாவுக்கு எதிராகக் கிளர்ச்சி செய்யுமாறு கொண்டவீட்டுப் பகுதியில் இருந்த மக்களைத் தூண்டிவிட்டான். எதிர் நடவடிக்கையில் ஈடுபட்ட குலி குதுப்ஷா, கர்நூல் மாவட்டம் முழுவதையும் கடப்பை அனந்தப்பூர் மாவட்டங்களின் சில பகுதிகளையும் கைப்பற்றிக்கொண்டு பெனுகொண்டாவையும் முற்றுகையிட்டான்.

அப்போது வேங்டன் குலியுடன் சமாதானப் பேச்சைத் தொடங்கினான். தான் பெற்ற வெற்றிகளால் மன நிறைவடைந்த குலி பெனுகொண்டாவின் அண்மையிலிருந்த பகுதியினின்று திரும்பிப் போய்விட்டான். போரில் இவ்வாறு கிடைத்த தளவு நேரத்தை வேங்கடன் நன்றாகப் பயன்படுத்திக் கொண்டான்.

நீண்ட முற்றுகையைச் சமாளிப்பதற்கு ஏற்றவாறு பெனுகொண்டாவை ஆயத்தம் செய்து கொண்டபின், வேங்கடன் மீண்டும் முஸ்லிம்களை எதிர்த்தான். மீண்டும் பெனுகொண்டாவை முற்றுகையிட்டபோது குலி தன் பிழையை உணர்ந்தான். அவனை வேங்கடன் தோல்வியுறச் செய்தான். அப்போது மழை தொடங்கிவிட்டதால், கிருஷ்ணா நதியில் வெள்ளம் வந்து, தான் திரும்பிப் போவதற்குரிய வழியை அடைத்துவிடக்கூடும் என்பதை உணர்ந்த குலி, தான் புதிதாக வென்ற பகுதிகளை நிர்வாகம் செய்வதற்குரிய சில ஏற்பாடுகளை அவசரமாகச் செய்துவிட்டுத் திரும்பிப் போய்விட்டான்.

வேங்கடன் விரைவிலேயே குத்தியைக் கைப்பற்றிக் கொண்டு கண்டிக்கோட்டையை முற்றுகையிட்டான். அந்த முற்றுகையை விலக்குவதற்காகக் கொண்ட வீட்டிலிருந்து வந்த ஒரு படையை வேங்கடன் வழிமறித்துத் தோல்வியுறச் செய்து சிதறியோடப் பண்ணினான். இன்னொரு கோல்கொண்டா படை ருஸ்தம்கான் என்பவனுடைய தலைமையில் வந்தது.

அதனை வேங்கடன் பெண்ணையாற்றின் கரையில் வழிமறித்துத் தாக்கித் தோல்வியடையச் செய்து சின்னாபின்னமாக்கினான். கண்டிக் கோட்டை வீழ்ந்தது. அதன் பின் வேங்கடன் வேறு பல கோட்டைகளையும் கைப்பற்றிக் கொண்டு கோல்கொண்டாப் படைகளைக் கிருஷ்ணா நதிக்கப்பால் விரட்டியடித்தான்.

பின்னர் குலி கிருஷ்ணா நதியையே விஜயநகர ராஜ்யத்தின் எல்லையாக ஏற்றுக் கொண்டான். இன்னும் கிழக்கேயிருந்த உதயகிரியும் 1589 ஆம் ஆண்டுக்குள் வேங்கடனுடைய ஆட்சிக்குள் வந்தது. ஆனால், கொண்டவீட்டுப் பகுதி இன்னும் கோல்கொண்டாவின் ஆட்சியிலேயே இருந்தது. உள்நாட்டில் உண்டான குழப்பம் கோல்கொண்டா மீது செல்ல முடியாமல் வேங்கடனைத் தடுத்தது.

வேங்டன் அரசனான பின்னரும் பிரபுக்கள் தமக்குள் சச்சரவிட்டுக் கொண்டது மட்டுமன்றி அவ்வப்போது வேங்கடனையும் எதிர்த்துக் கலகம் செய்தார்கள். அவர்களை அடக்குவதில் வேங்கடனுடைய நேரமும் ஆற்றலும் விரயமாயின. எடுத்துக்காட்டாக தம்மைய கவுடன் கோலாரில் கலகஞ்செய்தான். அவனை வேங்கடன் விரைவில் அடக்கி அவனிடம் திறையும் வசூல் செய்தான். ஆனால் அதை விடப் பெரிய கலகமொன்று இப்போது கொடை மாவட்டங்கள் என வழங்கும் ராயலசீமையில் ஏற்பட்டது. அங்கே நந்தல கிருஸ்ணமராயனும் இன்னுஞ் சில பிரபுக்களும் சேர்ந்து 1597 -98 இல் வேங் கடனை எதிர்த்தார்கள். வேங்கடன் கிருஸ்ண மராயனை ஜம்புலமடகு என்னுமிடத்தில் தோல்வியுறச் செய்தான். அதன்பின் கிருஷ்ணமராயன் நந்தல (நந்தியால்) கோட்டையில் ஒளிந்துகொண்டான். வேங்கடன் அந்தக் கோட்டையை முற்றுகையிட்டான். முற்றுகை மூன்று மாதம் நீடித்த பின் கிருஷ்ணமராயன் வேங்கடனுக்குப் பணிந்தான் அவனை வேங் கடன் சந்திரகிரிச் சிறையிலடைத்துவிட்டான்.

கிருஷ்ணமராயன் சாகும் வரையிலும் சிறையிலேயே இருந்தான். ராமராயனுடைய சகோதரனான வேங்கடபதியின் பேரன் , கண்டனவோலு கோபால ராஜு என்பவனும் இன்னும் சில பிரபுக்களும் செய்த கலகத்தைத் தன்னிடம் உண்மையாக நடந்து கொண்ட தளபதிகளின் உதவியோடு வேங்கடன் அடக்கினான்.

பின்னர் கலகக்காரர் களின் உடைமைகளை எடுத்துத் தனக்கு உதவிசெய்த தளபதிகளுக்கு வழங்கினான். தமிழகத்திலும் வேங்கடனுக்கு எதிராகக் கலகங்கள் தோன்றின. வேலூரிலிருந்த லிங்கமநாயக்கன் அந்தக் கலகங் களுக்குத் தலைமை தாங்கினான். பெரும்பேட்டுச் சீமை (செங்கல்பட்டு, மதுராந்தகம்) 'அமரத்தை' (ராணுவ மானியத்தை) வேங்கடன் வெலுகோட்டி கஸ்தூரி ரங்கப்ப னுடைய மகன் யாச்சம நாயுடு என்பவனுக்குக் கொடுத்தான். லிங்கமனுடைய வலிமையைக் குறைப்பதற்கு அவன் உதவுவான் என்று வேங்கடன் எதிர்பார்த்தான்.

லிங்கமநாயக்கனுக்கு அடங்கிய நாகன் என்பவனுடைய ஆட்சியிலிருந்த முக்கியமான ராணுவ நிலையமான உத்தரமேரூரை யாச்சம நாயுடு கைப்பற்றிக் கொண்டான். அப்போது லிங்கமநாயக்கன் தன்னுடைய கட்டுப்பாட்டிலிருந்த கோட்டைத் தலைவர்களை மட்டுமன்றி செஞ்சி, தஞ்சாவூர், மதுரை ஆகிய இடங்களிலிருந்த நாயக்கர்களையும் தன்னுடைய துணைக்கு அழைத்தான்.

பேராசிரியர்
**க.அ.நீலகண்டசாஸ்திரிகள்**

மறுமலர்ச்சி பெற்றுகொண்டிருந்த பேரரசின் வலிமையைக் குறைப்பதற்கு அவர்களும் ஆர்வமாகவே இருந்தார்கள். அவர்கள் எல்லோரும் சேர்ந்து ஒருபெரும் படையைத் திரட்டி, நாகனுடைய மைத்துனனான தாவுல பாப்ப நாயுடு என்பவன் தலைமையில் 1601 ஆம் ஆண்டில் உத்தரமேரூர் மீது செலுத்தினார்கள். ஆனால், யாச்சமன் அஞ்சவில்லை. தன்னுடைய தம்பி சிங்கனுடைய துணையோடு அவன் தன்னைத் தாக்க வந்த படையை எதிர்த்தான். பின்னர் நடந்த சண்டையில் பாப்பன் உயிரிழந்தான்.

ஏனையோருள் பலர் களத்திலிருந்து ஓடிவிட்டனர். மற்றவர்கள் சிறைப்பட்டார்கள். இவ்வாறு தன் முயற்சியில் முழு வெற்றியடைந்த யாச்சமனை வேங்கடன் பெரிதும் பாராட்டினான். ஆனால் லிங்கமனும் அவனுடைய கூட்டாளிகளும் தங்களுடைய முயற்சியைக் கைவிடவில்லை. (தொடரும்)

---

# இலங்கையின் இரகசியப் பொலிஸ் பிரிவில் பாரிய முறைகேடுகள்

## அதிகாரிகள் பலர் இடமாற்றம்

இலங்கையின் குற்றப்புலனாய்வுத் திணைக்கள அதிகாரிகள், 10 ஆயிரம் ரூபாவுக்காக கூடப் பாரிய குற்றங்களை மறைத்து குற்றவாளிகளை காப்பாற்றுவதாக தகவல்கள் வெளியாகியுள்ளன. அதேநேரம் இரகசியத்துக்குரிய, தகவல் களை வெளியிடுவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தநிலையில், இவ்வாறான ஊழல் மிக்க அதிகாரிகளை, அரசாங்கம் வன்னி மாங்குளத்திற்கு இடமாற்றியுள்ளது. 18 பேர் இவ்வாறு மாற்றப்பட்டுள்ளனர். மேலும் 22 பேர் இடமாற்றத்திற்கு உள்ளாக்கப்படவுள்ளனர். இதுவே இலங்கையின் வரலாற்றில் அதிகளவான 44 இரகசியப் பொலிஸார் இடமாற்றம் பெறும் சந்தர்ப்பம் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இதற்குப் பதிலாக, புதியவர்களும் சேர்க்கப்பட்டுள்ளார்கள். எனினும் புதிதாக சேர்க்கப்பட்ட அனைவரும், பொலிஸ் சேவைக்கு புதியவர்கள், என்ற வகையில் அவர்களின் சேவை எந்தளவுக்கு சாதகமாக இருக்கும் என்ற சந்தேகம் எழுந்துள்ளது.

இரகசியப் பொலிஸாரின் ஊழல்கள் தொடர்பாக, ஜனாதிபதிக்கு அவருடைய நண்பர் ஒருவர் தெரிவித்ததை அடுத்தே அவர்களுக்கு எதிரான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஜனாதிபதியின் நண்பர் ஒருவரிடம், இரகசியப் பொலிஸ் அதிகாரிகள் சிலர், முறைப்பாடு ஒன்றிற்கான விசாரணையை விரைவில் முடிப்பதற்காக பல்லாயிரம் ரூபாவை லஞ்சமாக கோரியுள்ளனர்.

இதனையடுத்தே அவர், ஜனாதிபதியிடம் இதனை முறையிட்டுள்ளார். தற்போது இரகசியப் பொலிஸ் பிரிவில், 520 பேர் கடமையாற்றுகின்றனர். இந்த நிலையில் பலர் விரைவில் விலக்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (6)

# மீள்குடியேற்றத்தை விஸ்தரிக்கும் பொருட்டு மாந்தையில் கண்ணிவெடி அகற்றும் பணிகள்

மன்னாரின் மாந்தை மேற்குப் பிரதேசத்தில் கண்ணிவெடி அகற்றும் பணிகள் தொடர்ந்தும் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

மன்னார் மாந்தை மேற்கு உதவி அரசாங்க அதிபர் பிரிவில் மேற்கொள்ளப்பட்டு வரும் மீள்குடியேற்ற நடவடிக்கைகளை மேலும் விஸ்தரிக்கும் பொருட்டு அப்பகுதிகளில் மீண்டும் கண்ணிவெடிகள் அகற்றும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டிருக்கின்றன.

மாந்தை மேற்குப் பகுதியில் கடந்த மாதம் இறுதிப்பகுதிக்குள் சுமார் இரண்டாயிரத்து 300 இற்கும் அதிகமான குடும்பங்களைச் சேர்ந்த பத்தாயிரம் பேரை மீள்குடியேற்றுவதற்கு உத்தேசிக்கப்பட்டிருந்தது.

இந்நிலையில் முதற்கட்டமாக மாந்தை மேற்குப் பிரதேசத்தில் கண்ணிவெடிகள் அகற்றப்பட்ட எட்டுப்பகுதிகளில் மீள்குடியேற்ற நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டிருப்பதாகத் தெரியவருகின்றது.

மீள்குடியேற்ற நடவடிக்கைகளை துரிதப்படுத்தும் பொருட்டு அப் பிரதேசங்களில் மேலும் பல இடங்களில் கண்ணிவெடிகள் அகற்றும் பணிகளை முன்னெடுப்பதற்காக கண்ணிவெடிகளை அகற்றும் குழுக்கள் மன்னாரிலிருந்து நாளாந்தம் சென்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (6)

# புகலிடம் கோருவோர் தங்கியுள்ள முகாம்களை விஸ்தரிக்க அவுஸ்.திட்டம்


கிறிஸ்மஸ் தீவில் உள்ள புகலிடத்தஞ்சம் கோருவோரின் முகாமின் அளவை விஸ்தரிக்க அவுஸ்திரேலியா அரசு திட்டமிட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. இது தொடர்பில் அவுஸ்திரேலியா அரசு தெரிவித்துள்ளதாவது,

கிறிஸ்மஸ் தீவில் உள்ள புகலிட தஞ்சம் கோருவோரின் முகாம்கள் விஸ்தரிக்கப்படவுள்ளது. அங்கு தற்போது ஆயிரத்து 200 பேர் தங்கும் வசதிகள் உள்ளது. அதனை 2ஆயிரமாக அதிகரிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

புகலிட தஞ்சம்கோருவோரின் எண்ணிக்கைகள் அதிகரித்துள்ளதைத் தொடர்ந்தே இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது. இலங்கையில் இருந்து அதிக எண்ணிக்கையான மக்கள் அவுஸ்திரேலியாவுக்கு தஞ்சம் கோரி வருகின்றனர்.

இதுமேலும் அதிகரிக்கும் என நாம் எதிர்பார்க்கிறோம் எனத் தெரிவித்துள்ளது.

எனினும் அவுஸ்திரேலியாவின் குடிவரவுக் கொள்கை தவறானது என அவுஸ்திரேலியாவின் எதிர்க்கட்சி தெரிவித்துள்ளது. கடந்த வருடத்துடன் ஒப்பிடும் போது இந்த வருடம் புகலிட தஞ்சம் கோருவோரின் எண்ணிக்கை பத்து மடங்காக அதிகரித்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (6)




பன்னாலை சேர் கனகசபை வித்தியாலயத்தின் ஆசிரியர் தின விழாவில் தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த சி.பகிர்ராஜுக்கு பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட J/224 கிராமசேவை அலுவலர் திருமதி மாலாதேவி மதிவதனா பரிசில் வழங்கிக் கௌரவிப்பதையும், அருகில் வித்தியாலய அதிபர் சி.சிவராஜன் மற்றும் ஆசிரியர்களையும் படத்தில் காணலாம்.





513 ஆவது படையணியின் ஏற்பாட்டில் கவில்பொலிமேர்ஸ் பிறைவேட் லிமிடெட் நிறுவனத்தால் தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களைக் கௌரவிக்கும் நிகழ்வு அண்மையில் நடத்தப்பட்டது. இந்நிகழ்வில் யாழ்ப்பாணக் கல்லூரி துணைமுதல்வர் திருமதி இந்திராணி ஜெயக்குமாரன் உரையாற்றுவதையும், கவில்பொலிமேர்ஸ் நிறுவன முகாமைத்துவப் பணிப்பாளர் யுடெனிநாகநண்டலா தேசிய மட்டத்தில் தமிழ்மொழி மூலப் பரீட்சையில் முதலிடம் பெற்ற மாணவன் லோ.ஸ்ரீகர்சனுக்கு பரிசில் வழங்கிக் கௌரவிப்பதையும், சித்திபெற்ற ஏனைய மாணவர்களையும், விருந்தினர்களையும் படங்களில் காணலாம். (படங்கள்:கோபி)

# மனித உரிமை மீறல்கள் தொடர்பில் பொன்சேகாவிடம் விசாரணை நடத்தப்படலாம்?



(கொழும்பு)

அமெரிக்காவிற்கு விஜயம் செய்துள்ள முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகாவிடம் மனித உரிமை மீறல் சம்பவங்கள் தொடர்பில் விசாரணைகள் நடத்தப்படக்கூடிய சாத்தியம் இருப்பதாக தகவல் வெளியாகியுள்ளன. அமெரிக்க உள் விவாகரத் திணைக்களத்தினருக்கும், இலங்கையின் முன்னாள் இராணுவத் தளபதிக்கும் இடையில் சந்திப்பு நடைபெறவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

அமெரிக்க கிறீன்காா்ட் உரிமையாளரான சரத்பொன்சேகாவிடம் விசாரணை நடத்தப்பட வேண்டுமென அந்நாட்டு உள்விவகாரத் திணைக்களம் அறிவித்துள்ளது.

இதன்படி, நாளை மறுதினம் புதன்கிழமை சரத் பொன்சேகாவுடன் விசேட சந்திப்பொன்று நடைபெறவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

கிறீன்காா்ட் சலுகையை நீடித்துக்கொள்ளும் நோக்கில் சரத் பொன்சேகாவும், அவரது பாரியார் அனோமாவும் தற்போது அமெரிக்கா சென்றுள்ளனர்.

மனித உரிமை மீறல்கள் இடம்பெற்றிருந்தால் அமெரிக்க உள்விவகாரத் திணைக்களம் சட்ட நடவடிக்கை எடுக்கக்கூடும் என தெரிவிக்கப்படுகிறது.

கிறீன்காா்ட் உரிமையாளர்கள் மற்றும் அமெரிக்க பிரஜைகள் அந்நாட்டு சட்டத் திணைக்களங்களின் கேள்விகளுக்கு பதிலளிக்க வேண்டிய கடப்பாடுடையவர்கள் என சுட்டிக்காட்டப்படுகிறது.

இதன்படி, அமெரிக்க உள்விவகாரத் திணைக்களம் நடத்தும் விசாரணைகளுக்கு சரத்பொன்சேகாவும் கட்டுப்படவேண்டியவர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

வெள்ளைக் கொடியுடன் சரணடைய முயற்சித்த விடுதலைப்புலி உறுப்பினர்கள் மீதுதாக்குதல் நடத்தியதாக ஜெனரல் சரத் பொன்சேகா கடந்த ஜூலை மாதம் 18 ஆம் திகதி அம்பலாங்கொடையில் நடைபெற்ற விழாவொன்றில் குறிப்பிட்டுள்ளதாக அமெரிக்க காங்கிரஸிற்கு சமா்ப்பிக்கப்பட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (6)

# நகர அபிவிருத்தி என்பது எமது மக்களுக்கும் கிடைக்க வேண்டும்

**யாழ்.மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சொலமன் சூ.சிறில் அண்மையில் பாராளுமன்றத்தில் ஆற்றிய உரை கீழே தரப்படுகிறது.**

சபாநாயகர் அவர்களே இன்றைய சபை விவாதத்தில்

நகர அபிவிருத்தி புனிதநாகர் பகுதிகள் அபிவிருத்தி, தேசத்தைக் கட்டிஎழுப்புதல், நீர் வழங்கல் வடிகால் அமைப்பு, நெடுஞ் சாலைகள் அபிவிருத்தி என்னும் அமைச்சுக்களின் குறைநிரப்பு பிரேரணைகள் விவாதத்திற்கு எடுத்துக்கொள்ளப்பட்டுள்ள வேளையில் இந்த நான்கு அமைச்சுக்களும் மக்களின் நாளாந்த வாழ்வுடன் பின்னிப் பிணைக்கப்பட்டுள்ளது. குறிப்பாக இந்த அமைச்சுக்களின் சேவையும் தேவையும் எமது மக்களுக்கு "யுத்த பிரதேசங்கள்" என்ற காரணங்களினால் கவனிக்கப்படாதிருந்தாலும் யுத்தத்திற்கு முன்பும் இதே நிலைதான் இருந்திருக்கின்றது என்பதை இந்த வேளையில் சுட்டிக்காட்ட விரும்புகின்றேன்.


யுத்தத்தினால் வாழ்வின் அனைத்தையும் இழந்து உள்ளக இடம்பெயர்வுக்கு ஆளாகி முகாம்களில் அவலவாழ்வு வாழ்ந்தாலும் எங்களுக்கு கைகள் உண்டு. கால்கள் உண்டு உழைத்துவாழ்வோம் என்ற உறுதியுடன் உணர்வுடன் உள்ள எம் மக்களுக்கு நிம்மதியான விடிவு கிடைக்கும் வரை அபிவிருத்தி பற்றி பேசுவதில் எமக்கு மன நிறைவு கிடைக்கப்போவதில்லை. இருந்தாலும் சில பல விடயங்களை சுட்டிக்காட்ட வேண்டிய தேவை கடமை எம்மிடையே இருக்கிறது.

இலங்கையில் அதிகரித்து வருகின்ற சனத்தொகைக்கு ஏற்ப சுகாதார வசதிகளுடன் போக்குவரத்துப்பாதை, குடிநீருடன் கூடிய குடியிருப்புக்களை அமைத்துக் கொள்வதில் மக்கள் பெரும் சிரமங்களை நாளாந்தம் எதிர்நோக்கி வருகின்றனர். பல்வேறு ஆரோக்கிய பிரச்சினைகளுக்கு முகம்கொடுத்து வருகின்றனர்.

இதேவேளை பெரும்பாலான மக்கள் தங்கள் வாழ்க்கைத் தரத்தை உயர்த்திக் கொள்ளும் நோக்குடனும், கல்வி, வேலை வாய்ப்புக்களை பெருக்கும் வகையிலும், இடம்பெயர்வாலும் பாதுகாப்பு அச்சுறுத்தல் போன்ற காரணங்களினாலும் கிராமங்களில் இருந்து நகரங் களுக்கு குடியேறுவதாலும் நகரங்களில் பெரும் நெருக்கடிக்கள் அதிகரித்துள்ளன. அத் துடன் நகரமே சேரிகளால் நிரம்பி நரகமாக மாறி வருவதைக் காணமுடிகிறது. இது பெரும்பாலும் வட பகுதியையும் வட பகுதி மக்களையும் பெரும்பாதிப்புக்களுக்கும் ஆபத்துக்களுக்கும் உள்ளாக்கி வருகிறது.

குடாநாட்டை பொறுத்தமட்டில் யாழ்ப்பாணத்தில் ஒருபுறம் குடியிருப்புக்களை அமைத்துக்கொள்வதில் பாரியதோர் பிரச்சினைகளுக்கு முகம்கொடுத்துள்ள நிலையில், மறுபுறம் சொந்த குடிமனைகளையும் இழந்து தொடர்ந்தும் அகதிகளாகவே எம் மக்கள் இருக்கிறார்கள். இவர்கள் பற்றி எவரும் கவனம் கொள்வதாகத் தெரியவில்லை. குறிப்பாக தீவகம், வலிகாமம் வடமேற்கு மக்களே அதிக பாதிப்புக்களுக்கு உள்ளாகி கடந்த இருபது வருடங்களாக உறவினர் வீடுகளிலும் முகாம்களிலும் தங்கியுள்ளார்கள்.

நகர அபிவிருத்தியின் நோக்கம் என்ன? குடிமக்களின் வாழ்க்கைக்கு ஏற்ற சிறந்த வாழ்விடங்களை அமைத்துக்கொடுத்தல், நகரங்களில்வேலை வாய்ப்பு மற்றும் பொருளாதார ஸ்திரத்தன்மை போன்றவற்றை ஏற்படுத்தி, சிறந்த முறையில் திட்டமிட்டு இடம்சார் வேறுபாடுகளை நீக்கி சம வளர்ச்சி எட்டுவதையும் இலக்காகக் கொண்டுள்ளது. இவை எமது மக்களுக்கும் கிடைக்கவேண்டும். அழிந்து போன எமது நகரங்கள் ஆக்கம் காணவேண்டும்.



பயங்கரவாதத்தின் பிடியிலிருந்து நாட்டை முழுமையாக விடுவித்திருப்பதாக சர்வதேச மயப்படுத்தப்பட்டு வரும் பிரச்சாரங்கள் மத்தியில் மடுப்பிரதேசத்தின் மீதான பார்வை சுதந்திரமான மத வழிபாட்டிற்கு இதுவரையும் வழிவகுத்துக் கொடுத்ததாக தெரியவில்லை. மடுத்திருத்தலமும் அதனைச் சூழவுள்ள புனிதபிரதேசமும் முழுமையாக விடுவிக்கப்பட்டு ஒரு வருடங்களுக்கு மேலான போதும் அப்பகுதிகளின் வழிபாட்டிற் காக மக்கள் நாளாந்தம் சுதந் திரமாக சென்று திரும்புவதற்கான அனுமதி இதுவரை வழங்கப்படவில்லை.

விடுவிக்கப்பட்ட பகுதிகளில் சிவில் நிர்வாகத்தை ஏற்படு வதாகக் கூறிய அரசு மக்களை மீள்குடியேற் றாது அப்பகுதியில் காவல் நிலையங்களை திறந்து வைத்துள்ளனர். மக்களின் நிம்மதியான சுதந்திரமான புனிதத் தன்மை நிறைந்த நாளாந்த வழிபாட்டிற்கு அனுமதி வழங்க வேண்டுமென நகர அபிவிருத்தி புனிதநகர் அபிவிருத்தி அமைச்சர் அவர்களை கேட்டுக் கொள்கின்றேன். (தொடரும்)

### எதிர்க்கட்சிக் கூட்டமைப்பின்
# ஒப்பந்தத்தில் கைச்சாத்திடுவது குறித்து முஸ்லிம் காங்கிரஸ் ஆராய்வு

(கொழும்பு)

எதிர்க்கட்சி கூட்டமைப்பின் கொள்கை விளக்கத்தில் சில விடயங்களில் தெளிவின்மை காணப்படுவதன் காரணமாக இந்தக் கூட்டமைப்பின் ஒப்பந்தத்தில் முஸ்லிம் காங்கிரஸ் கையொப்பமிடமாட்டாதென தகவலறிந்த வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

கடந்த வெள்ளிக்கிழமை ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் அரசியல் உயர் பீடம் இது தொடர்பில் கூடி ஆராய்ந்த போதே இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது. எதிர்க்கட்சிக் கூட்டமைப்பின் கொள்கை விளக்கத்தில் சில விடயங்களில் தெளிவின் மை காணப்படுவதாக இந்தக்கூட்டத்தில் சுட்டிக் காட்டப்பட்டது.

ஆகவே இது தொடர்பாக கூட்டமைப்புடன் கலந்துபேசி குறிப்பிட்ட விடயங்கள் தொடர்பில் திருப்தியான பதில் கிடைத் தால் மட்டுமே கையொப்பமிடுவது குறித்து ஆலோசிப்பதென முடிவெடுக்கப்பட்டது.

இதுதொடர்பாக எதிர்க்கட்சிப் பொதுக் கூட்டமைப்புடன் கலந்துரையாடும் வகையில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர், செயலாளர் உட்பட கட்சியின் முக்கியஸ்தர்கள் கொண்டகுழுவொன்றும் நியமிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (6)

# அத்துமீறி நுழைந்த 5 இலங்கை மீனவர்கள் கைது

(கொழும்பு)

இந்தியக் கடல் பகுதியில் நேற்று அத்துமீறி நுழைந்த மீன்பிடித்துக்கொண்டிருந்த இலங்கையைச் சேர்ந்த மீனவர்கள் நிர்மல உதயான (24), சுசாந்திலசிரி (29), சனத் பிரிய தரிசன(26), கசும் சம்பரத்(25), ரங்கமதுவின்(20) ஆகியோரை இந்தியக் கடலோரக் காவல் படையினர் பிடித்து புது வண்ணாரப் பேட்டை மீன்பிடித்துறைமுக காவல்நிலையத்தில் ஒப்படைத்தனர்.

பின்னர் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்ட அவர்கள் எழும்பூர் நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டு புழல் சிறையில் அடைக்கப்பட்டனர். (6)

# மீள்குடியேற்றும் நடவடிக்கைகள் துரிதப்படுத்தப்பட வேண்டும்
## ஜப்பான் கோரிக்கை

(கொழும்பு)

இலங்கையின் வடபகுதியில் முகாம்களில் தங்கவைக்கப்பட்டுள்ள இடம்பெயர் மக்கள் விரைவில் மீள்குடியேற்றப்பட வேண்டுமென ஜப்பான் கோரிக்கை விடுத்துள்ளது.

மீள்குடியேற்றும் பணிகளை இலங்கை அரசாங்கம் துரித கதியில் மேற்கொள்ளும் என தாம் எதிர்பார்ப்பதாக ஜப்பான் சுட்டிக்காட்டியுள்ளது. அரசியல் தீர்வுத்திட்டத்தின் மூலம் நாட்டில் தேசிய நல்லிணக்கத்தை ஏற்படுத்த இலங்கை அரசு முனைப்புக்களை மேற்கொள்ளும் என தாம் நம்புவதாகவும் ஜப்பானிய வெளி விவகார அமைச்சின் ஊடகப்பிரிவு அண்மையில் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இடம்பெயர் மக்களை மீள்குடியேற்றுதல் தொடர்பாக இலங்கை அரசாங்கம் எதிர்நோக்கும் சவால்களுக்கு ஜப்பான் முழு அளவிலான ஒத்துழைப்பை வழங்கும் என சுட்டிக் காட்டப்பட்டுள்ளது. (6)

# பிலிப்பைன்ஸில் மீண்டும் சூறாவளி

## 1 1/2 இலட்சம் மக்கள் வெளியேற்றம்;14 பேர் பலி

(மணிலா)

பிலிப்பைன்ஸ் நாட்டை மீண்டும் சூறாவளி தாக்கியது . இதையொட்டி , 1 1/2 இலட்சம் பேர் வீட்டை விட்டு வெளியேற்றப்பட்டனர்.

பிலிப்பைன்ஸ் நாட்டை அடிக்கடி சூறாவளி தாக்கி வருகிறது. கடந்த 5 வாரங்களில் அங்கு 2 சூறாவளிகள் தாக்கின.

இதில் ஆயிரத்து 100 பேர் பலியானார்கள். இந்த சூறாவளி தாக்குதல்களில் இருந்து பிலிப்பைன்ஸ் இன்னும் மீளவில்லை.



இந் நிலையில் நேற்று முன்தினம் அங்கு மீண்டும் சூறாவளி தாக்கியது. அதற்கு மிரினே என்று பெயரிடப் பட்டுள்ளது. மணிக்கு 185 கி.மீ வேகத்தில் பலத்த சூறாவளி காற்று வீசியது.

அதனுடன் கன மழை கொட்டித் தீர்த்தது. இவ் அனர்த்தத்தினால் லுசோன் தீவுதான் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளது.

அங்குள்ள மின் கம்பங்கள் வீதியில் சரிந்து விழுந்தன. இதனால் மக்கள் மின் சாரம் இல்லாமல் அவதிப்பட்டனர். மரங்கள் வேரோடு சாய்ந்து விழுந்தன.

சூறாவளி தாக்குதலைத் தொடர்ந்து முக்கிய நகரங்கள் வெள்ளக்காடாய் மாறியதால் தலைநகர் மணிலாவில் இருந்து செல்லும் 180 விமானங்களின் சேவை இரத்து செய்யப்பட்டது. படகு மற்றும் பஸ் போக்குவரத்தும் இரத்து செய்யப்பட்டது.

இதனால் பொதுமக்கள் பெரும் அசௌகரியங்களுக்கு உள்ளாக்கினர். சூறாவளி தாக்குவதற்கு முன்பே ஒரு இலட்சத்து 50 ஆயிரம் பேர் பாதுகாப்பான இடங்களுக்கு அப்புறப்படுத்தப்பட்டு விட்டனர். தாழ்வான பகுதிகளில் பலரது வீடுகளை வெள்ளம் சூழ்ந்தது.

இதனால் அவர்கள் உயிரை கையில் பிடித்துக் கொண்டு வீட்டு கூரை மீது அமர்ந்திருந்தனர். அவர்களை மீட்க இறப்பர் படகு மற்றும் ஹெலிகொப்டர் உதவியை மேயர் ஏரியல் மக்கலஸ் நாடியுள்ளார்.

வெள்ளத்தில் முழ்கியும் இடிபாடுகளில் சிக்கியும் ஒருவர் பலியானதாக தெரிவிக்கப்பட்டது. தற்போது பலியானோர் எண் ணிக்கை 14 ஆக உயர்ந்துள்ளது.

# பாகிஸ்தானில் குண்டுவெடிப்பு

## 7 பேர் பலி ; 11 பேர் காயம்

பாகிஸ்தானின் கைபர் பழங்குடியினப் பகுதியில் இராணுவ வாகனங்களை குறி வைத்து வீதியோரத்தில் வைக்கப்பட்டிருந்த குண்டு வெடித்ததில் துணை இராணுவப் படையைச் சேர்ந்த ஏழு பேர் பலியாகினர்; 11 பேர் காயமடைந்தனர். இது குறித்து பாக். பாதுகாப்பு அதிகாரி கள் கூறுகையில்,

பாகிஸ்தானின் வடமேற்குப் பகுதியில் அமைந்துள்ள பெஷாவர் நகரிலிருந்து கைபர் பழங்குடியினப் பகுதியில் உள்ள இராணுவத்தினருக்கான பொருட்களை ஏற்றிச் சென்ற இரண்டு இராணுவ வாகனங்களை குறி வைத்து வெடிகுண்டுத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. பெஷாவர் நகரிலிருந்து 15 கி.மீ.தொலைவில் இச்சம்பவம் நிகழ்ந்தது. வெடிகுண்டை ரிமோட் கன்ட்ரோல் மூலம் வெடிக்கச் செய்துள்ளனர். இச்சம்ப வத்தில் துணை இராணுவப் படையைச் சேர்ந்த ஏழு பேர் பலியாகியுள்ளனர்; 11 பேர் காயமடைந்தனர். இந்தத் தாக்குதல் சம்பவத்திற்கு இது வரை எந்த இயக்கமும் பொறுப்பேற்க வில்லை என்றனர். (6)

# உலகம்முழுவதும்

# பன்றிக்காய்ச்சலுக்கு

## 5712 பேர் பலி

உவகத்தை அச்சுறுத்தும் பன்றிக் காய்ச்சல் நோய் இன்னும் ஓய்ந்த பாடில்லை. தொடர்ந்து வேகமாக பரவி வருகிறது. இந்நோய் தாக்கி பலர் பலியாகியுள்ளனர். எனவே இதை பேரழிவு நோய் என உலக சுகாதார அமைப்பு அறிவித்துள்ளது. இந்நோய்க்கு கடந்த வாரத்தில் மட்டும் உலகம் முழுவதும் 700 பேர் உயிரிழந்துள்ளனர்.

எனவே பலியானவர்களின் எண்ணிக்கை 5712ஆக உயர்ந்துள்ளது. அமெரிக்காவின் மட்டும் 4 ஆயிரத்து 175 பேர் இறந்துள்ளனர் 4 இலட்சத்து 41 ஆயிரத்து 661 பேர் பாதிக்கப் பட்டு சிகிச்சை பெற்றுள்ளனர். மேலும் பலர் தொடர்ந்து சிகிச்சை பெற்று வருகின்றனர். இந்த தகவலை உலக சுகாதார நிறுவனம் தெரிவித்துள்ளது. (6)

# பாகிஸ்தானுக்கு ரூ.11,500 கோடி இராணுவ நிதி உதவி

## நிபந்தனைகளுடன் அமெரிக்கா வழங்குகிறது

(வோஷிங்டன்)

பாகிஸ்தானுக்கு 2010ஆம் ஆண்டுக்கான இராணுவ நிதி உதவியாக ரூ.11 ஆயிரத்து 500 கோடியை அமெரிக்கா வழங்க இருக்கிறது. இதற்கான அனுமதியை அமெரிக்க ஜனாதிபதி ஒபாமா வழங்கி இருக்கிறார்.

அமெரிக்கா இராணுவத்துக்கு 2010ஆம் ஆண்டுக்காக 34 இலட்சம் கோடி ரூபாய்க்கு பட்ஜெட் போடப்பட்டுள்ளது.

இந்த பட்ஜெட் மசோதாவில் ஒபாமா கையெழுத்திட்டார்.இந்த பட்ஜெட்டில் பாகிஸ்தானுக்கு இராணுவ உதவி வழங்குவதற்காகவும் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

பாகிஸ் தானுக்கு இராணுவ உதவியாக 11,500 கோடி ரூபாய் வழங்குவதற்கு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.இதற்கும் சேர்த்து தான் அவர் அனுமதி கொடுத்து இருக்கிறார்.

இதேவேளை இந்த நிதியை வழங்குவதோடு அதை பெறுவதற்கு ஒரு நிபந்தனையையும் அமெரிக்கா விதித்து உள்ளது.

இந்த நிதியை வேறு பயன்பாட்டுக்காக இந்தியாவுக்கு எதிரான இராணுவ நடவடிக்கைக்காக ஆயுதங்களை குவிப்பதற்காக திசை திருப்பக்கூடாது.

இந்த நிபந்தனையை பாகிஸ்தான் கடைப் பிடிப்பதோடு மட்டும் அல்லாமல் நிதி திசை திருப்பப்படவில்லை என்று ஜனாதிபதி ஒபாமா நற்சாட்சி பத்திரம் கொடுத்தால் தான் பாகிஸ் தானுக்கு பணம் கிடைக்கும்.

இந்தப் பணம் பாகிஸ்தானுக்கு கிடைப்பதற்கு முன்பாக இராணுவ மந்திரி பாராளுமன்ற உறுப்பினர்கள் முன்னிலையில் தீவிரவாதிகளை ஒழிக்க பாகிஸ்தான் பாடுபட்டு வருகிறது என்று சான்றிதழ் வழங்கவேண்டும்.

அத்துடன் ஜனாதிபதி ஒபாமாவும் 180 நாட்களுக்கு ஒரு முறை பணம் சரியாகத் தான் செலவழிக்கப்படுகின்றது என்பதை உறுதிப் படுத்த வேண்டும். (6)




# ஐ.நா.வும் இன்டர்போலும் இணைந்து சர்வதேச அமைதிப்படையை உருவாக்க திட்டம்

(பாரிஸ்)

ஐ.நா அமைப்பு சர்வதேச பொலிஸ் அமைப்பான இன்டர்போல் சேர்ந்து க்ளோபோ காப் (உலகபொலிஸ்) என்ற சர்வதேச அமைதிப் படையை உருவாக்க திட்டமிட்டுள்ளன. சில நாடுகளில் ஏற்படும் உள்நாட்டு குழப்பங்களை தீர்க்க ஐ.நா. சபை அமைதிப் படையை அவ்வப்போது அனுப்பி வருகிறது.

இப்படையில் பல்வேறு நாடுகளைச் சேர்ந்த இராணுவ வீரர்களும் இருப்பர். ஒவ்வொரு நாட்டில் இருந்து இராணுவத்தினரை இந்த அமைதிப்படையில் அமர்த்தி பிரச்சினை உள்ள நாடுகளுக்கு அனுப்புவதுண்டு.

இப்போது புதிய சர்வதேச அமைதிப்படை அமைக்கப்பட உள்ளது. உள்நாட்டு குழப்பத்தில் உள்ள நாடுகளில் அமைதிப் பணியை கவனிப்பதுடன் அங்குள்ள சர்வதேச குற்றவாளிகளை அடையாளம் கண்டு நட வடிக்கை எடுக்கவும் செய்யும். சமீபத்தில் சிங்கப்பூரில் அமெரிக்கா சீனா உள்ளிட்ட 60 நாடுகளின் நீதிபதிகள் அமைச்சர்கள் கலந்து கொண்ட கூட்டத்தில் இதற்கான முடிவு எடுக்கப்பட்டது. இதன் மூலம் ஐ.நா.வும் இன்டர் போலும் இணைந்து சர்வதேச அமைதிப்படையின் திறனை அபவிருத்தி செய்யவாய்ப்பு ஏற்பட்டுள்ளது.

நவீன மின்னணு சாதனங்களின் மூலம் டி. என். ஏ. ஆவணங்கள், விரல் ரேகைகள், புகைப்படங்கள், தப்பியோடியவர் பற்றிய தகவல்கள் உள்ளிட்ட குற்ற நடவடிக்கைகள் அனைத்தையும் இந்தப் படை பயன்படுத்தி பாதுகாப்பைப் பலப்படுத்தும் . (6)

# விமானம் -ஹெலிகொப்டர் மோதலில் 9 அமெரிக்கர்கள் பலி

(சான்டியாகோ)

அமெரிக்காவைச் சேர்ந்த விமானமும் ஹெலிகொப்டரும் மோதியதில் அவற்றில் பயணித்த ஒன்பது பேர் பலியாகியிருக்கலாம் என அஞ்சப்படுகிறது.

அமெரிக்க கடலோரக் காவல் படைக்குச் சொந்தமான சி.130 ரக சரக்கு விமானமும் அந் நாட்டின் கடற்படைக்குச் சொந்தமான கோப்ரா ரக ஹெலிகொப்டரும் கடந்த சனிக்கிழமை மாலை சான் கிளெமன்ட் தீவில் மோதிக்கொண்டன.

இந்தத் தீவு சான்டியா கோவிலிருந்து 68 மைல் தொலைவில் உள்ளது. விபத்து நடந்த போது வானம் தெளிவாகவும் மேகமூட்டம் இல்லாமலும் இருந்துள்ளது. இருப்பினும் விபத்து ஏற்படக் காரணம் என்ன என்பது பற்றி விசாரிக்கப்பட்டு வருகிறது.

விபத்து நடந்த நேரத்தில் கோப்ரா ஹெலிகொப்டரில் இருந்தவர்கள் பயிற்சியில் இருந்தனர் என்றும் சி.-130 ரக விமானத்தில் இருந்தவர்கள் கடலில் காணாமல் போன தனியாருக்குச் சொந்தமான சிறு கப்பலைத் தேடும் பணியில் ஈடுபட்டிருந்தனர் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

ஹெலிகொப்டர் மற்றும் விமா னத்தில் இருந்த ஒன்பது பேரின் நிலைமை என்னவானது என தெரியவில்லை. அவர்கள் இறந்திருக்கலாம் என அஞ்சப்படுகிறது.

சான்கிள மென்ட்டுக்கும் சாண்டியாகோவுக்கும் இடைப் பட்ட கடல் பகுதியில் விமானங்களின் உடைந்த பாகங்கள் கண்டு பிடிக்கப்பட்டுள்ளன தேடுதல் பணிகள் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன. (6)

# தெற்காசிய பகுதியை வலுவானதாக மாற்ற 15 கோடி பேருக்கு வேலைவாய்ப்பை உருவாக்க வேண்டும்

## உலக வங்கி தெரிவிப்பு

தெற்காசிய பகுதியை பொருளாதார மற்றும் சமூக ரீதியாக வலுவானதாக மாற்ற 15 கோடி பேருக்கு வேலைவாய்ப்பை உருவாக்க வேண்டும் என உலக வங்கி தெரிவித்துள் ளது.

இது குறித்து உலக வங்கியை சேர்ந்த தெற்காசியாவிற்கான தலைமை பொருளாதார நிபுணர் எலியானா ஏ.கார்டோசா கூறியதாவது ,

தெற்காசியாப் பகுதியில் அடுத்த 10 ஆண்டுகளில் 15கோடி பேர் பணியாற்றும் வயதை எட்டி விடுவர் . அவர்களுக்கான பணிகளை உருவாக்குவது குறித்து தெற்காசியா உணரவேண்டும். கடந்த கால ஏழ்மையை விரட்டும் வகையில் தெற்காசியா நாடுகள் முழுந்தளவு வேகமாக வளர்ச்சியடைய வேண் டும்.

தெற்காசியாவில் வளர்ச்சி மற்றும் வேலை வாய்ப்புக்களை உருவாக்க குறைந்த உற்பத்தியை தரும் பாரம்பரிய விவசாயத்தில் இருந்து முதலீடு அதிக உற்பத்தியை அளிக்கும் நவீன விவசாயம் உற்பத்தி மற்றும் சேவை துறைக்கு மாற வேண்டியது அவசியம்.

தெற்காசியாவில் ஆண்டிற்கு 2.3 சத வீதம் தொழிலாளர்கள்எண்ணிக்கை வளர்ச்சி உள்ளது. இது உலகளவிலான தொழிலாளர்கள் வளர்ச்சியை விட அதிகம். இந்த தொழிலாளர்கள் அதிகரிப்பு இப்பகுதியில் கூடுதல் வளர்ச்சிக்கு உதவும். ஆனால் தெற்காசியாவில் காணப்படும் பெருமளவிலான மக்கள் தொகைக்கு ஏற்ப போதுமான வேலை வாய்ப்புகளை உருவாக் க வேண்டும். அதன் மூலம் வேலைவாய்ப்பு திறன் மிகுந்தவர்கள் இப்பகுதியின் ஆஸ்தியாவர் அந்த பகுதிக்கு இருக்கும் மிகப் பெரிய சவால் இது.

இங்கு காணப்படும் பலவீனமான உள் கட்டமைப்பு வசதியே இப்பகுதியின் உற்பத்தி துறை விரிவாக்கத்திற்கு தடையாக உள்ளது.

இவை வளர்ச்சி மற்றும் வேலைவாய்ப்பு உருவாக்கம் இரண்டையும் பாதிக்கிறது. தெற்காசிய பகுதிகளில் ஏழைகள் அதிகளவில் உள்ளனர். பொருளாதார நெருக்கடியான சூழ்நிலையில் அவர்கள் மிகவும் துன்பத்தில் உள்ளனர். அதிக வளர்ச்சி வீதம் என்பது எளிதானது அல்ல. கொள்கைகள் நில அமைப்பியல் மற்றும் தலைமை ஆகியவற்றைப் பொறுத்தே வளர்ச்சியின் பலன் அமையும். எனவே அதிக வேலைவாய்ப்பை உருவாக்கி உற்பத்தி கல்வி மற்றும் திறன் ஆகியவற்றை அதிகரிப்பதன் மூலமே அதிக வளர்ச்சி பெற முடியும். இவ்வாறு கர்டோசா கூறினார்.

ஆனால் தெற்காசிய நாடுகளை தனித்தனி யாக குறிப் பிட்டு அதன் வளர்ச்சி விகிதம் பற்றி தெரிவிக்க வில்லை . (6)

# நடராசா பரமேஸ்வரி மணி மண்டப திறப்பு விழா

# சிறப்பு மலர் -2009.11.02 (திங்கட்கிழமை)

## நல்லை ஆதின முதல்வரின் அருளாசியுரை



"தவமும் தவமுடையார்க்காகும்" என்பதற்கேற்ப இப்புனிதப்பணியைச் செவ்வனே நடராசா -சத்தியரூபன் தமது பெற்றோரின் நினைவாக அவர்கள் மேல் வைத்த அன்புடமையினால் அழகியதோர் மணி மண்டபத்தினை நல்லைக்கந்தனுடைய மருங்கிலே அமைத்திருக்கின்றார்.

இன்றெல்லாம் பல மண்டபங்கள் எழுந்தவண்ணமாக இருக்கின்றன அவற்றினை பேணிப்பாதுகாப்பதே மிகவும் உன்னத பணியாகும். நடராசா சத்திய ரூபன் அவர்களும் தமிழ் மக்களின் வாழ்வியல் தேவைகளை அதாவது சுபமங்கள நிகழ்வுகளை சிறப்பாக நிறைவேற்ற அமைத்த மணி மண்டபமானது சிறப்புறு பணிபெருக்கி சிறக்க நல்லாசிகளையும் வாழ்த்துக்களையும் வழங்கி அமைகின்றேன்.

"என்றும் வேண்டும் இன்ப அன்பு"

ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த
பரமாச்சார்ய சுவாமிகள்
இரண்டாவது குரு மகா சந்நிதானம்
நல்லை ஆதீனம்.

## சந்நிதியான் ஆச்சிரம முதல்வரின் ஆசிச்செய்தி



யாழ். மாவட்டத்தில் வளர்ந்து வரும் சமூகத் தொண்டாளரும் சந்நிதியான் ஆச்சிரமத்தினால் மேற்கொள்ளப்பட்டு வரும் பல விதமான அறப் பணிகளுக்கும் தன்னாலியன்ற ஆதரவினை நல்கிவரும் அன்பர் திரு. ந. சத்தியரூபன் அவர்களால் யாழ்ப்பாணம் நல்லூர்க் கந்தன் வீதியில் இன்றைய சூழலுக்கேற்ப மக்களின் தேவை கருதி சேவையினை மூலதாரமாகக் கொண்டு திருமண வைபவங்களுக்குரிய மணி மண்டபத்தை அமைத்துள்ளார். அவ்வகையின்மூலம் மேலும் பல அறநிலையங்களின் செயற்பாட்டினை மேம்படுத்துவதற்குரிய வழிவகைகளை செய்யும் இவரது முயற்சியினை பாராட்டுவதோடு இன்னும் பல ஆண்டுகள் தொடர்ந்து இவரின் பணிகள் மேலோங்க சந்நிதியானை வேண்டுதல் செய்து வாழ்த்தி நிற்கின்றோம்.

சுபம் சாந்தி !!

அமுதகலாஜோதி சிவத்திரு
செ. மோகனதாஸ் சுவாமிகள்

## பீடாதிபதி அவர்களின் வாழ்த்துரை



"நல்லூரைக் கும்பிட்டு நீ வாழ். அதனாலே நாட்டிலுள்ள வினைகள் ஓடும்" என்ற யோகர் சுவாமிகளின் அருள் வாக்கிற்கு அமைவாக ஈழத்திருநாட்டின் இதயமாக விளங்கும் யாழ்ப்பாணத் திருநகரின் தலைநகரமாக விளங்கிய திருப்பதி நல்லூர் ஆகும். வேண்டுவார் வேண்டும் வரந்தரு காத்தருளும் கந்தப் பெருமான் குடியிருக்கும் புகழ் பூத்த பதியாக இக் கோயில் அமைந்துள்ளது.

நல்லூர் மண் ஞானிகளும், யோகிகளும், பக்தி சீலர்களும் நடமாடிய மண். அவர்கள் பேசிய ஞானமொழிகள் இன்னும் அப்பதியில் அதிர்வாய் உள்ளதை அங்கு வரும் அடியார் குழாம் நன்கு அறியும்.

இத்தகு அற்புதமான சூழலிலே தான் நடராசா-பரமேஸ்வரி மணி மண்டபம் அமைந்திருக்கின்றது. தமிழ்மக்களின் பாரம்பரியமான கலாசார நிகழ்வுகளை நிறைவேற்றுவதற்கு உகந்ததோர் எழில் விஞ்சும் மணி மண்டபமாகக் காட்சியளிக்கின்றது.


"வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும் தெய்வத்துள் வைக்கப்படும்"

என்ற குறள் நெறிக்கமைவாக இவ் வையத்தில் வாழ்வாங்கு வாழ்ந்து இறைநிலை இணைந்திருக்கின்ற அமரர் நடராசா அவர்கள் பூர்வ புண்ணிய பயனாக நல்லூர்க் கந்தனைத் தொழுது வரும் காலத்தில் எண்ணிய எண்ணம் அவரது மைந்தன் நடராசா-சத்தியரூபன் அவர்களால் இன்று நிறை வேற்றப்பட்டிருக்கின்றது.

யாழ்ப்பாணம் சிறிநந்தியா நகை மாடத்தின் முதல்வர் நடராசா-சத்தியரூபன் அவர்கள் தமது பெற்றோரின் காணிக்கையாக ஞாபகார்த்தமாக நிறுவப்பட்ட மணி மண்டபமாக விளங்குகின்றது. எதிர்காலத்தில் தமிழ் மக்களுக்கு ஓர் வரப்பிரசாதமாக இம் மண்டபம் அமைந்திருக்கின்றது என்றால் மிகையில்லை. இதை விட இன் னொரு சிறப்பு யாதெனில் இம் மண்டபத்தின் வாயிலாக பெறப்படும் நிதி அனைத்தும் தனியார் தேவைக்குப் பயன்படுத்தாது பொதுத்தேவை களைப்பூர்த்தி செய்வதற்காக தீர்மானிக்கப்பட்டிருக்கின்ற செய்தி மனக் கெல்லாம் மகிழ்ச்சியைத் தருகின்றது. இம்மண்டப திறப்பு விழாவில் கலந்து கொண்டு வாழ்த் துரை வழங்குவதற்கு எனக்கும் ஒரு வாய்ப்பு கிடைத்திருக் கின்றது. அது மட்டுமல்ல இன்றைய தினம் வெளியா கும் இச் சிறப்பு மலருக்கு வாழ்த்துச்செய்தியை வழங்குவதிலும் பெரும் மகிழ்வடைகிறேன்.

எஸ்.கே.யோகநாதன்
பீடாதிபதி, யாழ்ப்பாணம் தேசியக் கல்வியியற் கல்லூரி

## பிரதேச செயலரின் வாழ்த்துச் செய்தி



யாழ்ப்பாண மாவட்டத்திலே மன்னர்களும் அறிஞர்களும் யோகிகளும் வாழ்ந்த நல்லூர் பிரதேச பிரிவிற்குள் சைவமணமும் ஆன்மிகமும் திகழ்கின்ற நல்லூர் கந்தசுவாமி கோயிலின் வீதியிலே அழகான மணிமண்டபம் அமைக்கப்பட்டு திறந்து வைக்கப்படவுள்ளமை அறிந்து அகமகிழ்வடைகின்றேன். யாழ்ப்பாணத்தில் முன்னணி நகைத் தொழிலதிபரான திரு. ந.சத்தியரூபன் அவர்களால் நிர்மாணிக்கப்பட்டுள்ள நடராசா பரமேஸ்வரி மணிமண்டபம் மிகவும் விசாலமானதாகவும் கலையம்சம் பொருந்தியதாகவும் சகல வசதிகளும் பொருந்தியதாகவும் விளங்குகின்றது.

திருமணநிகழ்வுகள் மட்டுமன்றி கலைவிழாக்களும் அரங்கேற்ற நிகழ்வுகள் மற்றும் இசைக்கச்சேரிகள் போன்றனவும் இம் மண்டபத்தில் நடாத்துவதற்கான வசதிகள் கொண்டு இருப்பது குறிப்பிடத்தக்கதாகும்.


இத்தகைய சிறப்பான வனப்புமிக்க மண்டபத்தை நிர்மாணித்து யாழ் தமிழ் சமுதாயத்தின் பாரம்பரியங்களை நிலைநாட்டும் பணியில் ஈடுபடுபவர்களை வாழ்த்தி திறப்பு விழா இனிதே இடம்பெற எல்லாம் வல்ல நல்லைக் கந்தனின் ஆசிர்வாதம் என்றும் கிடைக்க வேண்டுமென பிராத்தித்து எனது மனமார்ந்த வாழ்த்துக்களை தெரிவிக்கின்றேன்.

பா.செந்தில்நந்தனன் ,
பிரதேசசெயலர், நல்லூர் .

**மலரமைப்பு:-சங்குநாதன்**



## தமிழர் திருமண கலாசார மணிமண்டபமாக தந்தையின் சிந்தனைக்கு உருவம் கொடுத்தேன்



அன்னை வயிற்றில் குடியிருந்தேன். அடுத்து வந்து அவனியிற்பிறந்தேன். கண்ணை விரித்து உலகை ரசித் தேன். மெல்லச் சிரித்து மழலை மொழிந்தேன்.மழலைப் பருவம் தாண்டமுதலே என் மாதா வைப் பிரிந்தேன் (1 1/2 வயதில்) பிதாவின் அரவணைப்பில் பிரியமுடன் வளர்ந்து கற்று உயர்ந்து வாழத் தொடங்கினேன்.

அக்காவின் அரவணைப்பும், தந்தையின் பரிவும் என்னை வளர்த்தது,அம்மாவின் நினைவு என்னை உயர்த்தியது. சிறுபராயம் முதல் கல்வி கற்று தேறி வரும் காலத்தில் நகைத் தொழிலகமொன்றில் இணைந்து அத் தொழிலை அறிந்துபயின்று உயர்ந் தேன்.காலம் மாறியது. நமக்கென்றொரு தொழிலை நாமே நடத்தும் நிலை யும் நம்மைச் சேர்ந்தது. "சிறிநதியா" நகைமாடத்தை எனது மகளின் பெயரில் தொடங்கி நடத்தி வரும் காலத்தில் அன்றொருநாள் அப்பா எனக்குரைத்த செய்தி என் நெஞ்சில் நீள நினைவிருந்தது. நல்லைக்கந்தனை தொழுதுபணியும் காலத்தில் அவர் எண்ணியதும் என் நெஞ்சில் நீளப்பதிந்தது.

பெற்றோரின் நினைவுகளுக்கு வடிவம் கொடுக்க நினைத்தேன்.அதுவே இன்று எம்முன்னால் கம்பீரமாக காட்சியளிக்கும்" நடராசா -பரமேஸ்வரி மணி மண்டபம்" எம் பெற்றோரின் ஞாபகார்த்த நினைவாலயம். 'ஆசைக்கொன்று ஆஸ்திக்கொன்று'என்று சொல்வார்களல்லவா அந்த வகையில் அக்கா சத்தியபாமா, யான் சத்தியரூபனாக எம் பெற்றோரின் விருப்புக்கு ஆளானோம். எம்மை அரவணைத்து அன்புடன் வளர்த்து ஆளாக்கி வைத்த எம் தெய்வங்களுக்காக யான் மட்டுமல்ல என் அக்கா சத்தியபாமா, அத்தான் செல்லத்துரை, மருமக்களான நவநீதன், ஸ்ரீலதா, ஸ்ரீரேகாவும் எனது மனைவி விஜயகுமாரி, எனது பிள்ளைகளான சிறிநதியா, சானுகா, கஜலக்சன், கஜகனிஷன் எல்லோரின் விருப்புக்கமைய எம் பெற்றோரை எந்நேரமும் தரிசிப்பதற்காக, வணங்குவதற்காக மக்களால், மருமக்களால் பேரப்பிள்ளைகளால் வழங்கப்பட்ட காணிக் கை தான் இந்த மணிமண்டபம்.


1995 ஆம் ஆண்டிலிருந்து என் தந்தையார் விரும்பினார். நல்லைக் கந்தன் மஹோற்சவ காலங்களில் அடியவர்களுக்கு மண்டபம் அமைத்து அன்னதானம் வழங்கவேண்டுமென அவரது விருப்புக்கமைய எமது மண்டபத்திற்கருகிலிருக்கும் அறுபத்து மூவர் நாயனார் மடத்தில் அப் பணியை அவர் நிறைவேற்றியிருந்தார். 2008 ஆம் ஆண்டிலும் என் தந்தையார் தேர்த் திருவிழாவன்று அன்னதானம் வழங்கும் பணியிலிருந்தார். அவரது காலத்திலே இந்த மண்டபத்தை உருவாக்கி முடிக்கவேண்டுமென அல்லும் பகலும் உழைத்தோம். இறைவன் திடீரென என் தந்தையை தன்னடிக்கு அழைத்தான்.

அவரது எண்ணத்தை முடிக்க அவர் கண்ட கனவை நனவாக்க எம் பணி தொடர்ந்தோம்.பெற்றோரின் ஆசியினால் இந்த திருப்பணியை நிறைத்தோம்.

தமிழ்மக்களின் சுபமங்கள நிகழ்வுகளை சமய சமூக கலாசார நிகழ்வுகளை சகல வசதிகளோடு நிறைவேற்றும் வகையில் இந்த மண்டபத்தை அமைத்துள்ளோம். அது மட்டுமன்றி எம் மணி மண்டபத்தினால்பெறப்படும் நிதிகூட தனியார் தேவைகளுக்குப் பயன்படுத்தாது பொதுப் பணிகளுக்கு செலவிடப்படும் என்ற நல்நோக்கோடு மண்டபம் அமைக்கப்பட்டிருக்கின்றது. உங்க ளின் தேவையே எங்களின் சேவை என்பதை உணர்த்தி இந்த மண்டபம் அமைய எனக்கு துணை நின்றவர்களை, இன்று இந்த மண்ட பத்தை திறந்து வைத்து ஆசி கூறி, வாழ்த்துரைக்கும் அத்தனை தகைமை சான்ற பெரியவர்களையும் வணங்கி என்னுரையை நிறைவுசெய்கின்றேன்.

நடராசா -சத்தியரூபன்
ஸ்தாபகர் (நடராசா -பரமேஸ்வரி மணிமண்டபம்)
முதல்வர், சிறிநதியா நகைமாளிகை, யாழ்ப்பாணம்.

## மணிமண்டப வாழ்த்துக் கவி



வள்ளுவன் வகுத்தான் வாழ்க்கை முறை
வாழ்ந்தனர் இங்கே நடராசா பரமேஸ்வரி
வாழ்வின் உண்மைகள் சிறந்திடவே
வாழ்ந்தவர் என்றும் வாழ்பவரே

நல்லது செய்யும் நடராசா
நானிலம் போற்றும் பரமேஸ்வரி
சத்திய ரூபனைப் பெற்றெடுத்தார்
பெற்றோர் வழியிலே சிறந்திட்டார்

நல்லாசிகள் என்றும் உனக்காக
நல்லதே நடக்கும் நலமாக
பண்ணவன் பாதம் பணிந்து நின்றே
வாழ்த்துகிறேன் நீ வாழியவே!

என்றும் அன்புடன்
அருட்திரு ஆர்.எம்.ஜீ.நேசநாயகம் அடிகள்

## சோதிடரின் ஆசியுரை



யாழ்ப்பாணம் நல்லூர் கந்தசுவாமி கோவில் வடகிழக்கு வீதியில் கோவில்கொண்டு எழுந்தருளியிருக் கும் மனோன்மணி அம்பாள் ஆலய வடகிழக்கு எல்லையில் அமைந்துள்ள நடராசா பரமேஸ்வரி மண்டபத்திறப்பு விழாவில் கலந்து கொள்ளும் பாக்கியம் கிடைத்ததையிட்டு மன மகிழ்ச்சியடைகின்றேன்.

மேலும்மணிமண்டபஉரிமையாளர்நடராசா- சத்தியரூபன்அவர்கள் மனப்பூர்வமாகச் செய்த கைங்கரியம் மிகவும் போற்றத் தகுந்ததாகும். நீடூழி காலம் மணிமண்டபம் எல்லோருக்கும் பயன்தரக்கூடியதாக வளர்ச்சி அடையவேண்டுமென இறைவனைப் போற்றி ஆசி உரைக்கின்றேன்.

சோதிடர் வே.சிவராமலிங்கம், திருநெல்வேலி கிழக்கு

## வாழ்த்துச் செய்தி



நடராசா பரமேஸ்வரி மணிமண்டப திறப்பு விழா பல பெரியோர்களின் ஆசீர்வாதத்துடன் நடைபெறுகின்றது. பெற்றோ ரின் ஞாபகார்த்தமாக ஸ்தாபகரால் ஸ்தாபிக்கப்பட்ட இவ் மணி மண்டபமானது அழகுறவடிவமைக்கப்பட்டதுடன் அதன் பெயர் இறை நாமத்தைக் கொண்டிருப்பது சிறப்பம்சமாகும். இந் நன்னாளில் மக்க ளின் நல் ஆதரவு பெற்று மேன் மேலும் வளர இதய பூர்வமான வாழ்த்துக்களை த் தெரிவிப்பதில் பெரு மகிழ்ச்சி அடைகின்றேன்.

தில்லைநாதன் -ரவீந்திரநாதன்
ஆசிரியர் செங்குந்த இந்துக்கல்லூரி.

## அரசாங்க அதிபரின் வாழ்த்துச் செய்தி



ஈழ நாட்டிலே தமிழ் மன்னர் மணிமுடி தரித்துச் செங்கோல் ஒச்சிய காலத்தில் அவர்களின் இராச தானியாகிய நல்லூரிலே நடுநாயகமாக விளங்குகிறது நல்லூர்க் கந்தசுவாமி கோவில். நல்லைக் கந்தனின் சூழல் ஞானிகளும் யோகிகளும் ஆன்மீக வாதிகளும் நடமாடிய இடம். இச் சுழலிலே வதிவோர் கந்தப் பெருமானின் அருள் நலம் நிரம்பியவர்கள் என்றே கூறலாம்.

இந்த வகையில் நல்லைக் கந்தனின் அருட்பார்வை நோக்கிலும் அருள்மிகு ஸ்ரீ மனோன்மணி அம்பாளின் அரவணைப்பிலும் யாழ்ப்பாண மாவட்டத்தில் நல்லூர்ப் பிரதேச செயலர் பிரிவில் நடராசா பரமேஸ்வரி மணி மண்டபம் அமைந்திருக்கின்றது. நல்லூர்க்கந்தனின் மகோற்சவ காலங்களில் அன்னதானம் வழங்கும் சிறிய மண்டபமாகக் காணப்பட்டு இன்று விசாலமான கலையம்சத்தோடு சைவத் தமிழ் மக்களின் கலாசார நிகழ்வுகளை நிறைவேற்றும் அழகிய மணிமண்டபமாக கம்பீரமாகக் காட்சி தருகின்றது.

அமரர்கள் நடராசா பரமேஸ்வரி அவர்களின் ஞாபகார்த்தமாக அவர்களின் நினைவுகளுக்கு உருவம் கொடுத்தாற்போல் மகன் தந்தைக்காற்றும் நன்றிக் காணிக்கையாக அன்பர் நடராசா சத்தியரூபன் அவர்களால் பல இலட்சம் ரூபாய் செலவில் இம் மணிமண்டபம் அமைக்கப்பட்டுள்ளது. தமது இல்லங்களில் சுபமங்கள நிகழ்வுகளை நடாத்த முடியாதவர்களுக்கு இந்த மணி மண்டபம் இடம் கொடுத்திருக்கின்றது. யாழ்ப்பாண மாவட்டத்தில் இவ்வாறான ஒவ்வொரு மண்டபம் அமைந்திருப்பது எமக்கெல்லாம் மகிழ்வினைத் தருகின்றது.

நடராசா பரமேஸ்வரி மணிமண்டபத்தினைத் திறந்து வைக்கின்ற பெரும் பேறு எனக்கு இன்று கிடைத்திருக்கின்றது. இம்மணி மண்டபத் திறப்பு விழாவின் நிகழ்வுகள் அனைத்தும் சிறப்புறவும் அதன் நோக்கங்கள் மங்களகரமாய்த் தொடர்ந்திடவும் எனது மனமார்ந்த வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

க. கணேஷ்
அரசாங்க அதிபர்/மாவட்டச்செயலர்
யாழ். மாவட்டம் .

## காலத்தின் தேவையை நிறைவேற்ற அமைந்த மணி மண்டபம்



திரு. நடராசா சத்தியரூபன் தனது பெற்றோரின் நினைவாக நல்லூர் கந்தசுவாமி கோயிற் சூழலில் நடராசா பரமேஸ்வரி மணிமண்டபத்தை நிர்மாணித்தது மிகவும் பாராட்டுக்குரியதாகும்.

எமது பிரதேசத்தில் மங்கல நிகழ்வுகளையோ பொது நிகழ்வுளையோ நடத்துவதற்கு வசதியான மண்டபங்களின் தேவை இன்று மிகத்துரிதமாக அதிகரித்து வருகிறது. வேகமாக மாறிவரும் எமது சமூக - பொருளாதாரச் சூழ்நிலைகளால் முன்னர் போல் எமது மக்கள் தத்தமது வீடுகளில் பந்தல் அமைத்து மங்கல நிகழ்வுகளை நடத்துவது இன்று முடியாத காரியமாகிவிட்டது. கல்யாண மண்டபங்களை பல ஒருங்கிணைந்த தரமான சேவைகளை ஓரே இடத்தில் வழங்குவதாலும் விருந்தினர்கள் அழைப்பாளிகள் ஒன்று கூடுவதற்குப் பொருத்தமான இடமாக இருப்பதாலும் பிரயாண வசதிக் குரிய இடங்களில் இட அமைவு பெற்றிருப்பதாலும் இவற்றின் பயன்பாடுகள் அதிகரித்து வருகின்றமையைக் காணக்கூடியதாகவுள்ளது.

காலத்தின் தேவையை உணர்ந்து அமையப்பெற்ற நடராசா பரமேஸ் வரி மணிமண்டபம் மக்களின் தேவைளைப் பூர்த்தி செய்ய உதவுவதுடன் நல் லூர் திருவிழாக் காலங்களிலும மற்றும் நாட்களிலும் சமய சமூக கலாசார நிகழ்வுகள் நடைபெறப் பெரிதும் உதவியாக அமை யும் என்பது குறிப்பிடத்க்கது.

நடராசா பரமேஸ்வரி மணிமண்டபத்திறப்பு விழா சிறப்பாக நடக்க என் மனம் நிறைந்த வாழத்துக்களை இச்சிறப்பு மலரூடாகத் தெரிவிப்பதில் மகிழ்ச்சியடைகின்றேன்.

பேராசிரியர் பொ. பாலசுந்தரம்பிள்ளை
முன்னாள் துணைவேந்தர் /வாழ்நாட் பேராசிரியர்

## தமிழர் கலாசார நிகழ்வுகளை நிறைவேற்ற உகந்ததோர் மணிமண்டபம்



*மகன் தந்தைக் காற்றும் உதவி இவன் தந்தை*
*என்நோற்றான் கொல் லெனும் சொல்*

என்ற குறள் நெறிக்கமைவாக தன் பெற்றோரின் நினைவாக ஞாபகார்த்த சின்னமாக நடராசா -பரமேஸ்வரி மணிமண்டபத்தினை அன்பர் சத்திய ரூபன் அவர்கள் அமைத்திருக்கின்றார். இன்றைய காலகட்டத்தில் எம்மை பெற்று வளர்த்து உற்ற வகையில் கல்வி தந்து உபசரித்து வையத்தில் வாழ்வாங்கு வாழ வழிகாட்டிய கண்கண்ட தெய்வங்களாக இரு முதுகுரவரென விளங்கும் பெற்றோரை மறந்து வாழந்து அவர்களை அலைய விடும் நிலையைப் பார்க்கின்றோம்.

அன்பர் சத்தியரூபன்அவர்கள் தன்தாயை பால் மணம் மாறாத பருவத்தில் (ஒன்றரைவயதில்) பிரிந்தவர். அந்த பிரிவாற்றாமையை மறக்க தன் தந்தை நடராசாவால் பரமேஸ்வரி அம்மையை கண்டு நயந்தவர் சத்திய ரூபன்.

சிந்தைக்கினிய தந்தை செப்பிய வார்த்தைகளுக்கு சிகரம் வைத்தாற்போல் இறைவடிவம் கொடுத்திருக்கின்றார். தாயிற்சிறந்த கோவிலுமில்லை தந்தை சொல்மிக்க மந்திரமில்லை என்ற தாரக மந்திரத்தை சிரமேற்கொண்டு நல்லைத் திருவூரில் நடராசா -பரமேஸ்வரி என்ற திரு நாமத்தில் அழகியதோர் மணி மண்டபத்தை மனதுக்கினிய வகையில் மாண்புற அமைத் திருக்கின்றார்.

அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம் என்ற ஆன்றோர் வாக்குக்கமைவாக எண்ணரிய செயல் முடித்து திகழ்கின்றார்.

இந்தவகையில் சத்திய ரூபனால்அமைக்கப்பட்ட மணிமண்ட பமானது எதிர் காலத்தில் பண்டைத்தமிழ் மக்கள் பாரம்பரியமாக காலாகாலமாக பேணிவந்த திருமண வைபவங்கள், பூப்புனித நீராட்டு விழாக்கள் போன்ற கலை கலாச்சார பண்பாட்டு நிகழ்வுகளை மிகச் சிறப்பான முறையில் நிறைவேற்றுவதற்கு சகல வசதிகளையும் கொண்ட கலையம்சம் ததும்பும் நடராசா பரமேஸ்வரி மணி மண்டபம் இடமளித்திருக்கின்றது.

இறைவுக்கோர் கலாசார நிலையமாக நடராசா பரமேஸ்வரி மணிமண்டபம் வாழி
நெடுமறைப் பொருளேயாக நடராசா பரமேஸ்வரி மணிமண்டபம் வாழி
துறைதொறும் கலையகச் சோதியாக நடராசா மணி மண்டபம் வாழி
தொன்மை பண்பாட்டின் தாயகமாய் நடராசா பரமேஸ்வரி மணிமண்டபம் வாழி
இறையருளோடு நல்லையம்பதியிலெழுந்த நடராசா பரமேஸ்வரிமணி
மண்டபம் வாழி

ஈழத்திருநாட்டின் இணையற்ற கல்யாண மண்டபமாய் வாழி வாழி
மறையுள்ள வரையும் மக்கள் சேவைகளைத அறப்பணிகளை ஆற்றி வாழி வாழி
மாநிலம் போற்றி மகிழ்ந்திடும் வண்ணம் மாண்புகழ் பெருக்கி வாழி வாழி

மதுரகவி காரை எம்.பீ அருளானந்தன் J.P
பணிப்பாளர், சைவத்தமிழ் பண்பாட்டுப் பேரவை ,
ஆசிரியர் ஸ்ரான்லிக் கல்லூரி ,
வானொலி, தொலைக்காட்சி வர்ணனை ஒலிபரப்பாளர் .

**திரு.ந.சத்தியரூபன் குடும்பத்தினர் , திரு.கா. செல்லத்துரை குடும்பத்தினர் , திரு.நடராசா சத்தியரூபன்**
**ஸ்தாபகர் -நடராசா பரமேஸ்வரி மணிமண்டபம் , முதல்வர் : சிறிநந்தியா நகை மாளிகை , யாழ்ப்பாணம்.**

# இன்று ஒரு தகவல்

## சரியான முடிவு எடுப்பது எப்படி?

மற்றவர்களுக்கு குல்லா போட்டே நம்மில் பெரும்பாலானோர் பழக்கப்பட்டுவிட்டோம். அவ்வாறு செய்தால் தான் நாம் முன்னேற முடியும் என்று நம்பி ஏமாறுகிறோம்.

ஆனால் முன்னேறத் துடிப்பவர்கள் தமக்குத் தாமே தொப்பி அணிந்துகொள்ள வேண்டும் என்கிறார் ஓர் அறிஞர்.

"சரியான முடிவு எடுப்பதற்கு ஆறு கற்பனைத் தொப்பிகள் அவசியம்" என்கிறார் எட்வேர்ட் டி.போனா. இது அவருடைய பிரபலமான ஒரு கருத்து ஆகும்.

"Lateral Thinking" என்பது சிந்தனையிலே புதிய வகையான சிந்தனையாகும். அந்த வார்த்தையை உருவாக்கியதே அவர் தான்.

நாம் நமது வாழ்க்கையில் சரியான முடிவுகள் எடுப்பதற்கு அவருடைய இந்தக் கருத்து மிகவும் உபயோகமாக இருக்கும்.

முக்கியமான முடிவுகளை எடுக்கும் போதெல்லாம் இந்தக் கற்பனைத் தொப்பிகள் ஆறினையும் ஒன்றன்பின் ஒன்றாக வரிசையாக அணிந்து கொண்டு முடிவு எடுக்க வேண்டும்.

**முதலில் வெள்ளைத் தொப்பி**-முடிவெடுப்பதற்கு முதல் தேவை சரியான தகவல்கள். தகவல்களைத் திரட்டுவதுதான் வெள்ளைத் தொப்பி அணிவதன் நோக்கம்.

**இரண்டாவது, பச்சைத் தொப்பி**-இது கற்பனை சக்தியைக் குறிக்கிறது. இந்தத் தொப்பி, கிடைத்த தகவல்களை வைத்துப் புதுப்பது யோசனைகளை உற்பத்தி செய்யத் தூண்டுகிறது.

**மூன்றாவது, மஞ்சள் தொப்பி**-இதன் வேலை என்னவென்றால், பச்சைத் தொப்பி கொடுத்த யோசனைகளில் எது நடைமுறைக்குச் சரிப்பட்டு வரும், எது சரிப்பட்டு வராது என்பதை சரியாக இனம் கண்டு மற்ற யோசனைகளையெல்லாம் வடிகட்டிவிடும்.

**நான்காவது, கறுப்புத் தொப்பி**- இது நியாய தர்மங்களைப் பாதுகாக்கும் தொப்பி. நடக்கக் கூடிய, நமக்கு மட்டும் நன்மை தரக்கூடிய சுயநலமான யோசனையாக இருந்தால், "இது சமூகத்திற்குக் கேடானது. ஆபத்து நிறைந்தது' என்று இந்தத் தொப்பி எச்சரிக்கும்.

**ஐந்தாவது, சிவப்புத் தொப்பி**-இந்தத் தொப்பிக்கு தக்க அறிவு, தகவல் அறிவு பற்றியெல்லாம் தெரியாது. "ஏதோ என் மனதிற்குப் படுகிறது... இது சரியாக வரும்" என்று சொல்வோம் அல்லவா? இந்த உள்ளுணர்வு (Intuition) தான் சிவப்புத் தொப்பி.

**ஆறாவது, நீலத் தொப்பி** - மற்ற ஐந்து தொப்பிகள் எடுத்து வைத்த வாதப் பிரதிவாதங்களை ஆராய்ந்து சரியான, தெளிவான இறுதி முடிவு எடுக்கும் தொப்பி இது.

இதுதான் எட்வேர்ட் டி. போனா கூறும் கருத்து. இதைச் சுருக்கமாகப் புரிந்துகொள்வது எப்படி?

இப்போது ஏதோ ஒரு விஷயத்திற்காக நாம் முடிவெடுக்க வேண்டும் என்று வைத்துக்கொள்வோம்,

முதலில் அது சம்பந்தப்பட்ட தகவல்களைத் திரட்ட வேண்டும். அந்தத் தகவல்களை அடிப்படையாக வைத்துக் கொண்டு புது யோசனைகளை உருவாக்க வேண்டும். இதில் உபயோகப்படாத யோசனைகளைக் கூட ஆராய வேண்டும்.

ஒரு விஷயம் நமக்கு நல்லது என்று தோன்றினாலும், அதனால் மற்றவர்களுக்கு ஏதும் இடையூறு இருக்குமா? என்று சிந்திக்க வேண்டும்.

அதன்பின் நம் உள்ளுணர்வு என்ன சொல்கிறது என்று பார்க்கவேண்டும். கடைசியாக எல்லாவற்றையும் ஆராய்ந்து ஒரு நல்ல, தீர்க்கமான முடிவுக்கு வர வேண்டும்.

இதுதான் எட்வேர்ட் டி.போனா சொல்லும் ஆறு வகையான சிந்தனைத் தொப்பிகள்.

இதில் இன்னொரு விஷயம் என்னவென்றால், சில சந்தர்ப்பங்களில் இப்படி வரிசையாகப் பார்த்துக்கொண்டு இருக்கமுடியாது.

உடனடியாக முடிவெடுக்க வேண்டிய சந்தர்ப்பங்கள் பல உண்டு. உதாரணமாக, கால்பந்தாட்டத்தில் பந்தை உதைப்பதா? அல்லது தடுப்பதா? என்பது போன்ற நேரங்களில் சிவப்புத் தொப்பிதான் சரியானது.

அதாவது உள்ளுணர்வு. அது கூர்மையாக இருக்க வேண்டும். அதற்கு மனம் தெளிவாக இருப்பது மிக மிக அவசியம்.

*தென்கச்சி கோ சுவாமிநாதன்*

# தேசிய அடையாள அட்டைகளை துரித கதியில் விநியோகிக்க நடவடிக்கை

## ஆட்பதிவுத் திணைக்கள அத்தியட்சகர் தெரிவிப்பு

இவ்வருடம் ஆரம்பம் முதல் இன்று வரை தேசிய அடையாள அட்டைக்காக விண்ணப்பித்தவர்களின் தொகை 7 இலட்சத்து 14 ஆயிரத்து 394 என ஆட்பதிவுத் திணைக்களத்தின் அத்தியட்சகர் தெரிவித்துள்ளார்.

விண்ணப்பங்கள் துரிதகதியில் பரிசீலிக்கப்பட்டு நாடளாவிய ரீதியாக விநியோகிக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

அத்துடன் எதிர்வரும் டிசம்பர் மாதம் நடைபெறவுள்ள க.பொ.த. (சா/த) பரீட்சையில தோற்றவிருக்கும் மாணவர்களுக்கான அடையாள அட்டைகளை உடனடியாக வழங்க திணைக்களம் உரியநடவடிக்கைகளை எடுத்துள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார். இந்த அவசர பணிகளுக்காக ஏற்கனவே 87 எழுதுவினைஞர்கள் இச் சேவையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார். (6-4)

# முல்லைத்தீவு மாவட்டத்தில் மூவாயிரம் பேர் மீளக்குடியமர்வு

முல்லைத்தீவு மாவட்டம் துணுக்காய்பிரதேச செயலாளர் பிரிவுக்கு உட்பட்ட 20 இற்கும் மேற்பட்ட கிராம சேவையாளர் பிரிவுகளில் 3 ஆயிரம் பேர் மீளக்குடியமர்த் தப்பட்டுள்ளதாக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

கடந்தமாதம் 22ஆம் திகதி முதல் தொகுதியாக 297 குடும்பங்களைச் சேர்ந்த 1007 பேர் இப் பகுதிக்கு மீளக்குடியமர்த்துவதற்காக மெனிக்பாம் முகாம் தொகுதியில் இருந்து அழைத்துச் செல்லப்பட்டார்கள் என்பது குறிப்பிடத்தக்கது. தற்போது மூன்று கட்ட மீள்குடியேற்ற நடவடிககைகள் மேற்கொள்ளப்பட்டிருப்பதாகவும், இதில் 3ஆயிரம் பேர் மீளக்குடியமர்த்தப்பட்டிருப்பதாகவும் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

முகாம்களில் இருந்து மீள்குடியேற்றத்திற்காக அழைத்துச் செல்லப்படுபவர்கள் உடனடியாக அனிஞ்சியன்குளம் அரசினர் பாடசாலை, பாலிநகர் மகாவித்தியாலயம், மல்லாவி மத்திய கல்லூரி ஆகிய 3 பெரிய பாடசாலைகளில் தங்க வைக்கப்படுகின்றார்கள் என்றும், இவர்கள் உடனடியாகவே தமது வீடுகள் காணிகளைச் சென்று பார்வையிட்டு அவற்றைச் சுத்தம் செய்துதேவைப்பட்டால், தற்காலிக கொட்டில்களை அமைப்பதற்கும் அனுமதிக்கப்பட்டு உடனடியாகவே அங்கு சென்று குடியமர்த்துவதற்கு அனுமதிக்கப்பட்டு வருவதாகவும் முல்லைத்தீவு மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி எமில்டா சுகுமார் தெரிவித்துள்ளார்.

இவ்வாறு செல்கின்றவர்களுக்கு கத்தி, கோடரி, மண்வெட்டி உள்ளிட்ட விவசாய உபகரணங்கள், கூரைத் தகடுகள், கூரை விரிப்புகள், சமையலறைப் பாத்திரங்கள், 2 வாரத்திற்கான உலருணவுப் பொருட்கள் என்பனவும், 5 ஆயிரம் ரூபா ரொக்கப்பணமும் உடனடியாக வழங்கப்படுவதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

முல்லைத்தீவு மாவட்டத்திற்கான மீள்குடியேற்ற நடவடிக்கைகள் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. துணுக்காய் பிரதேச செயலாளர் பிரிவையடுத்து, மாந்தை கிழக்குப் பிரதேச செயலாளர் பிரிவில் உடனடியாகவே மீள்குடியேற்ற நடவடிக்கைகள் தொடர்ந்து மேற்கொள்ளப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (6)



அகில இலங்கை தமிழ் தினப்போட்டியில் இலக்கிய நாடகம் திறந்த பிரிவில் மாவட்டமட்டத்தில் முதல் இடத்தையும் மாகாண மட்டத்தில் 3 ஆம் இடத்தையும் பெற்றுக்கொண்ட சுன்னாகம் இராமநாதன் கல்லூரியின் நாடகக்குழுவினரை படத்தில் காணலாம்.

# இராசி பலன்

02.11.2009
(ஐப்பசி 16 திங்கட்கிழமை)
பூரணை பின்னிரவு 1.42 மணிவரை
அச்சுவினி முன்னிரவு 8.24 மணிவரை
இராகுகாலம் 7.34-9.04 மணிவரை
சுபநேரம் 12.04-1.34 மணிவரை
பூரணை விரதம், திருமூலர் குருபூசை

| | |
|---|---|
| மேடம் | நல்ல முயற்சி, சயனசுகம், நண்பர்கள் உதவி, சிந்தனை மிகுதி. |
| இடபம் | செய்தொழில் விருத்தி, சயன சுகக் குறைவு, பிரயாணம், உறவினர் சந்திப்பு. |
| மிதுனம் | மனமகிழ்ச்சி, எடுத்தகாரியம் கைகூடும், போசனசுகம், உறவினர் வருகை. |
| கடகம் | கடின உழைப்பு, சுபநிகழ்வு, இனிய தகவல், நண்பர்கள் உதவி. |
| சிங்கம் | அச்சமான நிலை, ஆரோக்கியக்குறைவு, தொழில் நன்மை, திடீர் பயணம். |
| கன்னி | ஆரோக்கியக்குறைவு, வீண் பகை, பிறருக்கு உதவுதல், வாகன பயம். |
| துலாம் | சென்ற இடத்தில் செல்வாக்கு, போசனசுகம், பணவருவாய், ஆரோக்கிய நிலை. |
| விருச்சிகம் | தொழிலில் ஆர்வம், திடீர் பயணம், பொருள்சேர்க்கை, சத்துருஜெயம். |
| தனுசு | தாழ்ந்த சுபாவம், வியாபார விருத்தி, திடீர் நன்மை, தனவிரயம். |
| மகரம் | கல்வியில் ஆர்வம், தொழில் சிந்தை, ரோக பயம், சுபசெலவு. |
| கும்பம் | வாக்கு மேன்மை, வாகன சுகம், இனிய சம்பவம், புதிய பொருள் சேர்க்கை. |
| மீனம் | கோபப்படுதல், அதிக செலவு, காரிய தாமதம், குடும்பக் கவலை. |

# குடாநாட்டு சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | யாழ்ப்பாணம் | சாவகச்சேரி |
|---|---|---|---|
| 1 Kg | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 90 | 60 | 90 |
| உருளைக்கிழங்கு | 100 | 100 | 90 |
| பச்சைமிளகாய் | 50 | 60 | 45 |
| தக்காளி | 50 | 50 | 55 |
| மரவள்ளிக்கிழங்கு | 40 | 40 | 40 |
| கோவா | 60 | 50 | 70 |
| கரட் | 60 | 80 | 70 |
| பூசணி | 40 | 30 | 30 |
| புடோல் | 10 | 40 | 35 |
| வாழைக்காய் | 30 | 30 | 45 |
| சின்ன வெங்காயம் | 40-50 | 80 | 70 |
| பெரிய வெங்காயம் | 50 | 80 | 90 |
| பாகற்காய் | 160 | 140 | 100 |
| வெண்டிக்காய் | 40 | 40 | 40 |
| கரணைக் கிழங்கு | 35 | 40 | 60 |
| பயிற்றங்காய் | 240 | 60 | 60 |
| லீக்ஸ் | 110 | 120 | 130 |
| பீற்றூட் | 40 | 50 | 40 |
| கறிமிளகாய் | 80 | 90 | 90 |
| முருங்கைக்காய் | 170 | 220 | 140 |
| கீரை - 1 பிடி | 15 | 15 | 20 |
| தேசிக்காய் | 260 | 220 | 300 |
| தேங்காய் (ஒன்று) | 30 | 35 | 35 |

# ராகு கேது பெயர்ச்சி பலன்கள்

## 27.10.2009 முதல் 08.06.2011 வரை



### துலாம்

**சித்திரை 3 ,,4 ஆம் பாதங்கள், சுவாதி, விசாகம் 1, 2, 3 ஆம் பாதங்கள்**

**இன்பத்தை மட்டும் பகிர்ந்து கொள்ளும் இதயம் படைத்த துலாம் ராசி நேயர்களே!**

தெய்வ நம்பிக்கை அதிகம் பெற்றவர்கள் நீங்கள் உலகத்தில் ஏற்படும் ஒவ்வொரு அனுபவத்தையும் நீங்கள் காணவேண்டுமென்றும் ,அனுபவிக்க வேண்டுமென்றும் விரும்புவீர்கள். உங்கள் வசீகரத் தோற்றத்திற்கும்,வார்த்தை ஜாலத்திற்கும் மயங்காதவர்கள் யாருமில்லை. எந்த செய்தியையும் உங்களுக்கு தெரிந்தது போலவே காட்டிக் கொள்வீர்கள். அதனால் சில சமயங்களில் பிரச்சினைகளும் ஏற்படலாம்.

உயர் நிலையில் இருப்பவர்களோடு தொடர்பு வைத்துக்கொள்ள பிரியப்படுவீர்கள். ஆடை, அணிகலன்களை அணிந்து கொள்வதில் உங்களுக்கு ஆசை அதிகம் உண்டு. நீதிக்கும் நேர்மைக்கும் முக்கியத்துவம் கொடுப்பவர்களின் பட்டியலில் இடம் பிடிப்பீர்கள். நம்பியவர்களுக்கு கை கொடுத்து உதவும் நல்ல எண்ணம் உங்களுக்கு உண்டு.

கடமை உணர்விற்கு முக்கியத்துவம் கொடுப்பவர்கள் நீங்கள் கற்பனையை விற்பனையாக்குவதிலும் வல்லவர்கள் மற்றவர்களின் ஆலோசனைகளைக் கேட்டு நீங்கள் நடந்தாலும் கூட உங்கள் முடிவையே உயர்ந்த முடிவாகக் கருதுவீர்கள். இப்படிப்பட்ட குணங்களைப் பெற்ற உங்களுக்கு இந்த ராகு-கேது பெயர்ச்சி எப்படிப்பட்ட மாற்றங்களைக் கொடுக்கப் போகிறது என்பதைப் பற்றிப் பார்ப்போம்.

**முயற்சித்தால் வெற்றி தரும் மூன்றாமிடத்து ராகு!**

**உறவினர்களைப் பகையாக்கும் ஒன்பதாமிட கேது!**

இதுவரை மகர ராசியில் சஞ்சரித்து வந்த ராகுவும் கடக ராசியில் சஞ்சரித்து வந்த கேதுவும் தனது வான்வெளிப் பயணத்தில் 27.10.2009 அன்று பின்னோக்கிச் சென்று உங்கள் பிரச்சினைகளுக்கு வடிகால் அமைக்கப் போகிறார்கள்.

மூன்றாம்இடத்து ராகு முன்னேற்றத்தை வழங்குமா? முக்கியத்திருப்பங்களைக்கொடுக்குமா? எண்ணங்களை எளிதில் செயலாக்க விடுமா? எடுத்த காரியத்தை துணிச்சலுடன் செய்யலாமா? என்றெல்லாம் சிந்திக்கத் தூண்டும் உங்களைப் பொறுத்தவரை நீங்கள் செய்யும் முயற்சிகளுக்கு வெற்றியைத் தேடித் தரும் பொறுப்பு ராகு கையில் தான் இருக்கிறது. எனவே நாடி வந்த ராகுவை தேடிச்சென்று வழிபாடு செய்யுங்கள் பாடிப் பணிந்து வழிபட்டால் பக்கபலமாக நமக்கு ராகு ஒத்துழைப்பு செய்யும்.

பொதுவாக தைரியமும் தன்நம்பிக்கையும் கூடும் இதுவரை சாதுக்களாக இருந்த நீங்கள் இனி சாமர்த்திய சாலியாக மாறிவிடுவீர்கள். சொந்த பந்தங்கள் ஏழரைச் சனியின் ஆதிக்கத்தால் விலகிச்சென்றாலும் ஒரு சிலர் மட்டும் உங்களோடு வந்து ஒட்டிக்கொள்வர். வருமானத்திற்கு குறைவிருக்காது.

ஆனால் மன நின்மதி குறைய லாம். அருமை நண்பர்கள் ஆதரவுக்கரம் நீட்டுவர். அலைச்சல் கூடும் அடிக்கடி பய ணங்கள் அதிகரிக்கும்.

குழந்தைகளின் ஒத்துழைப்புக் குறையலாம் குடும்பத்தில் கணவன் -மனைவிக்குள் கருத்து வேறுபாடுகள் கூடும் விட்டுக் கொடுத்துச் செல்வதன் மூலம் விரும்பிய வாழ்க்கையை அமைத்துக்கொள்ள இயலும். இதுவரை கட்டுப்பட்டிருந்தவர்களும் ,கைதூக்கி விட்டவர்களும் எதிரியாக மாறும் சூழ்நிலை உண்டு. எனவே ,எதையும் ஒருமுறைக்கு பல முறை யோசித்துச் செய்தால் பிரச்சினைகளில் இருந்து விடுபடலாம்.

ஒன்பதாமிடத்தில் சஞ்சரிக்கும் கேது எண்ணங்களை நிறைவேற்றும் பொழுது இடையூறுகளைக் கொடுக்காமல் இருக்கவும் ,பொன்னான எதிர்காலத்தை அமைத்துக் கொடுக்கவும், உங்கள் சுய ஜாதகத்தில் ராகு-கேதுக்கள் இருக்கும் நிலை அறிந்தும், அதன் பாத சார நிலையறிந்தும் அதற்குரியயோக பலம் பெற்ற நாளில் முறையாக சர்ப்ப சாந்திப் பரிகாரங் களைச் செய்து கொள்வது நல்லது.

கேது பலத்தால் பயணங்கள் அதிகரிக்கும். வாகன மாற்றம் செய்ய முன்வருவீர்கள் ஆன்மீகப் பணிகளில் ஆர்வம் கூடும். தந்தை வழி உடன் பிறப்புகளில் பகை ஏற்பட்டு அகலும். சொத்துப் பிரச்சினைகளுக்கு தீர்வு காண நீதிமன்றத்திற்கு செல்லலாம் என்று நீங்கள் நினைக்கும் பொழுது பஞ்சாயத்திலேயே ஒத்து வந்துவிடும்.

உத்தியோகத்தர்களுக்கு ஊர் மாற்றங்கள் விரும்பியபடியே வந்து சேரும். ஏழரைச் சனியும் நடப்பதால் விரும்பிய ஊருக்கு மாற்றம் கிடைக்குமா? என்பது சந்தேகம் தான். ஒரு சிலருக்கு இலாகா மாற்றங்கள் ஏற்படலாம். அடுத்தவர் நலனில் காட்டிய அக்கறைக்கு ஆதாயம் போதுமானதாக கிடைக்காது. வரவும்,செலவும் சமமாகும் விதத்திலேயே இந்த பாம்பு கிரகங்களின் பெயர்ச்சி அமைந்திருக்கிறது.

ஒக்டோபர் 27என்பது உங்கள் வாழ்க்கையில் நல்ல மறுமலர்ச்சி தொடங்கும் நாள் என்பதை நினைவில் வைத்துக் கொள்ளுங்கள்.குறிப்பாக உங்கள் ராசிக்கு மூன்றாமிடத்தில் சஞ்சரிக்கும் ராகு லாபாதிபதியாக விளங்கும் சூரியனின் சாரத்தில் சஞ்சரிக்கிறார். எனவே உடன் பிறப்புக்களின் வசதி உயரும் கூடப்பிறந்தவர்கள் எல்லாம் குதூகலமாக வாழ்கிறார்களே-என்று நீங்கள் நினைப்பீர்கள் ஆனால் அவர்களின் ஒத்துழைப்பு உங்களுக்கு கிடைக்கும்.

உங்கள் இல்லத்தில் நடைபெறும் விழாக்களுக்கு கொடுத்துதவி செய்ய முன்வருவார்கள். அதே சமயத்தில் ஏழரைச் சனி நடப்பதால் ஒரு சகோதரர் நட்பாக இருக்கும் பொழுது மற்றொரு சகோதரர் பகையாக மாறும் சூழ்நிலை அமையும் எனவே அனைவரும் அனுசரித்துச் செல்வதன் மூலமே அனுகூலத்தைக் காண இயலும். வியாபார விருத்திக்கு புதிய பங்குதாரர்களை இணைத்துக் கொள்ள முன் வருவீர்கள்.

பணியாளர்களின் பிரச்சினை அதிகரிக்கும் பக்கத்தில் இருப்பவர்களால் ஏற்பட்ட சிக்கல்களை பிரபலங்களின் மூலம் தீர்த்துக் கொள்வீர்கள். அதேசமயம் புனர்பூச நட்சத்திரக் காலில் வியாழன் சாரத்தில் கேது சஞ்சரிக்கத் தொடங்குகிறார். 26.05.2010 வரை குரு காலில் தான் கேது சஞ்சரிக்கிறார்.

உங்கள் ராசிநாதனுக்கு குரு பகைவன் என்பதால் இக்காலத்தில் நீங்கள் எதிலும் விழிப்புணர்ச்சியோடு செயல்படுவது நல்லது. நம்பிக்கையோடு உதவுவதாகச் சொன்னவர்கள் கையை விரிப்பர். அன்பு செலுத்தியவர்கள் அகன்று ஓடுவர். வழிபாடு செய்வதன் மூலமே நீங்கள் இக்காலத்தில் வளர்ச்சியைக் கூட்டிக் கொள்ள இயலும் இல்லையேல் தளர்ச்சியைச் சந்திக்க நேரிடும்.

விநாயகப் பெருமானையும்,ஆதியந்தப் பிரபுவையும் விடாது வழிபட்டு வருவது நல்லது.மூன்று,ஆறு ஆகிய இடங்களுக்கு அதிபதியின் காலில் கேது சஞ்சரிக்கும் பொழுது கடன் சுமை கூடும். ஒரு கடனை அடைக்க மற்றொரு கடனை வாங்கக் கூடிய சூழ்நிலை உருவாகலாம். சங்கிலித்தொடர் போல கடன் வந்து விட்டதே என்று கவலைப்படுவீர்கள். தொழிலில் யாரும் புதிய முதலீடுகள் செய்ய வந்தால் யோசித்து ஏற்றுக்கொள்வது நல்லது .

கூட்டு முயற்சியிலும் பிறருக்கு பொறுப்புச்சொல்லி வாங்கிக்கொடுத்த தொகை வந்து சேருமா? என்பது சந்தேகம்தான் பெண் பணியாளர்களாலும் ,பிள்ளைகளாலும் பிரச்சினைகள் வந்து அகலும். காணி பூமி வாங்குவதில் கவனம் செலுத்துவது நல்லது. மதிப்பும், மரியாதையும் எப்பொழுதும் போல இருக்கும் மாற்று இனத்தவர்கள் கூப்பிட்ட குரலுக்கு ஓடி வந்து உதவி செய்வர்.

30.09.2010 முதல் 08.06.2011வரை மூல நட்சத்திரத்தில் கேது காலில் ராகு சஞ்சரிக்கிறார். அதே நேரத்தில் 2,7-க்கு அதிபதியான செவ்வாயின் காலில் கேது சஞ்சரிக்கிறார். எனவே குடும்பத்தில் அமைதி கூடும். நீண்ட நாளாக தடைப்பட்டு வந்த சுபகாரியப் பேச்சுக்கள் நல்ல முடிவிற்கு வரும் .நிலம், பூமி வாங்கிச் சேர்க்க முன்வருவீர்கள். நல்லவர்களின் தொடர்பால் நலம் காணும் நேரமிது.

விலகிச் சென்ற சொந்தங்கள் விரும்பி வந்து சேரும். வீட்டு முன்னேற்றம் கருதி சில முக்கியபுள்ளிகளைச் சந்தித்து முடிவெடுப்பீர்கள் போட்டி பந்தயங்களில் வெற்றி கிடைக்கும் புதிய திருப்பங்கள் பல வற்றையும் சந்திக்க நேரிடலாம். ஆற்றல் மிக்கவர்கள் உங்களுக்குப் பின்னணியாக இருப்பதால் எதற்கும் கவலைப்பட தேவையில்லை கொடுத்த கடன்கள் வசூலாகும். கூட்டாளிகள் மூலமும் இலாபம் கிடைக்கும்.

29.12.2009 முதல் 29.09.2010 வரை பூராட நட்சத்திரத்தில் சுக்கிரன் சாரத்தில் ராகு சஞ்சரிக்கிறார். இக்காலத்தில் குடும்ப உறுப்பினர்களை அனுசரித்துச் செல்வது நல்லது. பணத்தேவைகள் பூர்த்தியாகும் என்றாலும் மன அமைதி குறையலாம். குடும்பச் சுமை கூடும். செலவு நடைகள் அதிகரிக்கின்றதே என்று நீங்கள் சொல்லப்போய் அது விஸ்வரூபம் எடுக்கலாம். கணவன்-மனைவிக்குள் பிரச்சினைகள் அதிகரித்துக் கொண்டேயிருக்கும் . இக்காலத்தில் விட்டுக் கொடுத்துப் போவது தான் உங்கள் வெற்றிக்கு வழிகாட்டும்.

அதே நேரத்தில் புனர்பூசம் நட்சத்திரத்தில் வியாழன் சாரத்தில் கேது சஞ்சரிக்கிறார். மே 2010 க்கு மேல் திருவாதிரை நட்சத்திரத்தில் ராகு காலில் கேது சஞ்சரிக்கிறார் இதன் விளைவாக ஊர் மாற்றம் வீடு மாற்றங்களைச் சந்திக்கக் கூடிய சூழ்நிலை ஒரு சிலருக்கு உருவாகும். நாடு மாற்றங்களுக்கு வித்திட்டவர்களுக்கு நல்ல பதில் கிடைக்கும். வீட்டிற்கு தேவையான விலை உயர்ந்த பொருட் களை வாங்கி மகிழ்வீர்கள் விருப்ப ஓய்வு பெற்ற பிறகு புதிய வேலையில் சேர எடுத்த முயற்சிக்கு வெற்றி கிடைக்கும் ஒப்பந்தங்களில் கையெழுத்திட்டு மகிழ்விர்கள்.

**ஜோதிடக் கலாமணி சிவல்புரி சிங்காரம்**

மூன்றாமிடத்தில் சஞ்சரிக்கும் ராகுவால் முன்னேற்றங்கள் கிடைக்கவும் ஒன்பதாமிடத்து கேதுவால் ஒளிமயமான வாழ்க்கை அமையவும் வெள்ளிக்கிழமை தோறும் அம்பிகை வழிபாட்டில் ஆர்வம் காட்டுங்கள்.

சுயஜாதகத்தில் சர்ப்ப கிரகங்களின் பலம் அறிந்து சர்ப்ப சாந்திகளை முறையாக செய்து வழிபட்டு வாருங்கள் நலங்கள் அனைத்தும் இல்லம் வந்து சேரும் .

(தொடரும்)

# வவுனியா முகாம் மாணவர்களின் கல்வி பாதிக்கப்பட்டுள்ளதாக கவலை

(கொழும்பு)

கல்விப் பொதுத்தராதர சாதாரண தரப் பத்திர பரீட்சைக்குத் தயாராகி வந்த வவுனியா முகாம்களைச் சேர்ந்த ஆயிரக்கணக்கான மாணவர்களின் கல்விச் செயற்பாடுகள் பாதிக்கப்பட்டிருப்பதாக வவுனியா தெற்கு வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி வி.ஆர்.ஏ.ஒஸ் வெல்ட் தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்,

இடம்பெயர்ந்தோருக்கான இடைத் தங்கல் முகாம்களில் உள்ளவர்களை துரித மீள் குடியேற்ற நடவடிக்கையின் கீழ் அரசாங்கம் அவர்களது சொந்த இடங்களுக்கு அனுப்பி வருகின்றது.

இடைத்தங்கல் முகாம்களில் உள்ள மக்கள் சொந்த இடங்களுக்குப் போய்விட வேண்டும் என்ற பரபரப்பான சூழ்நிலையில் தற்போது இருக்கின்றார்கள்.

இதனால் பல்வேறு சிரமங்களுக்கு மத்தியில் டிசம்பர் மாதப் பரீட்சைக்கு மாணவர்களை ஆயத்தப்படுத்துவதற்காக முன்னெடுக்கப்பட்டுள்ள வேலைத்திட்டங்கள் குழம்பிருப்பதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

இதுவேளை வவுனியா தெற்கு வலயக் கல்விப் பிரதேசத்திற்கு மீள் குடியேற்றத்திற்காக வந்துள்ள குடும்பங்களைச் சேர்ந்த ஆயிரக்கணக்கான மாணவர்களின் கல்வி வசதிகள் குறித்து கவனம் செலுத்தப்பட்டிருப்பதாக தெரிவிக்கப்படுகிறது. (6)

# அமைச்சர்கள் மற்றும் எம்.பிக்களுக்கு ஜனாதிபதி ஆலோசனை

(கொழும்பு)

அமைச்சர்கள் அரச தரப்பு நாடாளுமன்ற உறுப்பினர்கள் எதிர்க்கட்சி உறுப்பினர்களுடன் தொலைபேசிகளில் உரையாடும் போது மிக எச்சரிக்கையுடன் நடந்து கொள்ள வேண்டும் என ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ எச்சரிக்கை செய்துள்ளார்.

கடந்த வாரம் நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தின் போதே ஜனாதிபதி இவ்வாறு எச்சரிக்கை செய்துள்ளதாக தெரிய வருகின்றது.

அமைச்சர்களுடன் தொலை பேசி மூலம் உரையாடும் எதிர்க்கட்சி உறுப்பினர்கள் உரையாடலை பதிவு செய்து கொண்டு அவற்றை தவறான வழிகளில் செயற்படுத்த முனையலாம் என்பதனை ஜனாதிபதி சுட்டிக்காட்டி அது குறித்து எச்சரிக்கை செய்துள்ளதாக அரச வட்டாரங்கள் தெரிவித்துள்ளது. (6)

ஓநாயின் பசியும் தீரவேண்டும். ஆடும் உயிரோடு இருக்க வேண்டும். அந்த முறையில் உன் காரியங்களை நடத்து.

– இத்தாலி

வலம்புரி

## தேர்தலை சூடாக்கும் 'சரத்' என்ற இரு நாமங்கள்

தேர்தலை வரவேற்க தென்னிலங்கை தயாராகி வருகிறது. ஜனாதிபதித் தேர்தலை முதலில் நடத்துவதா? அல்லது பொதுத் தேர்தலை நடத்துவதா என்ற கேள்விகளுக்கு இதுவரை இறுதியான முடிவு எடுக்கப்படவில்லையாயினும், இரண்டு தேர்தல்களையும் நாடு மிக விரைவில் சந்திக்கவுள்ளதென்பதில் எந்த சந்தேகத்துக்கும் இடம் இல்லை.

தேர்தல் நெருங்கும் வேலையில் கட்சித் தாவல்கள், சுவட்டு முயற்சிகள், அதிவேகப் பிரசாரங்கள் என்பன உச்சம் பெறுவது வழமை.

ஆனாலும் இம்முறை தேர்தல் வித்தியாசமான கோணத்தில் நகர்வடைவதை காணமுடிகின்றது.

அதாவது, ஜனாதிபதித் தேர்தலில் பொது வேட்பாளர் ஒருவரை நிறுத்துவதில் எதிர்க்கட்சிகள் அனைத்தும் ஓர் இணக்கப்பாட்டை கண்டுள்ளமை நடைபெறப்போகும் தேர்தலின் முக்கிய அம்சமாகும்.

எப்பாடுபட்டாவது ஜனாதிபதி பதவியை தமக்காக்கிக் கொள்ள வேண்டும் என்பதில் எதிர்க்கட்சிகள் தீவிரமாக இருக்கின்றன.

இதில் இன்னும் ஓர் முக்கிய விடயம் ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடுவதைத் தியாகம் செய்துள்ளமையாகும்.

கடந்த ஜனாதிபதித் தேர்தலில் ரணில் விக்கிரமசிங்கவிற்கு வெற்றிபெறும் வாய்ப்பு இருந்த போதிலும் வடக்குக்கிழக்கு தமிழ் மக்கள் வாக்களிப்பதை தவிர்த்தமையால் அந்த வெற்றி கைமாறிப் போனதென்ற கருத்துண்டு.

நிலைமை இதுவாக இருக்கும்போது, விடுதலைப் புலிகளுடனான யுத்தத்தில் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ வெற்றி கண்டுள்ளமையால் சிங்கள மக்களின் வாக்கு அவருக்கே கிடைக்கும் என்பதை ரணில் விக்கிரமசிங்க தெளிவாகப் புரிந்து கொண்டார்.

இதனால் ஜனாதிபதிக்கு ஈடான–யுத்தவெற்றியில் பங்குடைய–அரசினால் புறந்தள்ளப்பட்ட ஒருவரை ஜனாதிபதித் தேர்தலில் நிறுத்துவதே ஒரே வழி என்ற எதிர்க்கட்சிகளின் முடிவுகளுக்கு ரணில் விக்கிரமசிங்க இறங்கிக் கொண்டார்.

நான் ஜனாதிப்தியாக இருக்க வேண்டும் என்பது முக்கியமல்ல; மகிந்த ராஜபக்ஷவை ஜனாதிபதியாக விடக்கூடாது என்பதே முக்கியமும் முதன்மையுமாகும் என்பது ரணிலின் நிலைப்பாடு.

இதன்காரணமாக எதிர்க்கட்சிகள் ஜனாதிபதித் தேர்தலில் பொது வேட்பாளரை நிறுத்துவதில் வெற்றி கண்டுள்ளது மட்டுமன்றி ஜெனரல் சரத் பொன்சேகாவே அந்த பொது வேட்பாளர் என்பதிலும் உறுதியாக உள்ளன.

அரசியலில் என்னமாற்றம் எப்போது நடக்கும் என நிறுத்திட்டமாக கூறமுடியாதாயினும் இம்முறை நடைபெறப்போகும் ஜனாதிபதித் தேர்தல் மிகக் காரசாரமாக இருக்குமென்பது உறுதி.

# இலங்கை அரசின் நடவடிக்கைகள் குறித்து உலக நாடுகள் அதிருப்தி

## கனேடிய தமிழர் பிரதிநிதிகளிடம்லிபரல் கட்சி பிரமுகர் தெரிவிப்பு

(கொழும்பு)

இலங்கை அரசு தமிழ் மக்களையும் இடம் பெயர்ந்து வாழும் அகதிகளையும் நடத்தும் விதம் பற்றி உலகநாடுகள் பல அக்கறை கொண்டுள்ளன. அந் நடவடிக்கைகள் குறித்து அதிருப்தியும் அடைந்துள்ளன.

அகதிகள் மீது நாமும் அக்கறை கொண்டுள்ளோம். இதை இலங்கை அரசு வேறு விதமாக பார்க்கின்றது. அதற்கு நாங் கள் பொறுப்பல்ல. என்னை இலங்கைக்குள் செல்ல விடாமல் தடுத்தது, அண்மையில் இலங்கைக்கு வரவிரும்பிய இரண்டு ஆளும் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்களை விஸா வழங் காமல் தடுத்தது.

இவ்வாறான சூழ் நிலைகளிலும் நாம் உலகெங்கும் இயங்கி வரும் மனிதநேய ஸ்தாபனங்களிடம் அடிக்கடி தொடர்பு கொண்டு இலங்கை அரசின் நடவடிக்கைகள் தொடர்பாக தொடர்ந்து கவனத்தோடு இருக்கும்படி கேட்டுவருகின்றோம் என கனடாவின் லிபரல்கட்சியின் முக்கிய தலைவர்களில் ஒருவரும் அந்தக் கட்சியின் வெளிநாட்டு விவகாரங்களுக்கான பேச்சாளருமான போப்றே தெரிவித்தார்.

அண்மையில் டொரேன்டோவில் நடைபெற்ற விசேட சந்திப்பு ஒன்றின்போதே அவர் இதை தெரிவித்தார். மேற்படி சந்திப்பின் போது கனடாவின் லிபரல் கட்சியின் முக்கிய உறுப்பினர் கணேசன் சுகுமார் மற்றும் கனமிய பல்லின பத்திரிகையாளர் சங்கத்தின் உப–தலைவர் ஆர். என்.லோகேந் திரலிங்கம் ஆகியோர் உட்பட பலர் கலந்து கொண்டனர் . அங்கு போப்றே தொடர்ந்து உரையாற்றுகையில்,

கனடிய லிபரல் கட்சியின் வெளிநாட்டு விவகாரங் களுக்கான பேச்சாளர் என்ற வகையிலும் நான் சம்பந்தப்பட்ட கனடிய அதிகாரிகளோடு தொடர்பு கொண்டு கனடிய அரசு இலங்கைக்கு தொடர்ந்து செய்து வரும் உதவிகள் தொடர்பாக மிகுந்த கட்டுப்பாடுகளை மேற்கொள்ளுமாறும் கேட்டு வருகின்றேன். கனடாவைப் போலவே பல உலக நாடுகள் இலங்கை அரசின் நடவடிக்கைகள் தொடர்பாக அதிருப்தி அடைந்துள்ளன.

இலங்கைத் தமிழர்கள் தொடர்ந்தும் அந்நாட்டு அரசாங்கத்தினால் துன்புறுத்தப்பட்டு வருகின்றார்கள் . இதை உலகம் நன்கு அறிந்து வைத்துள்ளது. வெளிநாடுகளில் வாழும் ஈழத் தமிழர்கள் தமது உறவுகள் அங்கு வாடுவதை நமது கவனத்திற்கு எடுத்து வருகின்றார்கள்.

அந்த மக்களுக்காக நாம் குரல் எழுப்புகின்றோம். கேள்வி கேட்கின்றோம் . இதைவிட நாம் வேறு எதையும் செய்யவில்லை. இலங்கை அரசிற்கு எதிராக நாம் எதையும் செய்யவில்லை. மனித நேய அடிப்படையிலும் ஜனநாயக வழியிலும் உங்கள் நாட்டுப் பிரச்சினையை தீர்த்து வையுங்கள் இதைத்தான் நாம் கேட்கின்றோம் என்றார். (6)

## மீள் குடியேற்றம் செய்யப்பட்டுள்ள

# துணுக்காய் பிரதேசத்திற்கு புலம் பெயர்ந்தோர் குழு பிரதி நிதிகள் இன்று விஜயம் செய்யவுள்ளனர்

(கொழும்பு)

புலம் பெயர்ந்துள்ள தமிழ் மக்கள் சார்பிலான குழுவின் பிரதிநிதிகள் இன்று முல்லைத்தீவு மாவட்டத்தின் துணுக்காய் பிரதேசத்திற்கு விஜயம் செய்யவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

துணுக்காய் பிரதேச செயலாளர் பிரிவில் நடைபெற்று வருகின்ற மீள் குடியேற்ற நடவடிக்கைகளை இந்தக்குழுவினர் நேரடியாகப்பார்வையிடுவதுடன் , மீளக் குடியமர்த்தப்பட்டுள்ள பொதுமக்களையும் சந்தித்து அவர்களின் நிலைமைகள் குறித்து கேட்டறிந்துகொள்வார்கள் எனத் தெரிகின்றது.

வடக்கின் வசந்தம் திட்டத்தின் தலைவரும் ஜனாதிபதியின் விசேட ஆலோசகருமாகிய பஷில் ராஜபக்ஷவின் பணிப்புரைக்கமைய இந்தப் பிரதிநிதிகள் துணுக்காய்பிரதேசத்திற்கு அதிகாரிகளினால் அழைத்துச்செல்லப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இராணுவத்தின் கட்டுப்பாட்டில் உள்ள சிவில் நிர்வாகச் செயற்பாடுகள் இடம் பெற்று வருகின்ற யாழ்ப்பாணம் , வவுனியா, மன்னார், திருகோணமலை, மட்டக்களப்பு, அம்பாறை ஆகிய மாவட்டங்களை விட வன்னிப்பிரதேசத்தினுள் முல்லைத்தீவு மாவட்டத்திலேயே முதல் முறையாக மீளக் குடியமர்வு நடவடிக் கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

போரினால் முழுமையாக அழிந்து ஆளரவமற்ற பிரதேசமாகவுள்ள முல்லைத்தீவு மாவட்டத்தில் குடியேறுகின்ற மக்கள் தமது வாழ்க்கையை சூனியத்தில் இருந்து ஆரம்பிக்க வேண்டியுள்ளது.

இந்த நிலையில் இங்கு நடைபெற்று வருகின்ற மீளக் குடியேற்ற நடவடிக்கைகள் குறித்து நேரில் கண்டறிவதற்காக புலம்பெயர்ந்தோர் குழுவின் பிரதிநிதிகள் வருகை தருவது முக்கியத்துவம் மிக்க ஒரு விடயமாகவே கருதப்படுகின்றது. மீள் குடியேற்றம் நடைபெற்று வருகின்ற துணுக்காய் பிரதேசத்திற்கு நேற்று முன்தினம் உலக வங்கி அதிகாரிகள் விஜயம் செய்து நிலைமைகளை நேரில் கண்டறிந்துள்ளார்கள். மீள் குடியேற்றத்திற்காக நடைபெற்று வருகின்ற உட்கட்டமைப்பு நிர்மாணப்பணிகள் மற்றும் இடம்பெயர்ந்த மக்களின் மீள் குடியேற்றம் என்பன குறித்து உலக வங்கி அதிகாரிகள் திருப்தி தெரிவித்திருப்பதாகக் கூறப்படுகின்றது.

ஏனைய மாவட்டங்களில் இடம்பெறுகின்ற மீள் குடியேற்ற நடவடிக்கைகளிலும் பார்க்க முல்லைத்தீவு மாவட்டத்தில் மீள்குடியேற்ற நடவடிக்கைகள் சிறப்பாக இருப்பதாகவும் அவர்கள் அதிகாரிகளிடம் கருத்துவெளியிட்டிருப்பதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. (6)

# மின்னொளி விளையாட்டு நிகழ்வுகளை ஆரம்பிக்க வேண்டும் என்ற ஆசை நிறைவேறியது

## அமைச்சர் டக்ளஸ் பெருமிதம்

யாழ். குடாநாட்டில் மின்னொளியில் விளையாட்டு நிகழ்வுகள் ஆரம்பிக்கப்பட வேண்டும் என்ற ஆசை வெகு நீண்ட நாட்களாக இருந்து வந்தது. அந்த ஆசை இன்று நிறைவேறுவதையிட்டு தான் மிகுந்த மகிழ்ச்சி அடைவதாகவும், தற்போது அமுலிலிருக்கும் ஊரடங்கு சட்டத்தை வெகு விரைவில் முழுமையாக நீக்குவதற்கு நடவடிக்கை எடுக்கவிருப்பதாகவும் சமூக சேவைகள் மற்றும் சமூக நலத்துறை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்தார்.

நேற்று முன்தினம் இரவு கொக்குவில் இந்துக்கல்லூரி கூடைப்பந்தாட்டத் திடலில் மின்னொளி திறப்பு விழாவில் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு உரையாற்றிய போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

பாடசாலை அதிபர் அ.அகிலதாஸ் தலைமையில் நடைபெற்ற மேற்படி விழாவில் தொடர்ந்து கருத்துத் தெரிவித்த அமைச்சர், யுத்த சூழ்நிலையில் இருந்து விடுபட்டு வருகின்ற எமது மக்களுக்கு நல்லதொரு எதிர்காலத்தை அமைத்துக் கொடுக்க வேண்டும் என்ற ரீதியில் தற்போது அதற்கான அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொண்டுள்ளேன். எம் மக்கள் முகங்கொடுத்து வருகின்ற அனைத்துத் தடைகளையும் வெகுவிரைவில் நீக்கி அம்மக்களுக்கு ஒளிமயமான தொரு எதிர்காலத்தை அமைத்துக் கொடுக்கும் முகமாக நான் முன்னெடுத்து வரும் செயற்திட்டத்துடன் அனைவரும் ஒன்றிணைந்து செயற்பட முன்வர வேண்டும் எனவும் அவர் கூறினார்.

மேற்படி விழாவின் போது நடைபெற்ற கூடைப்பந்தாட்டப் போட்டியில் பெண்கள் பிரிவில் கொக்குவில் இந்துக் கல்லூரி அணியும் ஆண்கள் பிரிவில் கொக்குவில் சனசமூக நிலைய அணியும் வெற்றி பெற்றன. வெற்றி பெற்ற அணிகளுக்கான கேடயங்களை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா வழங்கினார். (சு)

# சுவாமி விவேகானந்தரின் அறிவுரைகள்

## மனிதன் தனது விதியைத் தானே அமைக்கிறான்



விதி என்றால் என்ன? அது எங்கே இருக்கிறது? எதை விதைத்தோமோ அதைத்தான் அறுவடை செய்கிறோம் .நமது விதியை நாமே வகுத்துக் கொள்கிறோம். எனவே அதன் பொருட்டுத் தூற்றுவதற்கும் ஒருவருமில்லை ; பாராட்டுவதற்கும் ஒருவருமில்லை. காற்று வீசியபடி இருக்கிறது. பாய் மரங்களை விரித்துக் காற்றைத் தமக்குச் சாதகமாகப் பயன்படுத்திக்கொள்ளும் கப்பல்கள் தங்கள் வழியே முன்னேறிச் செல்கின்றன.

ஆனால் பாய்களைச் சுருட்டி வைத்துள்ள கப்பல்கள் காற்றை ஏற்றுப் பயன் பெறுவதில்லை. இது காற்றினுடைய குற்றமாகுமா?

## வவுனியா நிவாரணக் கிராமங்களிலிருந்து

# விடுவிக்கப்பட்ட அம்பாறை மாவட்ட மக்கள் நிர்க்கதியான நிலையில்

(கொழும்பு)

வவுனியா நிவாரணக் கிராமங்களில் தங்க வைக்கப்பட்டு 4 கட்டங்களில் அம்பாறை மாவட்டத்திற்குக் கொண்டுவரப்பட்ட 596 தமிழ் மக்கள் நிர்க்கதியான நிலையில் இருப்பதாகக் கூறப்படுகிறது.

பொத்துவில், திருக்கோவில், ஆலையடி வேம்பு, காரைதீவு, நாவிதன் வெளி, கல்முனை போன்ற கிராமங்களைச் சேர்ந்த இவர்களில் பலர் நீண்டகாலமாக வன்னியில் செல்வச் செழிப்புடன் வாழ்ந்து வந்தவர்கள். இன்று வீடு வாசல் இழந்து உடுத்த உடையுடன் கையில் அகப்பட்ட பொருட்களுடன் பல சிரமங்களுக்கு மத்தியில் வந்து சேர்ந்த இவர்களுக்கு எந்த விதமான சீரான உதவியும் கிடைக்கவில்லையென தெரிவிக்கப்படுகிறது.

வன்னியிலிருந்து காரைதீவு விபுலானந்த மத்திய கல்லூரிக்குக் கொண்டு வரப்பட்டு அங்கிருந்து தத்தம் சொந்த இடங்களுக்கு அனுப்பப்பட்ட 596 தமிழ் மக்களில் முதல் தொகுதியில் 180 பேரும் இரண்டாவது தொகுதியில் 130பேரும் மூன்றாவது தொகுதியில் 250 பேரும் நான்காவது தொகுதியில் 36 பேரும் அடங்குவர்.

அத்துடன் அம்பாறை மாவட்ட அகதிகள் அனைவரும் வந்து சேர்ந்துள்ளதாகவும் இனி அங்கு யாருமில்லையென அரச வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

இவ்விதம் கொண்டுவரப்பட்ட 596 தமிழ் மக்கள் தத்தம் உறவினர் வீடுகளில் தற்காலிகமாக தஞ்சமடைந்துள்ளனர். இவர்களில் விதவைகள் , கணவர் தடுத்து வைக்கப் பட்ட நிலையில் குழந்தைகளுடன் வந்த பெண்கள் என இன்னும் பலர் உள்ளனர். இந்நிலையில் இவர்கள் எத்தனை நாட்களுக்கு உறவினர் வீடுகளில் தஞ்சம் கிடப்பது?

இவர்களுக்கு குறிப்பிட்ட பிரதேசங்களில் அரச காணியுள்ள ஒரு பிரதேசத்தில் தற்காலிக கொட்டில்களையாவது அமைத்து மீளக்குடியேற்ற முடியாதா? என பொதுநல அமைப்புகள் கேள்வியெழுப்புகின்றன.

உலக உணவுத் திட்டத்தின் கீழ் இவர்களில் பலருக்கு மாதாந்தம் அரிசி வழங்கப்படுவதாகக் கூறப்படுகின்ற போதிலும் சீரான விநியோகம் இல்லையெனக் கூறப்படுகிறது.

இவர்களது புனர்வாழ்வில் இத் தரப்பினர் பங்களிக்க வேண்டும். வீடு கட்டி சகல வசதிகளுடனும் அவர்கள் மீளக் குடியமர்த்தப்பட வேண்டுமென்பதே பொது அமைப்புக்களது வேண்டுகோளாகும்.

ஒரு சிலர் சொந்த இடங்களில் மீளக் குடியமர்ந்துள்ளனர். ஆனால் 95 வீதமான மக்கள் உறவினர் நண்பர்கள் வீடுகளில் காலம் கடத்தி வருகின்றனர்.

சர்வதேச அகதிகளுக்கான ஸ்தாபனம், தமிழ் அரசியல்வாதிகள் கவனம் செலுத்துவார்களா? என இவர்கள்அங்கலாய்க்கின்றனர். (6)

## தனியார் நிறுவனத்தின் உதவியுடன்

## வடக்கு, கிழக்கு மாகாணங்களைச் சேர்ந்த

# 100 பாடசாலைகளை கணனிமயப்படுத்த திட்டம்

(கொழும்பு)

தனியார் கணினி நிறுவனம் ஒன்றின் ஒத்துழைப்புடன் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களைச் சேர்ந்த 100 பாடசாலைகள் கணனி மயப்படுத்தப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதுதொடர்பான ஆக்கபூர்வ நடவடிக்கைகள் தற்போது முன்னெடுக்கப்பட்டு வருவதாக "இன்ரெல்" கணனி உற்பத்தி நிறுவனத்தின் தெற்காசியப் பிராந்தியத்திற்கான விற்பனை முகாமைத்துவப் பணிப்பாளர் ஆர்.சிவகுமார் தெரிவித்துள்ளார்.

யுத்தம் நிறைவடைந்து சாதகமான சூழ்நிலை நிலவும் வடக்கு, கிழக்கு பிராந்தியப் பாடசாலை மாணவர்கள் கணனி பயன்பாட்டின் நன்மையினைப் பெற்றுக்கொள்ளுமுகமாக தெரிவுசெய்யப்பட்டுள்ள பாடசாலைகளுக்கு இணையத்தள வசதியும் செய்துகொடுக்கப் படவுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

அதிவேகமாக வளர்ந்து செல்லும் தகவல் தொழில்நுட்பத்தின் சிறந்த பாதையில் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களைச் சேர்ந்த மாணவர்களையும் பயணிக்கச் செய்வதற்கான முயற்சியின் ஓர் அங்கமாக பாடவிதானத்திற்கு துணைபுரியும் வகுப்பறைக் கணனிப் பாவனை. தொடர்பான அறிவூட்டல் நிகழ்ச்சித் திட்டங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

பாடவிதானத்தில் தகவல் தொழில்நுட்பத்தை எவ்வாறு பயன்படுத்துவது, தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தும்போது ஏற்படும் பிரச்சினைகளுக்கு எவ்வாறு தீர்வு காண்பது, மாணவர்களின் தகவல் தொழில் நுட்ப அறிவாற்றலை எவ்வாறு விருத்தி செய்வது போன்ற அறிவூட்டல் பயிற்சிகள் இப்பாடசாலையைச் சேர்ந்த ஆசிரியர்களுக்கும் வழங்கப்படவுள்ளன.

இன்ரெல் நிறுவனமானது ஏறக்குறைய 50 நாடுகளில் உள்ள 6 மில்லியன் ஆசிரியர்களுக்கு இது தொடர்பான கற்பித்தல் பயிற்சிகள் வழங்கியுள்ளதாகவும் இந்நிகழ்ச்சி திட்டம் பெரும் வெற்றியளித்துள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார். (6)

# தி.மு.க., விடுதலைச் சிறுத்தைகள் இடையிலான உறவை முறிக்க முயற்சி

## திருமாவளவன் தெரிவிப்பு

தி.மு.க.வுக்கும் விடுதலைச் சிறுத்தைகளுக்கும் இடையேயான நல்லுறவு பாதிக்கும் வகையில் காவல்துறையின் போக்கு உள்ளதாக விடுதலைச் சிறுத்தைகள் கட்சித் தலைவர் தொல்.திருமாவளவன் கூறியுள்ளார்.


இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் சென்னை அசோக் நகர் நூறடி சாலையில் விடுதலைச் சிறுத்தைகள் கட்சியின் தலைமை அலுவலகம் இயங்கி வந்தது. இந்நிலையில், உயர்நீதிமன்ற தீர்ப்புக் காரணமாக அரசுக்கும் , காவல்துறைக்கும் நெருக்கடி ஏற்படாத வகையில் தலைமை அலுவலகத்தை காலி செய்து நிலத்தை காவல்துறையினரிடம் ஒப்படைத்தோம். அந்த நிலத்தை எதிர்தரப்பிடம் ஒப்படைக்கும்படி தீர்ப்பில் எதுவும் குறிப்பிடப்படவில்லை. ஏனெனில் இந்த நில உரிமை தொடர்பான வழக்கு இன்னும் நிலுவையில் உள்ளது. இந்த நிலையில் எதிர் தரப்புக்கு ஆதரவாக காவல்துறையினரே நேற்று முன்தினம் சனிக்கிழமை அதிகாலை 3 மணியளவில் அந்த நிலத்தை ஆக்கிரமித்து எங்களது கட்டடங்களை இடித்துள்ளனர்.

உயர்நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ள உரிமை வழக்கு முடியும் வரையில் அந்த நிலத்தை எதிர் தரப்பிடம் ஒப்படைக்கக்கூடாது என்பதேவிடுதலைச் சிறுத்தைகளின் கருத்தாகும். காவல்துறையினரின் நடவடிக்கைகளை எதிர்த்த விடுதலைச் சிறுத்தைக் கட்சியினர் மீது பொலிஸார் தடியடி நடத்தியுள்ளனர். காவல்துறையி னரை ஆயுதங்களால் தாக்க வந்ததாக 15பேர் மீது பொய் வழக்கும் போடப்பட்டுள்ளது. இதைக் கண்டிக்கும் வகையில் தமிழகம் முழுவதும் ஆர்ப்பாட்டம் நடத்திய விடுதலைச் சிறுத்தைகள் கட்சியினர் கைது செய்யப்பட் டுள்ளனர்.


இந்த நிலப்பிரச்சினையில் மட்டுமன்றி கடந்த சில மாதங்களில் மட்டும் விடுதலைச் சிறுத்தைகள் கட்சியைச் சேர்ந்த 30க்கு மேற்பட்டவர்கள் குண்டர் தடுப்பு மற்றும் தேசிய பாதுகாப்புச் சட்டங்களில் கைது செய்யப்பட்டுள்ளனர். அதேபோல் மரக்காணம் அருகே தலித் இளைஞர்கள் படுகொலையிலும் தலித் மக்கள் மீதே பொய்வழக்கு போடப்பட்டுள்ளது.

தமிழக காவல்துறையின் இந்தப்போக்கு விடுதலைச் சிறுத்தைகளின் கட்சிக்கும் , தி.மு.கவுக்கும் இடையிலான நல்லுறவை பாதிப்படையச் செய்யும் சதிமுயற்சியோ என்ற ஐயத்தை பரவலாக ஏற்படுத்தியுள்ளது என்று அந்த அறிக்கையில் திருமாவளவன் கூறியுள்ளார். (6)


# நிகழ்வுப் பதிவுகள்




கைதடி முத்துக்குமாரசுவாமி மகாவித்தியாலயத்தில் அண்மையில் நடைபெற்ற பரிசளிப்பு விழாவில் சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்ட திருமதி சத்தியநாதன் வித்தியாலய மாணவன் சு.கேதீஸ்வரனுக்கு பரிசில் வழங்குவதைப் படத்தில் காணலாம்.



வடமராட்சி லயன்ஸ் கழகத்துக்கு அண்மையில் உத்தியோகபூர்வ விஜயத்தை மேற்கொண்ட வலயத்தலைவர் லயன் கே.எஸ்.தவச்செல்வன் உரையாற்றுவதைப் படத்தில் காணலாம். (படம்:வடமராட்சி நிருபர்)




கைதடி முத்துக்குமாரசுவாமி மகாவித்தியாலயத்தில் அண்மையில் நடைபெற்ற "வேலைகளை இலகுவாக்கல்" தொடர்பான இறுவெட்டு வெளியீட்டு நிகழ்வில் நூல்வெளியீட்டாளர் திருமதி த.சூரியகுமாரன் உரையாற்றுவதையும், அருகில் அதிபர் சி.பவளகுமாரன், உபஅதிபர் திருமதி ப.செல்வநாயகம் ஆகியோர் அமர்ந்திருப்பதையும் படத்தில் காணலாம்.



மட்டுவில் தெற்கு சரஸ்வதி வித்தியாலயத்தில் அண்மையில் நடைபெற்ற தமிழ் செயற்பாட்டு முகாம் நிகழ்வில் ஆசிரியை த.சிவபாமா மங்கல விளக்கேற்றுவதையும், அருகில் வித்தியாலய அதிபர் கா.குணசிங்கம், தரம் ஒன்று மாணவர்கள் மற்றும் பெற்றோர்களையும் படத்தில் காணலாம்.

# யாழ். மாவட்டத்தை சேர்ந்த மக்களின் மீள்குடியமர்வு இவ்வாரம் நிறைவடையும்

## யாழ். அரச அதிபர் தெரிவிப்பு



(யாழ்ப்பாணம்)

வவுனியா நலன்புரி முகாம்களில் தங்க வைக்கப்பட்டுள்ள யாழ். மாவட்டத்தை சொந்த இடமாகக் கொண்ட மக்களின் மீள் குடியேற்றப் பணிகள் இவ்வாரம் நிறைவடையுமென யாழ். அரச அதிபர் க.கணேஷ் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தகவல் தருகையில்,

வவுனியா நலன்புரி முகாம்களில் யாழ். மாவட்டத்தை சொந்த இடமாகக் கொண்ட 15 ஆயிரத்து 167 குடும்பங்களைச் சேர்ந்த 44 ஆயிரத்து 974 பேர் தங்கவைக்கப்பட்டுள்ளனர் என ஆகஸ்ட் மாதம் வவுனியா மாவட்ட செயலகத்திற்கு அறிவிக்கப்பட்டது.

இதற்கமைய நேற்று வரை யாழ். மாவட்டத்தைச் சொந்த இடமாக்க கொண்ட 14 ஆயிரத்து 903 குடும்பங்களைச் சேர்ந்த 46 ஆயிரத்து 168 பேர் வவுனியா நலன்புரி முகாம்களிலிருந்து அழைத்து வரப்பட்டு மீள் குடியமர்த்தப்பட்டும் உறவினர் நண்பாக்களுடனும் தங்க அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

அத்துடன் மீதமுள்ள யாழ். மாவட்டத்தை சொந்த இடமாகக் கொண்ட மக்க்ள் இவ்வார இறுதிக்குள் யாழ்ப்பாணத்திற்கு அழைத்து வரப்பட்டு மீள்குடிய மர்த்தப்படுவர் அல்லது உறவினர் நண்பர்களுடன் தங்குவதற்கு அனுமதிக்கப்படுவர்.

**தங்குமிட வசதிகள்**
**திருப்திகரமாக இல்லை**

இதுவரை நலன்புரி முகாம்களில் இருந்து யாழ். மாவட்டத்தில் குடியமர்த்தப்பட்டுள்ள சில குடும்பங்களின் தங்குமிட வசதிகள் திருப்திகரமானதாக இல்லை. ஆகவே மீள் குடியமர்த்தப்பட்டுள்ள மக்களின் வதிவிடங்களுக்கான வசதிகளை ஏற்படுத்திக் கொடுப்பதற்கான பணிகள் இவ்வாரம் ஆரம்பிக்கப்படும்.

அந்தந்த பிரதேச செயலாளர்கள், உதவி அரசாங்க அதிபர்கள் தமது பகுதியில் குடியமர்த்தப்பட்டுள்ள குடும்பங்களிற்கு தங்குமிட அடிப்படை வசதிகள் ஏற்படுத்திக் கொடுக்க வேண்டிய குடும்பங்களை அடையாளம் காண்பார்கள்.

குறித்த குடும்பங்களுக்கு கூரைத்தகடுகள் வழங்கப்படும். அல்லது தங்குமிட வசதிகள் அற்றவர்களுக்கு தற்காலிக வீடுகள் அமைத்துக் கொடுக்கப்படும் அத்துடன் அக்குடும்பங்களுக்கு குடிநீர் வசதி, மலசலகூட வசதி உட்பட ஏனைய தேவைகளுக்குமான வசதிகள் ஏற்படுத்திக் கொடுக்கப்படும். அதற்கு ஐ.நா அபிவிருத்தி நிறுவனமும் தயாராக உள்ளது.

**யூ.என்.எச்.சி.ஆர்**
**நிறுவனத்தின் உதவிகள்**

தற்போது மீள் குடிமர்த்தப்படும் குடும்பங்களுக்கு யூ.என்.ஏச்.சி.ஆர் நிறுவனம் உலக உணவுத்திட்டத்தின் உதவியுடன் 6 மாத காலத்திற்குரிய உலர் உணவு நிவாரணத்தை வழங்குகின்றது.

அத்துடன் மீள்குடியமர்த்தப்படும் ஒவ்வொரு குடும்பங்களின் தனிப்பட்ட வங்கிக் கணக்குகளிலும் தலா 20 ஆயிரம் ரூபாய் பணத்தை வைப்பில் இடுகின்றது.

இத்திட்டத்தில் நெடுந்தீவு உதவி அரசாங்க அதிபர் பிரிவில் குடியமர்த்தப்பட்ட 240 குடும்பங்களில் 230 குடும்பங்களுக்கு நிதிவழங்கப்பட்டுள்ளது.

இவற்றுடன் மீள் குடியமர்த்தப்படும் போது ஒவ்வொரு குடும்பங்களுக்கும் தண்ணீர் கான், பிளாஸ்ரிக் பாய், படுக்கை விரிப்பு, துவாய், நுளம்பு வலை, சமையல் இயந்திரங்கள், பிளாஸ்ரிக் வாளி, பிளாஸ்ரிக் பாத்திரம், உடுபுடைவைகள், சுகாதாரப்பொதி, நைலோன் கயிறு, கூரை, பிளாஸ்ரிக் துணி என்பன அடங்கிய பொதியையும் யூ.என்.ஏச்.சி.ஆர் நிறுவனம் வழங்குகின்றது. இதற்கு மேலாக மீள் குடியமர்த்தப்பட்டுள்ளவர்களில் தங்குமிட வசதிகள் அற்றவர்களுக்கு 12 கூரைத் தகரங்கள் வழங்கப்படுகின்றது.

உண்மை நிலைமை அறிந்தால் மேலதிகமாகவும் வழங்கப்படும். இத்திட்டம் உடுவில் பிரதேச செயலக பிரிவில் முதல் கட்டமாக ஆரம் பிக்கப்பட்டுள்ளது என யாழ். அரச அதிபர் க.கணேஷ் குறிப்பிட்டார். (ச-5)



உள்ளூராட்சி மன்றங்களில் பெண்களுக்கு 25 வீத ஆசனங்களை சட்ட பூர்வமாக ஒதுக்கக்கோரும் மாவட்ட ரீதியிலான கையெழுத்து பிரசார ஆரம்ப நிகழ்வு நேற்று யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெற்றது. இந்நிகழ்வில் பெண்கள் அமைப்பின் இணைப்பாளர் கலாநிதி சுஜாதா கமகே உரையாற்றுவதையும் நிகழ்வில் கலந்து கொண்ட அதிதிகள் மற்றும் பெண்கள் அமைப்புக்களின் பிரதி நிதிகளையும் கலை நிகழ்வையும் படங்களில் காணலாம்.

# சிறுபான்மை இனங்களின் உரிமைகளை பாதுகாக்க மத்திய அரசு உதவ வேண்டும்

## தமிழக முதல்வருக்கு ஆனந்தசங்கரி கடிதம்

சிறுபான்மைக்கட்சிகள் ஒன்றிணைந்து சிறுபான்மை இனங்களின் உரிமைகளை பாதுகாக்க திடசங்கற்பம் பூண்டுள்ளதாகவும் இதற்கு இந்திய மத்திய அரசை இணங்க வைக்கச் செய்யவேண்டுமெனவும் தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைவர் வி.ஆனந்தசங்கரி, தமிழக முதல்வர் மு.கருணாநிதிக்கு எழுதியுள்ள கடிதத்தில் கோரியுள்ளார்.

அக்கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

எமது பிரச்சினைக்கு எப்போது தீர்வு கிட்டுமென முழு உலகும் ஆவலுடன் எதிர்பார்த்து நிற்கிறது. துரதிர்ஷ்டவசமாக எமது பிரச்சினை தீர்வுக்காக ஏற்பட்ட பல வாய்ப்புகளைநாம் இழந்து நிற்கின்றோம். இனப்பிரச்சினைத் தீர்வு இந்திய அரசியல் சாசனத்தின் முன் மாதிரியாகக் கொண்டு தீர்வு காணப்பட வேண்டுமென்று நான் ஆலோசனை வழங்கியிருந்தேன். சிறிதும் எதிர்பாராத இடங்களில் இருந்தும் கூட அந்த ஆலோசனைக்கு மிகப் பெரும் வரவேற்பு இருந்தது. இந்தியாவின் பல்வேறு மாநிலங்களுக்கு வழங்கப்பட்டிருக்கும் அதிகாரத்தையொத்த அதிகாரப்பகிர்வு இலங்கையின் மாகாணசபைகளுக்கு வழங்கினால் சிறுபான்மை மக்களின் அபிலாஷைகளை நிறைவேற்றுவதோடு இலங்கைவாழ் மக்களின் பெரும்பாலானோர்க்கும் ஏற்புடையதாக இருக்கும். அண்மையில் இலங்கைக்கு விஜயம் செய்த இந்திய நாடாளுமன்றக் குழுவினர், பிரதமர் மன்மோகன் சிங்கை சந்தித்த போது விரைவில் இலங்கையிலிருந்து ஒரு உயர் மட்டக்குழு புதுடில்லிக்கு வர இருப்பதாகவும் அவர்களுடன் முக்கிய இரு பிரச்சினைகளான அரசியல் தீர்வு, இடம் பெயர்ந்தோரின் மீள் குடியேற்றம் போன்றவை பற்றி பேசும் சந்தர்ப்பம் உண்டென குறிப்பிட்டதாக அறிகின்றேன். இந்த விடயமே இக் கடிதத்தை எழுத என்னைத் தூண்டியது.


நிரந்தர தீர்வு காண்பதற்கு மேற்கொண்ட பல்வேறு முயற்சிகளும் கடும் போக்காளர்களின் செயற்பாட்டால் குழப்பத்திற்குள்ளாகி நிலைமை நாளுக்கு நாள் மோசமடைந்து இந்த ஆண்டின் முற்பகுதியில் உச்சக்கட்டத்தை அடைந்து 2009மே 18ஆம் திகதி ஒரு முடிபுக்கு வந்தது. மொத்த விளைவு இலங்கையின் 25 மாவட்டங்களில் தமிழ் பேசும் மக்களை பெரும்பான்மையாகக் கொண்ட 08 மாவட்டங்கள் அழிந்தன. கடந்த கால் நூற்றாண்டு காலமாக சிங்கள, தமிழ், முஸ்லிம் மற்றும் பல்வேறு சமூகத்தினரும் எதுவித வேறுபாடின்றி பல்வேறு கஷ்டங்களை அனுபவித்தனர். கோடிக்கணக்கான பெறுமதியான பொது சொத்துகளும் அரச சொத்துகளும் அழிக்கப்பட்டன.

இடம் பெயர்ந்த மக்கள் இடத்துக்கு இடம் மாறி இறுதியில் உடைமைகள் அத்தனையையும் இழந்தனர். சிலர் தமது மனைவியர், அன்பு பெற்றோர், மக்கள் ஆகியோரை இழந்து அரச கட்டுப்பாட்டுப் பிரதேசத்திற்குள் வந்ததும் அரசால் முகாம்களுக்கு கொண்டு வரப்பட்டவேளை அவர்கள் எதுவுமற்றவர்களாகவும் உடுத்த உடையுடனும் வந்து சேர்ந்துள்ளனர். இரு மாதத்திற்குள் அவர்கள் மிக மோசமான சூழ்நிலையில் வாழ்ந்ததன் பின் அத்தனை பேரும் பரம ஏழைகளாக்கப்பட்டுள்ளனர். இப்போது அவர்கள் கடந்த சில மாதங்களாக பட்ட துன்பங்களை கூட கணக்கில் எடுத்துக் கொள்ளாமல் அனைவரும் பலாத்காரமாக எதுவித தேவையுமின்றி தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். விடுதலைப் புலிகளின் தீவிர உறுப்பினர்கள் ஏறக்குறைய அனைவரும் முகாம்களில் இருந்து தப்பி சென்று விட்டனர். ஒரு இலட்சத்து 50ஆயிரத்திற்கு மேற்பட்டவர்கள் தீவிர விசாரணைக்கு உட்படுத்தப்பட்டு அவர்களின் அப்பாவி பிள்ளைகள் 10 ஆயிரத்திற்கு மேற்பட்டோர் புலிகளின் சிறுவர் போராளிகளாக முத்திரை குத்தப்பட்டு பெற்றோர்களிடமிருந்து பலாத்காரமாக பிடிக்கப்பட்டு பல்வேறு பயிற்சிகளுக்காக புனர்வாழ்வு முகாம்களுக்கு அனுப்பப்பட்டுள்ளனர்.

அரசாங்கம் தற்போது முகாம்களில் உள்ளவர்களை பகுதி பகுதியாக மீளக்குடியமர்த்துவதற்காக விடுவித்து வருகிறது. அவர்களுக்கு 6 மாதகாலத்திற்கு போதுமான உலர் உணவு விவசாய கருவிகள் சிலவையும் சொற்ப உதவி பணத் தொகை மட்டும் வழங்குவது போதுமானதல்ல. சகல இடம் பெயர்ந்தோருக்கும் அவர்களுடைய இழப்புகளுக்கு ஏற்ப நட்டஈடு வழங்கப்பட வேண்டும். தங்களின் பங்களிப்புடனேயே இவர்கள் நட்டஈடு பெறுவது சாத்தியமாகும்.

நாடும் நாட்டு மக்களும் அதிகளவில் கஷ்டங்களுக்கு உள்ளாகி பலவற்றை இழந்துள்ளமையால் இந்த நாட்டிலோ அல்லது வேறு எங்கே யார் இருந்தாலும் இவ்வாறு மீண்டும் ஏற்படுவதை விரும்பமாட்டார்கள். இத்தகைய சம்பவங்கள் மீண்டும் ஏற்படக்கூடாது. ஒற்றையாட்சின்கீழ் எத்தகைய தீர்வு வழங்கப்பட்டாலும் கடும் போக்காளர்கள் எதிர்காலத்தில் அநாவசியமாக இதில் தலையிடும் வாய்ப்பைக் கொடுக்கும். ஆகவேதான் இந்திய முறையிலான ஒரு தீர்வை முன் வைக்குமாறு நான் வற்புறுத்தி வருகின்றேன். இந்தியர்கள் வேற்றுமையில் ஒற்றுமை காணும் சிறந்ததொரு கோட்பாட்டுக்கு அமைய தமது அரசியலமைப்பை உருவாக்கியுள்ளமையால் அம் மாதிரியான அமைப்புமுறை ஒற்றையாட்சி, சமஷ்டி ஆகிய வார்த்தைகளை விரும்பாதவர்களுக்கு ஏற்புடையதாக இருக்கும்.

ஆகவே சகல அரசியல் வேறுபாடுகளையும் வேற்றுமைகளையும் மறந்து தமிழ் நாட்டவர் அனைவரையும் ஒன்றிணைத்து அரசியல் தீர்வு காண்பதில் தங்களின் பங்களிப்பு இன்றியமையாததாகும். எங்களைப் பொறுத்தவரையில் சிறுபான்மைக் கட்சிகளை சேர்ந்த நாம் ஒரு பொது வேலைத்திட்டத்தின் கீழ் ஒன்றுபட்ட இலங்கைக்குள் சிறுபான்மை இனங்களின் உரிமைகளை பாதுகாக்க திடசங்கற்பம் பூண்டுள்ளோம். எனது வேண்டுகோளை தாங்கள் ஏற்று இந்தச் சந்தர்ப்பத்தை பயன்படுத்தி மத்திய அரசை இலங்கை சிறுபான்மை மக்களுக்கு ஏற்புடையதாகவுள்ள எனது ஆலோசனையை ஏற்றுக்கொள்ள வைக்க வேண்டுமென மிக விநயமாக கேட்டுக் கொள்கிறேன். தங்களை சந்தித்து இது சம்பந்தமாக மேலும் சில கருத்துகளை தெரிவிக்கும் வாய்ப்பை விரைவில் ஏற்படுத்தித் தருவீர்கள் என கேட்டுக்கொள்கிறேன்.





யாழ். மத்திய கல்லூரியில் நேற்று ஆரம்பமான உள்ளூர் உற்பத்திக்கான புதிய கண்டுபிடிப்பு மற்றும் விற்பனை கண்காட்சி நிகழ்வுக்கு சென்ற அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவை யாழ். அரச அதிபர் க.கணேஷ் வரவேற்பதையும் அரச அதிபர் மற்றும் அமைச்சர் கண்காட்சியை பார்வையிடுவதையும் படங்களில் காணலாம்.



சுன்னாகம் மின் விநியோக நிலையத்திற்கு சென்ற சமூக சேவைகள் மற்றும் சமூக நலத்துறை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, மின்சார சபையின் தலைவர் எதிரிசிங்க ஆகியோர் மின்சார நிலையத்தை பார்வையிடுவதை படங்களில் காணலாம்.

## கோத்தபாயவுக்கு எதிராக சாட்சி கூற...

இரண்டு ஐக்கிய அமெரிக்க அதிகாரிகள் தொலைபேசியூடாகத் தொடர்பு கொண்டு மேற்படி கோரிக்கையை விடுத்ததாகவும் அவர் தனது கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.

முன்னதாக யுத்தக் குற்றச் செயல்கள் தொடர்பில் ஜெனரல் சரத் பொன்சேகாவிடம் அமெரிக்க அதிகாரிகள் விசாரணைகளை நடத்தக்கூடுமென செய்திகள் வெளியாகிருந்தன.

தனிப்பட்ட காரணத்திற்காக தற்போது அமெரிக்காவிற்கு விஜயம் செய்துள்ள ஜெனரல் சரத் பொன்சேகாவிடம் அந்நாட்டு அதிகாரிகள் விசாரணைகளை நடத்தக் கூடுமென எதிர்வு கூறப்பட்டிருந்தது.

அமெரிக்க உள்துறைப் பாதுகாப்பு பிரிவுடன் ஜெனரல் சரத் பொன்சேகா சந்திப்பொன்றை நடத்த உள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டிருந்தது. இச்சந்திப்பு அமெரிக்காவின் ஒக்லொஹாமாவில் எதிர்வரும் நவம்பர் மாதம் 4ஆம் திகதி நடைபெறவிருந்ததாகவும் தகவல்கள் வெளியாகியிருந்தன.

ஜெனரல் சரத்பொன்சேகா அமெரிக்காவின் கிறீன் கார்ட் வதிவிட உரிமையைப் பெற்றுக் கொண்டவர் என்பது குறிப்பிடத்தக்கது.

இதேவேளை அமெரிக்க அதிகாரிகளின் விசாரணைகள் தொடர்பில் சட்ட ஆலோசனைகளை வழங்குமாறு முன்னாள் அமெரிக்க ஜனாதிபதிகளின் சட்ட ஆலோசகரான பெரட் பீல்டிங்கிடம் சரத் பொன்சேகா உதவி கோரியுள்ளார்.

இந்த விடயம் தொடர்பில் அமெரிக்காவிற்கான இலங்கைத்தூதுவர் ஜாலிய விக்ரமசூரிய, ரொபர்ட் பிளேக்கிடம் ஒத்துழைப்பு கோரியுள்ளார். யுத்தக் குற்றச் செயல்கள் தொடர்பில் ஏதேனும் சிக்கல்கள் ஏற்பட்டால் அதனை தீர்த்துக் கொள்வதற்கு ஒத்துழைப்பு வழங்குமாறு பிளேக்கிடம் அவர் கோரிக்கை விடுத்துள்ளார்.

அமெரிக்காவின் வதிவிட உரிமையைப் பெற்றுக் கொண்ட நபர் ஒருவருக்கு இராஜதந்திர பாதுகாப்பு வழங்கப்படமாட்டது என்பது குறிப்பிடத்தக்கது.

எனவே சரத் பொன்சேகாவிடம் விசாரணைகள் நடத்தப்பட்டால் ராஜதந்திர ரீதியிலான பாதுகாப்பினை அவர் பெற்றுக் கொள்ள முடியாது என அமெரிக்க சட்ட வல்லுனர்கள் தெரிவித்துள்ளனர்.

அமெரிக்கப் பிரஜைகளும் குடியுரிமை பெற்றுக் கொண்டவர்களும் அமெரிக்க சட்ட திட்டங்களுக்கு அடி பணிந்து செயற்பட வேண்டியது அவசியமானதென்க் தெரிவிக்கப்படுகிறது.

புலிகளுடனான யுத்தத்தின் போது இராணுவ சட்டங்களை மீறிச் செயற்பட வேண்டிய சந்தர்ப்பங்கள் ஏற்பட்டதாகவும் வெள்ளைக் கொடியுடன் சரணடைய முயற்சித்த விடுதலைப் புலி உறுப்பினர்கள் மீது தாக்குதல் நடத்தியதாகவும் ஜெனரல் சரத் பொன்சேகா கடந்த யூலை மாதம் 18ஆம் திகதி அம்பலாங்கொடையில் நடைபெற்ற விழாவொன்றில் குறிப்பிட்டுள்ளதாக அமெரிக்க காங்கிரஸுக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ச-3,5)

## என்னை எவரு...

இரவு 10 மணி முதல் 12 மணிக்கிடையிலான நேரத்தில் ஆவிகளுடன் உரையாடும் இணையத்தளம் வாயிலாக இடம்பெற்றுள்ளது. உங்கள் மரணத்திற்குயார் பொறுப்பாளி என ஜேன் வினவிய போது அதற்கு ஜக்சனின் ஆவி எவரும் பொறுப்பல்ல. மருந்துகளை நான் மித மிஞ்சி பாவிப்பது குறித்தும் அதனால் எதிர்கொள்ளக்கூடிய எதிர்மறையான விளைவுகள் குறித்தும் பல தடவை எச்சரிக்கை செய்யப்பட்டேன். எனினும் நோயின் உக்கிரம் தாங்க முடியாததாலும் மருந்துகளின்றி உயிர்வாழ முடியாது என்ற நிலைக்கு தள்ளப்பட்டு விட்டதாலும் மருத்துவர்களின் எச்சரிக்கைகளை பொருட்படுத்தவில்லை எனக் கூறியதாக தெரிவிக்கப்படுகின்றது.

மேலும் அவரது திஸ் இஸ் இட் என்ற திரைப்படம் வெளியானதையிட்டு ஜக்சன் மகிழ்ச்சி தெரிவித்ததாகவும் தான் பல முகங்களை கொண்டதோர் மனிதனாகவே வாழ்ந்ததால் உண்மையான தனது முகத்தை தானே ஒரு போதும் அறிந்திருக்க வில்லை எனக் கூறியதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

## வவு.நலன்புரி நிலையங்களி...

நலன்புரி முகாம்களில் தங்க வைக்கப்பட்டுள்ளவர்களில் யாழ்.மாவட்டத்தை சொந்த இடமாகக் கொண்ட 946 குடும்பங்களைச் சேர்ந்த 2ஆயிரத்து 139 பேர் இன்றுஅதிகாலை சாவகச்சேரி,பருத்தித் துறைக்கு அழைத்துவரப்பட்டனர்.

இதில் சாவகச்சேரி பிரதேச செயலக பிரிவைச் சொந்த இடமாகக் கொண்ட 729 குடும்பங்களைச் சேர்ந்த 2ஆயிரத்து 201 பேரும் பருத்தித்துறை பிரதேச செயலக பிரிவை நிரந்தர வதிவிடமாகக் கொண்ட 217 குடும்பங்களைச் சேர்ந்த 617 பேரும் அடங்குவர்.

இம்மக்கள் அழைத்துவரப்பட்டு அந்தந்த பிரதேச செயலக அலுவலர்களினாலும், படையினராலும் குடும்பப்பதிவுகள் மேற்கொள்ளப்பட்டு உறவினர்களுடன் செல்ல அனுமதிக்கப்பட்டனர்.

அத்துடன் வவுனியா நலன்புரி முகாம்களிலிருந்து இன்று முதல் வரும் வாகனத் தொடரணியில் சண்டிலிப்பாய் பிரதேச செயலக பிரிவைச் சேர்ந்த 678 பேர் அழைத்து வரப்பட்டு மானிப்பாய் இந்துக் கல்லூரியில் வைத்து குடும்பப்பதிவுகள் மேற்கொள்ளப்பட்டு உறவினர்களுடன் செல்ல அனுமதிக்கப்படுவர்.

தொடர்ந்து வவுனியாவிலிருந்து இரண்டாவதாக வரும் வாகனத்தொடரணியில் பல பிரதேச செயலக பிரிவைச் சேர்ந்த மக்கள் அழைத்துவரப்பட்டு யாழ். துரையப்பா விளையாட்டரங்கில் வைத்து குடும்பப்பதிவுகள் மேற் கொள்ளப்பட்டு உறவினர்களுடன் செல்ல அனுமதிக்கப்படுவர் என யாழ்.அரச அதிபர் க.கணேஷ் குறிப்பிட்டார். (ச-5)

## இலங்கையில்...

அமெரிக்கா சற்று விலகியிருக்க வேண்டும் என ஜே.வி.பி கட்சியின் தலைவர் சோமவன்ச அமரசிங்க தெரிவித்துள்ளார். கூட்டுப்படைகளின் கட்டளைத்தளபதி சரத் பொன்சேகாவிடம் விசாரணை நடத்தும் எந்தவொரு அதிகாரமும் அமெரிக்காவுக்கு கிடையாது. மனித உரிமை மீறல்கள் அல்லது குற்றச் செயல்கள் தொடர்பில் விசாரணைகளை நடத்தும் உரிமை அமெரிக்காவுக்கு இல்லை.

அமெரிக்கா போன்ற மேற்குலக நாடுகளினது உதவியின்றி மூன்றுதசாப்த காலயுத்தத்தை முடிவுக்கு முடியுமாயின் ஏனைய பிரச்சினைகளை தீர்ப்பது அவ்வளவு கடினமாக அமையாதென அவர் சுட்டிக் காட்டியுள்ளார். தமிழீழ விடுதலைப் புலிகளின் பிடியிலிருந்து நாட்டை மீட்டெடுத்தசகலரையும் பாதுகாக்க வேண்டியது அரசாங்கத்தின் முதன்மை கடமை என அவர் குறிப்பிட்டுள்ளார். (ச-5)

## இலங்கை அரசை பாதுகாக்க...

இருந்தார். உடனடியாக தென்னிந்தியாவில் நிலை கொண்டிருந்த இந்திய பரா துருப்புகள் உசார் நிலைக்குக் கொண்டு வரப்பட்டன. இலங்கைக்கான இந்தியத் தூதுவர் அலோக் பிரசாத்தை தனக்குத் துணையான வரும்படி ராஜபக்ஷ அவசர அழைப்பையும் விடுத்திருந்தார்.

உடனடியாக ஜனாதிபதியின் பாதுகாப்புப் பிரிவு இந்தியத் தூதரகத்திற்கு அனுப்பப்பட்டது. கறுப்பு பூனைகள் மற்றும் ஜனாதிபதியின் பாதுகாப்புப் படைப்பிரிவுகள் பாதுகாப்பு வழங்க இந்தியத் தூதுவர் அலோக் பிரசாத் அலரி மாளிகைக்கு அழைத்து வரப்பட்டார்.

இந்தியத் தூதுவருடன் அவரது நண்பரும் தொழில் அதிபருமான நடேசனும் உடன் அழைத்துவரப்பட்டிருந்தார். அவர் நிருபாமா ராஜபக்ஷவின் கணவராவார். நிருபாமா மகிந்த ராஜபக்ஷவின் மருமகளும், நாடாளு மன்ற உறுப்பினருமாவார்.

அலரிமாளிகையில் மகிந்தவுக்கும் இந்திய தூதுவருக்கும் இடையில் இரகசியபேச்சுக்கள் நடைபெற்றன. தனது ஆட்சிக்கு ஆபத்து ஏற்பட்டால் அதனை இந்திய இராணுவத்தின் துணையுடன் எவ்வாறு முறியடிப்பது என்பது தொடர்பாக அவர் ஆராய்ந்திருந்தார். இந்திய தூதரகத்தில் எதிர் நடவடிக்கை நிலையம்ஒன்றைஅமைப்பதற்கும் திட்டமிடப்பட்டது. அங்கிருந்து இலங்கையின் நிலைமைகளை கண்காணிக்கும் திட்டம் வகுக்கப்பட்டது. எனினும் மறுநாள் 16ஆம் திகதி காலை நிலைமை வழமைக்கு திரும்பி விட்டது.

இலங்கையில் புரட்சி ஒன்று ஏற்பட்டால் எவ்வாறு தடுப்பது என்ற இந்தியாவின் திட்டமும் பின்னர் கைவிடப்பட்டது. ஜனாதிபதிக்கும் இந்தியாவுக்கும் இடையில் நடைபெற்ற இந்த சம்பவங்கள் எதுவும் இலங்கை பாதுகாப்பு அமைச்சிற்கோ அல்லது புலனாய்வுத் துறைக்கோ தெரியாது என அதில் தெரிவிக்கப் பட்டுள்ளது. இதனைத் தொடர்ந்து மகிந்த திருப்திக்கு அவசர விஜயத்தை மேற்கொண்டிருந் தார் எனவும் அதில் மேலும் தெரிவிக்கப் பட்டி ருந்தது. (ச-5)

## இந்தியா-இலங்கைக்கிடையில்...

பாதுகாப்பு நிலைமைகள் தொடர்பாக இந்த சந்திப்பில் ஆராயப்படும்.

இலங்கையில் பதற்றமான நிலை தோன்றும் போது இந்தியா தனது படையை அனுப்ப தயாராக இருப்பது குறித்து நன்றியையும் இந்தக் குழு இந்தியத்தரப்புக்கு தெரிவிக்கும். கடந்த மே மாதத்தின் பின்னர் இலங்கையிலிருந்து உயர்மட்டக் குழு இந்தியா செல்வது இது இரண்டாவது தடவையாகும்.

கடந்த யூன் மாதம் முதலாவது விஜயம் அமைந்திருந்தது. இந்த விஜயத்தின்போது 13ஆவது திருத்தச்சட்டத்தை நடைமுறைப் படுத்துவது தொடர்பாக வாக்குறுதிகள் இந்தியாவுக்கு வழங்கப்பட்டிருந்தது.

இந்திய வெளிவிவகார அமைச்சர் எஸ்.எம். கிருஸ்ணா, தேசிய பாதுகாப்பு ஆலோசகர் எம்.கே.நாராயணன், வெளிவிவகார செயலாளர் நிருபாமாராவ், பாதுகாப்புத்துறை செயலாளர் பிரதீப்குமார் ஆகியோரை இலங்கைக் குழு சந்திக்கும் என தெரிவிக்கப்படுகிறது. (ச-5)

## ஜி.எஸ்.பி.பிளஸ் வரிச்சலுகை...

ஐரோப்பிய ஒன்றியம் மேலும் எட்டு மாதங்களுக்கு நீடிப்பு செய்யவுள்ளதாக ஐரோப்பிய ஒன்றியத்தை சேர்ந்த அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

அடுத்த வருடம் ஜூன் மாதம் வரையிலும் நீடிக்கப்படவுள்ள வரிச்சலுகையின் மேலதிக நீடிப்பு இலங்கை அரசின் மனித உரிமைகள் தொடர்பான மேம்பாட்டை பொறுத்து அமையும் என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

இதனிடையே அனைத்துலக விதிகள் இலங்கையில் மோசமாக மீறப்பட்டுள் ளது.

எதிர்வரும் வாரங்களில் ஐரோப்பிய ஒன்றிய ஆணைக்குழு தனது பரிந்துரைகளையும், செயல்திட்டங்களையும் ஐரோப்பிய ஒன்றியத் திடம் முன்வைக்கும்.

இந்த செயல்திட்டங்களை இலங்கை நிறைவேற்ற வேண்டும் என இலங்கை மற்றும் மாலைதீவுக்கான ஐரோப்பிய ஒன்றிய பிரதிநிதி பேர்னாட் சாவேஜ் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பான முடிபுகளை ஐரோப்பிய ஒன்றியம் மேற்கொள்ளும். எதிர்வரும் ஆறு மாதங்களில் இலங்கை அரசு அதிக செயற்திட்டங்களை முன்னெடுக்க வேண்டும் என நாம் எதிர்பார்க்கின்றோம் என அவர் மேலும் தெரிவித்துள்ளதாக கொழும்புத் தகவல்கள் தெரிவித்துள்ளன. (ச-5)

Microsoft Certified Systems Engineer 100% off for 20 students only
பரீட்சைக்கட்டணங்கள் அரசினால் வழங்கப்படுகின்றன.



★ Network Manager, System Admin.தொழில் வாய்ப்புக்கள்
★ சான்றிதழ் மூலம் வெளிநாட்டு விசாவிற்கான மேலதிக புள்ளிகள்
★ Microsoft நிறுவன அதிபர் Bill Gates வழங்கும் சான்றிதழ்
★ 12Routers,Servers மூலம் முழுமையான செயன்முறைப் பயிற்சி
MCS Supported By UNDP/JRRP
விபரங்கள், விளக்கங்களிற்கு நேரில் வருக.. 324, பலாலி வீதி, யாழ்ப்பாணம். பரமேஸ்வரா சந்தி அருகில், Bus Route - 764
0772395895 0718475501

## மரண அறிவித்தல்

### சோதிலிங்கம் மங்கையற்கரசி
### (மண்டைதீவு)



மண்டைதீவு 8ஆம் வட்டாரத்தை பிறப்பிடமாகவும், K.K.S. றோட், சம்பியன் வீதி, கொக்குவில் கிழக்கை தற்காலிக வதிவிடமாகவும் கொண்ட சோதிலிங்கம் மங்கையற்கரசி 01.11.2009 ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற சோதிலிங்கத்தின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற கமலாம்பிகை, சரஸ்வதி அம்மா, திலகவதி, தேவவதி, திருஞானசம்பந்தன் ஆகியோரின் அன்புச் சகோதரியும், இலட்சுமிகாந்தன் ( ஆசிரியர், உயரப்புலம் மகாவித்தியாலம், நாயன்மார்கட்டு மகேஸ்வரி வித்தியாலயம்), சுந்தரலிங்கம் (கிராம உத்தி யோகத்தர், கந்தர்மடம் தென்மேற்கு, ஜே/104), காலஞ்சென்ற பஞ்சலிங்கம் ஆகியோரின் அன்புத் தாயாரும், தனரஞ்சுதம் (உப அதிபர், யா/இளையதம்பி மகாவித்தியாலயம்), திருமதி ப.சுந்தரலிங்கம் (ஆசிரியை, யாழ். இந்து மகளிர் கல்லூரி) ஆகியோரின் அன்பு மாமியாரும், டினேஷாந் (யாழ். இந்துக்கல்லூரி), டிலக்ஷனா (வேம்படி மகளிர் கல்லூரி), ராஜ்காந், ஜெயகாந், விஜயராஜி, கஜலக்ஷி, யதீஸ்காந் (யாழ். இந்து ஆரம்ப பாடசாலை) ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் இன்று (02.11.2009) பி.ப. 3.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் கொக்குவில் இந்துமயானத்திற்கு தகனக் கிரியைகளுக்காக எடுத்துச் செல்லப் படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

K.K.S றோட்,
சம்பியன் லேன்,
கொக்குவில் கிழக்கு.

தகவல்:
சோ. சுந்தரலிங்கம் (மகன்)
(கிராம உத்தியோகத்தர் J/104)
சோ. இலட்சுமிகாந்தன் (மகன்)
(ஆசிரியர்)

(C-3637)

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 02.11.2009 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.